திருக்கோயில்

ஜனவரி & பிப்ரவரி 1996
விலை ரூ. 6-00



மயிலை அருள்மிகு திருவள்ளுவர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக திருவள்ளுவர் விழா 16-1-96 அன்று நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை, எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திருமிகு ஜெயக்குமார் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. உடன் உள்ளார்.

முகப்பு :

திருநள்ளாறு அருள்மிகு சனீஸ்வரர்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை—600 034,

தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :

கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

மாலை : 38	திருவள்ளுவர் ஆண்டு 2027 யுவ ஆண்டு தை-மாசி 1996 ஜனவரி-பிப்ரவரி விலை ரூ. 6—00	மணி : 1 & 2

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்,

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்.

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	..	ரூ.	18-00
ஓர் ஆண்டு	..	ரூ.	36-00
ஆயுள்	..	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்,

முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

பொருளடக்கம்

எங்கும் நீயே எல்லாம் நீயே
—திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.

அறநிலையத்துறைப் பணியாளர்களுக்குச் சலுகைகள்

ஆலய வழிபாட்டு அழகு உலா ரதத் திட்டம்:

கோயிலில் இதிகாசச் சொற்பொழிவுகள்
—சி. வசந்தி

விறகு விற்ற விமலன்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

திருப்பாலைவனம்
—கோதாவரிமைந்தன்

மாரியம்மன் வழிபாடு
—தி. இராசமாணிக்கம்

ஆழ்வார்களும் நாயன்மார்களும்
—திருமதி எஸ். பாலம்மாள்

ஓராறு முகனின் ஈராறு தலங்கள்
—டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்
தமிழ்மணி பன்னீர்செல்வம்
ஈ. ஆர். ஜோதி
ப. விஜயபாலன்

திருவருட்பாவில் சில முத்துக்கள்
—ச முத்துசாமி

பக்திநிலைகள்
—கவிஞர் பொள்ளாட்சி மணியன்

ரவீந்திரநாத் தாகூரின் கடவுள் சிந்தனைகள்
—திருமதி உமாராசன்

மழை பொழிவிக்கும் வள்ளல் பதிகங்கள்

வினைதீர்க்கும் வினாயகன் —ச.முத்துசாமி

கழுகு தொழும் வேதகிரி —பி.வி. கிரி

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

உ

எங்கும் நீயே!
எதிலும் நீயே!

திருமிகு ச. சாவர்க்கர்,, இ.ஆ.ப.,
ஆணையர்ளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-34

தில்லையில் வழிபட்டாலும் தெரிவது நீயே
நெல்லையில் தொழுதிட்டாலும் தெரிவது நீயே
காஞ்சியில் வணங்கிட்டாலும் தெரிவது நீயே
காளத்தியில் கும்பிட்டாலும் தெரிவது நீயே.

அருவமாய் இருந்து ஆதரிப்பவன் நீயே
உருவமாய் வந்து உதவிசெய்பவன் நீயே
உறவு கொண்டால் உயர்த்துபவன் நீயே
துறவு பூண்டால் தொல்லையறுப்பவன் நீயே.

மகனைத் தனக்கே குருவாக்கியவன் நீயே
குகனை இராமனுக்குத் தோழனாக்கியவன் நீயே
வேதியனாகி சுந்தரரை சோதித்தவன் நீயே
சோதியனாகி அப்பரைக் கரைசேர்த்தவன் நீயே.

அலைபாயும் நெஞ்சத்தை அடக்குவாய் நீயே
மலைமகளுடன் மஞ்சத்தில் அமர்ந்திருப்பாய் நீயே
மானுடக் காதலுக்குத் தூதுசென்றாய் நீயே
விறன்மிண்டர் மோதலுக்கு ஏதுவானாய் நீயே.

கணக்கிலாக் கோலத்தில் காட்சியளிப்பவன் நீயே
கண்ணப்ப நாயனாரிடம் கண்பெற்றவன் நீயே
எண்ணிலா உயிர்களுக்குத் தலைவன் நீயே
என்றுமே அழியாது இருப்பவன் நீயே.



அறநிலையத்துறை பணியாளர்களுக்குச் சலுகைகள்

அனைத்துக் கோவில் பணியாளர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

இது குறித்து தமிழக அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது :

கோரிக்கைகள்

தமிழ்நாடு முதுநிலை அல்லாத திருக்கோயில் ஊழியர் சங்கம், தமிழக முதல் அமைச்சருக்குச் சில கோரிக்கைகளை அனுப்பி வைத்து அவற்றை நிறைவேற்றிவைக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தது. அவர்களது கோரிக்கைகளை ஆய்வு செய்த தமிழக முதலமைச்சர் அவர்கள் 11 கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு உரியஆணைகளைப் பிறப்பித்துள்ளார்கள்.

அக விலைப்படி உயர்வு

1. முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்படுவதைப் போலவே, முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். 1 லட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ள கோயில்களில், 400 ரூபாய் வரை அடிப்படை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு 20 ரூபாயும், 400 ரூபாய்க்குக் குறைவாக அடிப்படை ஊதியம் பெறுகின்ற பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு 30 ரூபாயும், 5 லட்சத்தில் இருந்து 10 இலட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ள திருக்கோயில்களில் 500 ரூபாய் வரை அடிப்படை சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு, 20 ரூபாய் அகவிலைப்படி உயர்வும், 500 ரூபாய்க்கு குறைவாக அடிப்படை ஊதியம் பெறுபவர்களுக்கு 30 ரூபாய் அகவிலைப்படி உயர்வும் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். 45 ஆயிரம் திருக்கோயில் பணியாளர்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள்.

மருத்துவப் படி

2. முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்குவதைப் போல முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு மருத்துவப்படியை உயர்த்தி வழங்க தமிழக முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள். தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவப்படி 15 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளார். இதனால் 81 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

3. இந்து அறநிலைய ஆட்சித்துறை சட்டப்பிரிவு 46 (3) கீழ் வரும் திருக்கோயில்களின் பணியாளர்களுக்கு பணிக்கொடை, திருமணக் கடன், சிறப்பு ஊதியம் முதலியவற்றை வழங்குகின்ற அதிகாரம் இணை ஆணையருக்கும், துணை ஆணையர்களுக்கும் வழங்கப்படும்.

4. முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு 11 பணி நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு வழங்கவும், அதிகபட்சம் 120 நாட்கள் ஈட்டிய விடுப்பைச்சேமிக்கவும் அவ்வாறு சேமிக்கப்படும் ஈட்டிய விடுப்பில் ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் ஒப்படைப்புச்சம்பளம் பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதே சலுகை முதுநிலை அல்லாத திருக்கோயில்கள் பணியாளர்களுக்கு வழங்கி முதலமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளார்.

அதே போல முதுநிலை அல்லாத திருக்கோயில்களின் பணியாளர்களுக்கும் மருத்துவ விடுப்பு 180 நாட்கள் எனவும், நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 80 லட்சம் ரூபாய் செலவாகும். 20 ஆயிரம் திருக்கோயில் பணியாளர்கள் இதனால் பயனடைவார்கள்.

5. பணி ஓய்வு பெறும் காலத்தில் இறுதியில் ஒரு பணியாளரின் இருப்பில் இருக்கும் ஈட்டிய விடுப்பில் மேலும் 16நாட்கள் விடுப்பை ஒப்படைப்புச் செய்து,முழுப்பணப்பயன் பெறுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு மூன்று லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

ஒரு மாதச் சம்பளம்

6. திருக்கோயில் நிகர வருமானத்தில் பணியாளர்களின் சம்பள செலவு 40 விழுக்காட்டிற்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து முழு விலக்கு அளித்து, தற்போது பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு மட்டும் அவ்வப்போது அறிவிக்கப்படும் சம்பள உயர்வு மற்றும் சலுகைகளை அனைத்துப் பணியாளர்களுக்கும் கிடைத்திட முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

7. திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரம் பணி செய்கின்ற முதுநிலை கோயில் பணியாளர்களுக்கு அனுமதித்துள்ளது போலவே, முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் திருவிழா காலங்களில் வருடத்திற்கு ஒரு மாதம் சம்பளம் அல்லது ரூ. 1000 இதில் எது குறைவோ அதை வழங்க மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கூடுதல் ஊதிய உயர்வு

8. முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு அடிப்படைக் கல்வித் தகுதியைக் காட்டிலும் கூடுதலாக படித்துப் பட்டம்பெற்று இருப்பின். ஒரு ஊதிய உயர்வு சிறப்புப்படியாக

“ஓராறு முகனின் ஈராறு திருத்தலங்கள்”

என இவ்விதழில் வெளிவந்துள்ள கட்டுரையை நால்வர் அறிஞர் பெருமக்கள் எழுதியுள்ளனர்.

அவர்கள் :

டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

தமிழ்மணி பன்னீர் செல்வம்

ஈ. ஆர். ஜோதி

டாக்டர் ப. விஜயராகவன்

வழங்கப்பட்டு வரும் சலுகை இனி முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கும் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 36 இலட்சம் ரூபாய் செலவாகும். 15ஆயிரம் பேர் இதனால் பயன் பெறுவார்கள்.

சிறப்பு ஊதியம்

10. திருக்கோயில்களில் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் மகாசம்ப்ரோட்ஷணம் போன்றவை செய்யும்போது அதற்காக கூடுதல் பணி செய்யும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு ஒரு மாதம் சம்பளம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும். இது திருப்பணித் தொகையிலிருந்து செலவிடப்படும்.

11. திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகை முழுவதையும் விரைவில் வழங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணி புரிந்து வருகின்ற 45 ஆயிரம் ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுகின்ற இத்திட்டங்களை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என அரசு அதிகாரிகளுக்கும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அதிகாரிகளுக்கும்ஆணை வழங்கி உள்ளார்கள்.

மேற்கண்டவாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆலய வழிபாட்டு அழகு உலா ரதத் திட்டம்

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அறிமுகப் படுத்தியுள்ள இணையிலா இரு அழகு உலா ரதத் திட்டங்கள்

புண்ணிய திருத்தல யாத்திரை புரிந்து மண்ணிலே விண்ணகம் காண்போம் வாரீர்!

''பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்''.

என்று அப்பர் பாடியது போல்
பரமானந்த சுகம் பெற வாரீர்! வாரீர்!

1. மதுரை வழிபாட்டு அழகு உலா ரதத் திட்டம்:

மதுரை மற்றும் அதனைச் சுற்றிலும் உள்ள பிரசித்தி பெற்ற கீழ்க்காணும் திருக்கோயில்களை ஒரே நாளில் சிறந்த முறையில் தரிசித்து மகிழலாம்.

1. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை
2. அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில், திருமோகூர்
8. அருள்மிகு திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருவாதவூர்
4. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்
5. அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம் (பழமுதிர்ச் சோலை)
6. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
7. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

உயர்ந்த ரக குளிர்சாதன வசதியுடன் கூடிய, 35 சொகுசு இருக்கைகள் கொண்ட பேருந்து காலை 7.00 மணிக்குப் புறப்பட்டு, மேல்காணும் அனைத்துத் திருக்கோயில் தரிசனத்தையும் முடித்துக் கொண்டு இரவு 7.15 மணிக்குப் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும்.

சிறப்பு வழிபாட்டுக் கட்டணம் காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவுக் கட்டணமும் சேர்த்து, ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய பயணக் கட்டணம் ரூ. 150.

2. தஞ்சை வழிபாட்டு அழகு உலா ரதத் திட்டம்

தஞ்சையைச் சுற்றியுள்ள பிரசித்தி பெற்ற கீழ்க்காணும் நவகிரகத் திருக்கோயில்களை ஒரே நாளில் தரிசித்து மகிழலாம்.

1. அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், திங்களூர் (சந்திரன் ஸ்தலம்)
2. அருள்மிகு சூரியநாராயணசுவாமி திருக்கோயில், சூரியனார்கோயில் (சூரியன் தலம்)
3. அருள்மிகு அக்னீஸ்வரர் சுவாமி திருக்கோயில், கஞ்சனூர், (சுக்கிரத்தலம்)
4. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில் (செவ்வாய்தலம்)
5. அருள்மிகு சுவேதாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில், திருவெண்காடு (புதன் தலம்)
6. அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், கீழப்பெரும்பள்ளம், (கேதுதலம்)
7. அருள்மிகு தர்ப்பாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில், திருநள்ளாறு (சனீஸ்வரன் தலம்)
8. அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம் (இராகுதலம்)
9. அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயில், ஆலங்குடி, (குருஸ்தலம்)

உயர்ந்த ரக குளிர்சாதன வசதியுடன் கூடிய 35 சொகுசு இருக்கைகள் கொண்ட பேருந்து காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு, மேற்காணும் திருக்கோயில்களில் தரிசனத்தை முடித்துக் கொண்டு இரவு 8-30 மணிக்குப் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும்.

சிறப்பு வழிபாட்டுக் கட்டணம், காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவுக் கட்டணமும் சேர்த்து ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய பயணக் கட்டணம் ரூ. 250.

மேலும் விவரங்களுக்கும், முன் பதிவுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1. மதுரை வழிபாட்டு அழகு உலா ரதத் திட்டம்:—

1. ஹோட்டல் தமிழ்நாடு.
அழகர் கோவில் சாலை
மதுரை—625 002.

2. ஹோட்டல் தமிழ்நாடு
மேல வெளி வீதி
மதுரை—625 001.

2. தஞ்சை வழிபாட்டு அழகு உலா ரதத் திட்டம் :

1 யூனிட் 1 காந்திஜீ சாலை
தஞ்சாவூர்—613 001

2. யூனிட் 2, திருச்சிராப்பள்ளி சாலை
தஞ்சாவூர்—613-007.

கோயில்களில் இதிகாசச் சொற்பொழிவுகள்

சீ. வசந்தி எம்.ஏ, எம்.ஃபில்.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

உலக நாடுகள் அனைத்திலும் பல கால வெள்ளத்தில் அழியாத காவியங்கள் இன்றும் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளன. அத்தகையவற்றில் இந்தியாவில் இந்திய மக்களின் நாடி நரம்புகளில் ஊடுருவி நிற்பவை இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் ஆகும். பாரத நாட்டில் அனைத்து மூலை முடுக்குகளிலும் இக்கதைகள் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன. பாரத மக்களின் இரண்டு கண்களான இவ்விதிகாசங்களை பண்டைய தமிழரும் போற்றியுள்ளனர். இதற்குச் சான்றாகத் திகழ்பவை கல்வெட்டுக்களும், சிற்பங்களும், ஓவியங்களும் ஆகும்.

பண்டைய தமிழகத்தில் இக்காவியங்களைப் பொதுமக்கள் படிப்பதற்கும், கேட்பதற்கும் பல தானங்கள் அளிக்கப்பட்டது என்ற செய்தி, தமிழகத்தில் உள்ள கல்வெட்டுக்களால் புலனாகிறது. இவற்றில் காணப்படும் கதைச் செய்திகளும், நிகழ்ச்சிகளும் கோயில்களில் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் தேர் வாயிற் கதவு ஆகியவற்றில் செதுக்கப்பட்டும், தீட்டப்பட்டும் காணப்படுகின்றன.

சென்னையை அடுத்துள்ள காஞ்சிபுரத்தின் அருகிலுள்ள கூரம் என்ற இடத்தில் கிடைத்த கூரம் செப்பேட்டில், முதலாம் பரமேச்வரன் என்ற பல்லவ மன்னன் தான் கட்டிய கூரம் என்ற ஊரில் வித்யா-விநீத பல்லவ பரமேச்வரகிருகம் என்ற சிவன் கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலில் பாரதம் வாசிக்க என மணவிற் கோட்டத்தில் இருந்த பன்மாணா நாட்டில்உள்ளபரமேச்வர மங்கலம் என்ற ஊரினை தானமாக அளித்துள்ளான். இவன் இவ்வூரினை இருபத்தைந்து பங்குகளாக்கி அதில் ஒரு பங்கை கூரம் கோயிலில் பாரதம் வாசிக்க ஒதுக்கியுள்ளான்.

கி.பி. 992-ஆம் ஆண்டில், சேரமன்னனான இரவிவர்ம பாஸ்கரன், மகாபாரதம் ஓதுவதற்கான தானம் அளித்த செய்தி, திருக்கதிர் தானம் என்ற ஊர்க் கல்வெட்டில் காணப்படுகிறது. மேலும் இவ்வாறு வழங்கப்படும் தானங்களை அவை வழங்கப்பட்டக் காரணத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு பயன்படுத்தத் தவறினால் அபராதத் தொகையாக 12 கழஞ்சும், 5 காணமும் வசூலிக்கப்படடது என்றும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில், பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனி என்ற ஊரில் இருந்த கல்விச்சாலையில், வேதங்களும் இதிகாசங்களும் கற்பிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்த ஆசிரியர்கள், இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களை மாணவர்களுக்கு மட்டுமல்லாது பொதுமக்களும் அறியச் செய்ய வேண்டும் எனக் கட்டாயமாக்கப்பட்ட செய்தி இவ்வூர் கல்வெட்டின் மூலம் தெரிய வருகின்றது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன் மாதேவியில் உள்ள பாண்டிய மன்னன் குலசேகரனின் காலத்தில், மகாபாரதம் படிக்க வழங்கப்பட்டகொடைக்கு 'மகாபாரதவிருத்தி' என்ற பெயரே வழங்கப்பட்டுள்ளது. சில கல்வெட்டுக்களில் பாரதம் வாசிக்க வழங்கப்பட்ட கொடைகளுக்கு பாரதப்புரம் அல்லது பாரதப் பாங்கு என்றும் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டகொடைகளுக்கு வரி வசூலிப்பிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டிருந்தது எனவும் அறியப்படுகிறது.

தற்காலத்தில் உள்ளதுபோல் அக்காலத்தில் பொழுது போக்கு அம்சங்கள் மிகக் குறைவு. அவர்கள் தம் ஊரில் உள்ள கோயில்களில் நடைபெற்ற விழாக்களையும் கலை நிகழ்ச்சிகளையும், பட்டிமன்றங்களையும் விளக்கவுரைகளையும் பங்கேற்கவும் கண்டு களிக்கவும் கேட்டு மகிழ வேண்டிய சூழ்நிலையில் இதிகாசங்களும், புராணங்களும், தொடர்ந்து மக்களின் ஆதரவுடன் நிலைத்திருக்க ஒரு காரணமாகக் கோயில்கள் திகழ்ந்துள்ளன என்றால் அது மிகையாகாது. O

விறகு விற்ற விமலன்



கவிஞர் டாக்டர் தி. அமிர்தலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.

திருவிளையாடற் புராணமும், திருத்தொண்டர் புராணமும் சைவத்தின் இரு கண்களாகப் போற்றப்படுகின்றன.. அடியவர்களிடம் தமக்குள்ள அன்பைக் காட்ட சிவபெருமான் பட்ட கஷ்டங்களை (இறைவனுக்கு அவை திருவிளையாடல்கள்) விவரிப்பது திருவிளையாடற் புராணம். சிவபெருமானிடம் தமக்கு உள்ள பக்தியைக் காட்ட அடியவர்கள் பட்ட கஷ்டங்களை விவரிப்பது திருத்தொண்டர் புராணம்.

பக்தர்கள் தம்மீது பொழியக் கூடிய அன்பிற்கு அடிமை ஆகிவிடுகிறார் எல்லாம் வல்ல பரம் பொருளாகிய சிவபெருமான். திருமாலும் பிரமனும் தாம் தாமே உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்புக் கொண்டு திகழ்ந்தபோது, திருமாலைத் திருவடியைக் காணவும் பிரமனைத் தம்முடைய திருமுடியைக் காணவும் கூறி விண்ணுக்கும் எட்டாத பேருருவம் கொண்டு திகழ்ந்த சிவபெருமான் திருமாலுக்குத் திருவடியைக் காட்டவும் இல்லை: பிரமனுக்குத் திருமுடியைக் காட்டவும் இல்லை. இவ்வாறு திருமாலுக்கும், பிரமனுக்கும், தேவர்களுக்கும் கூட அவர்களுடைய ஆணவம் காரணமாக எட்டாத பரம்பொருளாய்த் திகழும் சிவபெருமானே, அன்பின் பிழம்பாகத் திகழும் அடியவர்களுக்கு அவர்களுடைய அன்பிற்கு ஆட்பட்டுத் தொண்டு செய்யும் சேவகனாகவே மாறி விடுகின்ற விந்தையைக்காணுகின்றோம்.

அடியவர்கள் உருத்திராட்சத்தையே ஆரமாக அணிந்தவர்கள். திருநீற்றையே ஐஸ்வரியமாகப் பூசுபவர்கள். துவராடையையே பட்டாடையாக அணிபவர்கள். சிவத்தொண்டே அவர்களுக்கு உயிர். அவர்கள் சிவபெருமானையும் பக்திக்காக வழிபடுவதன்றிப் பயன் கருதி வழிபடுவதில்லை. ஓடும், செம்பொன்னும் அவர்களுக்கு ஒன்றுதான். திருவடிப் பேற்றிற்காகவும்கூட அவர்கள் சிவபெருமானை வணங்கிடாமல் அன்பு ஒன்றிற்காகவே-பக்திக்காகவே வணங்கி வழிபடும் பேரருள் உள்ளம் படைத்தவர்கள். இத்தகைய அடியவர்களைத்தான் சேக்கிழார் பெருமான் தம் திருத்தொண்டர் புராணத்தில்,

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்க நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

''ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலா தொன்றிலார்
ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ''

என்று படம் பிடித்துக் காட்டுகிறார்.

இத்தகைய அன்பர்களுக்குச் சோதனை வருமானால் அவர்கள் இறைவனிடம் முறையிட்டால் போதும். கேட்டதும், சிவபெருமானே அடியவர்களைக் காத்திட ஓடோடி வருகிறான். அருமறைகளும் காணாத தம் பூங்கமலப் பாதங்கள் பூமியில் தோய நடந்தும் வருகிறான். பாணபத்திரர் என்ற அடியவரைக் காப்பதற்காகப் பூமியில் பாதங்கள் தோய நடந்து வந்த பரமன், தம்முடைய திருமுடியில் விறகினையும்கூட சுமந்து எப்படி எல்லாம் கஷ்டப்பட்டார் என்பதைத்தான் நாம் இப்பொழுது விரிவாகக் காணப் போகிறோம்.

வடநாட்டிலே மிகச் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்த ஏமநாதன் என்ற பாகவதன், தென்னாட்டிற்கு வருகை புரிந்தான். அவன் மதுரைக்கு வந்தபோது பாண்டிய மன்னனும் அவனைத் தன்னுடைய அரசவைக்கு வரவழைத்துப் பாடவைத்து, அதனைத் தன் காதாரக் கேட்டு மனமகிழ்ந்தான். உயர்ந்த பட்டாடைகள், பொன் ஆபரணங்கள், தானியங்கள் அனைத்தையும் வழங்கி ஏமநாதனுடைய இசைச் சிறப்பைப் பாராட்டினான் பாண்டிய மன்னன். ஏமநாதனுக்கு இதனாலும் மிகுந்த ஆணவம் உண்டானது. தன்னிடம் போட்டியிட்டுப் பாடி வெல்லக் கூடிய இசைவாணர்கள் இந்தப் பாண்டியநாட்டிலே கிடையாது என்று ஏமநாதன் ஆணவமாகப் பேசிய செய்தி பாண்டிய மன்னனுடைய காதுகளுக்கு எட்டியது. எட்டிய உடனே தன்னுடைய சேவகர்களை அழைத்துப் பாணபத்திரரை அழைத்து வருமாறுகட்டளையிட்டான்.

''மீனவன் வரிசை பெற்ற செருக்கினும்
விருதினாலும்
மானமேல் கொண்டு தன்னோடு இன்னிசை
பாடவல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங்கில்லெனத்
தருக்கும் செய்தி
கோனறிந்து உழையர்க் கூவிப் பத்திரர்
கொணர்தி என்றான்''
(விறகு விற்ற படலம் 5)

தக்கன் தனக்கு நிகர் யாருமில்லையெனத் தருக்கினான். தலை இழந்தான். பிரமன் குமரனுக்கு என்ன மரியாதை கொடுப்பது என்று தருக்கினான். சிறை இருந்தான். இங்கே ஏமநாதன் முத்தமிழும் சிறக்கும் மாமதுரையிலே தன்னோடு இசை பாடவல்ல பாணர் இல்லை எனத் தருக்கிட அதைப் பார்த்துக்

கொண்டிருப்பாரா சோமசுந்தரக் கடவுள்? ஏமநாதனின் ஆணவத்தை அடக்கிடத் திருவுளம் கொண்டார். அதைத் தம்முடைய பக்தரான பாணபத்திரரைக் கொண்டு நிறைவேற்றி அவருக்குப் பெருமை அளித்திட விழைந்தார். அதனால் பாண்டிய மன்னனைக் கொண்டு பாணபத்திரரை அழைப்பித்து, ஏமநாதனோடு போட்டியிட்டுப் பாட வேண்டிய கடமையையும் மன்னரைக் கொண்டே பாணபத்திரருக்கு அறிவிக்கவும் செய்தார்.

யாருடைய உள்ளத்தில் இறைவன் இருக்கிறானோ அவர்களிடம் ஆணவம்சிறிதும் தலைகாட்டுவதில்லை. இதோ பாணபத்திரர் எவ்வளவு பணிவாக மன்னனுக்கு விடை பகர்கிறார், பாருங்கள்:

''தென்னவர் பெரும! யானுன் திருவுள
வலனுங்கூடல்
முன்னவன் அருளும் கூட்டும் முயற்சியால்
முயன்றுபாடி
அன்னவன் விருது வாங்கி அவனை
வீறழிப்பன்''
(விறகு விற்ற படலம் 7)

இறைவன் திருவருள் கூட்ட முயன்றுபாடி ஏமநாதனை வெல்வேன் என்று சொல்கின்ற பாணபத்திரர் அன்றோ பண்பின் வடிவம். அன்பின் வடிவமாகிய ஆண்டவன் அவருக்கு அருள்புரிந்திடா திருப்பானா? அதனால்தான் பாணபத்திரர் வந்து தொழுது, 'சோமசுந்தரக் கடவுளே! சரணம் சரணம்! காத்திட இப்பொழுதே வரணும், வரணும்! ஏமநாதரின் சீடர்கள் சிலர் மதுரைத் தெருக்களில் பாடியவாறு செல்லக் கேட்டேன் சுவாமி! 'அவர்களுடைய பாடலுக்கு ஈடாகவே என்னால் பாட முடியாது என்றால், நான் எப்படி ஏமநாதரிடம் போட்டிப் போட்டுப் பாடுவேன்? என்னால் மன்னவருக்குப் பழி நேரலாமோ? முத்தமிழுக்கு ஒரு குறை நேரலாமோஇறைவா? நானோ எல்லாம்வல்ல உமக்குப் பழிவரக் காரணமாவது! அதற்காகவா நான் இத்தனைக் காலமும் உம்மிடத்தில் பக்தி செலுத்தியது? துயர் உறும் இந்த அடியவனை அருள்புரிந்து காப்பாற்றிட வேண்டும் சுவாமி! உம் பொன் திருவடிகள் அல்லால் எனக்கு வேறு புகலிடம் இல்லை'' என்று இறைவரிடம் முறையிட்டு வேண்டிடும்போது, அதனைக் கேட்ட சோமசுந்தரக் கடவுள் உடனே, பாணபத்திரருக்கு அடிமையான விறகாள்போல வேஷமிட்டு, தம் மெய் வருந்த விறகினையும்கூட தலையில் சுமந்து மதுரை மாநகரின் தெருக்களில் வலம் வருகிறார் என்றால் அவர்தம் அன்பின் பெருமையை அளவிட ஏதும் அளவுகோல் நம்மிடம் உள்ளதா என்ன?

அருமறைகளும் அறியவொண்ணாத தம் திருவடிகளில் பழையதான செருப்புகளை அணிகிறார். அமுத கிரணங்களைப் பொழியும் பிறைச்சந்திரன் அலங்கரித்த தம் திருமுடியில் பழைய கந்தலாடையைச் சும்மாடாகச் சுருட்டி வைத்து, சுமைமிக்க விறகுகளையும் சுமந்து

மதுரை வீதிகளில் 'விறகோ விறகு' எனக் கூறி விற்று வருகிறார் சோமசுந்தரேஸ்வரர். அவருடைய முகமெல்லாம் வேர்வை வழிகிறது. ஈரேழு புவன பாரத்தையும் சுமக்கின்ற அவருக்கு விறகுக் கட்டின் பாரத்தைச் சுமக்க முடியவில்லை. கற்சுமை தாங்கியின் மேற் விறகுக் கட்டையை வைத்து, மடுநீரைப் பருகி சற்றே இளைப்பாறி, வந்த பணியை விரைந்து செய்து முடிக்க வேண்டுமே! அதனால் விறகுக் கட்டின் சுமை தலையை அழுத்திட அதனைத் தாங்கிட இயலாமல், அடிக்கடி இருகைகளாலும் தலைக்கு மேலே தூக்கிச் சுமந்தவாறும் விரைந்து வருகின்ற இறைவரின் விறகாள் கோலத்தை பரஞ்சோதி முனிவர் வருணித்திருக்கும் மிகச் சிறந்த பாடலை நாமும் படித்து மகிழ்வோமே!

''திருமுகத்துவேர்அரும்ப வாய்குவித்து
ஒலிசெய்ய
வருவர் கற்சுமைதாங்கிமேற் சாத்துவர்
மடுநீர்
பருகுவார் எடுப்பார் தலைவெம்மை வேர்
பறிய
இருகையாலும் அடிக்கடி எடுத்தேந்தி ஊர்
புகுவார்''
(விறகு விற்ற படலம் 16)

இவ்வாறு பகலெல்லாம் மதுரைமாநகரின் மூலை முடுக்குகள் தோறும் அலைந்து திரிந்து விறகுவிற்று அவதிப்படுகிறார் இறைவர். தாமரை மலர்கள் கூம்பிட, ஆம்பல் மலர்கள் மலர்ந்திட மாலைப்பொழுதும் மலர்கின்றது. பறவைகள் எல்லாம் தத்தம் கூடுகளை நாடிப் பறந்து செல்கின்றன. முயற்கறையைத் திலகமாகக் கொண்ட நிலவு முகத்துடன் மாலையாகிய மங்கை, செவ்வானத்தை ஆடையாகவும், இருளைக் கூந்தலாகவும், நட்சத்திரங்களை ஆரங்களாகவும் அணிந்து அழகுபட வந்தாள் என மாலை நேரத்தை வருணித்திருக்கும் பரஞ்சோதியாரின் பாடல் இங்குக் குறிப்பிடத் தக்கது.

''திங்கள் வாணுதல் முயற்கறைத் திலகமும்
சிவந்த
மங்குல் ஆடையும் மயங்கிருள் ஓதியுஞ்
வான்மீன்

பொங்கும் ஆரமும் பொலிந்துதன் கொண்
கனைப் பொருப்பன்
மங்கை தேடிவந்தாள் என வந்தது மாலை.''
(விறகு விற்ற படலம்22)

சிவபெருமானைத் தேடி பார்வதிதேவி யார் வந்ததைப் போல மாலை வந்தது என இப்பாடலில் பரஞ்சோதியார் பாடியிருப்பதில் உள்ள பாநயம் எண்ணி இன்புறுதற்குரியது. பாணபத்திரரின் முறையீட்டினைக் கேட்ட வுடன் சிவபெருமான் தம்முடைய தேவியா ரிடமும் கூடக் கூறிக்கொள்ளாமல் பாணபத் திரரின் துயரைக் களைந்திட உடன் புறப்பட்டு வந்திருப்பது கொண்டு இறைவர் அடியாரிடம் காட்டக் கூடிய அன்பே, அவர்தம் துணைவி யாரிடம் காட்டக் கூடிய அன்பையும் விட விஞ்சி இருப்பதை உணர்த்துகிறது அல்லவா! அதனால்தானே சிவபெருமானைத் தேடி பார்வதி தேவி வந்ததைப் போல மாலை வந்தது எனப் பரஞ்சோதியார் பாடி, இறைவர் அடியார்கள் மேல் கொண்டுள்ள அன்பின் உயர்வை வியந்திருக்கிறார்.

இறைவர் அடியவர்பால் கொண்டுள்ள அன்பு அளவிடற்கரியது என்பதற்கு இன்னும் ஒரு பாடலையும் நாம் காணலாம். மாலை வந்துற்ற நேரத்தில் இறைவர் மதுரையின் தெருக்கள் எல்லாம் அலைந்து திரிந்து விட்டு ஏமநாதன் மாளிகைக்கே வந்து சேர்ந்து புறந் திண்ணையில் அமர்ந்து இளைப்பாறுகிறார். உடன் தாம் வந்த பணியையும் முடிக்கும் வகை யில் தம் திருவாய் மலர்ந்து சுருதிக் கூட்டிப் பாடுகிறார். அப்பாடலை மாளிகைக்குள் இருந்து கேட்ட ஏமநாதன் வாசலுக்குவிரைந்து வந்து விறகாளாய் இருந்த இறைவரிடம், ''நீ யார்!'' என்று கேட்கிறான். அப்பொழுது இறைவர் பாணபத்திரனுடைய அடிமை என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறார். திருமாலையும், பிரமனையும், இந்திரனையும் தேவாதிதேவர்கள் அனைவரையும் தம்முடைய அடிமையாகக் கொண்ட ஆண்டவர், தம்மைப் பாணபத்திரரின் அடிமை என்று கூறிக் கொண்ட அன்பின் திறத்தைப் பரஞ்சோதி முனிவர் தம்முடைய உளம் நெகிழ்ந்து

''வண்டறை கொன்றையான் முன்வந்து
நீயாரை என்றான்
பண்தரு விபஞ்சி பாணபத்திரன்அடிமை
என்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன்
முதல் மற்றேனை
அண்டரும் தன் குற்றேவல் அடிமையாக்
கொண்ட அம்மான்''
(விறகு விற்ற படலம் 24)

என்று பாடியிருக்கக் காண்கிறோம்.

பாணபத்திரரைக் காப்பதற்காகத் தம் முடைய தேவியிடம் கூடக் கூறிக் கொள்ளா மல் வந்த பேரன்பின் வடிவினர்தாம் சிவ பெருமான். அவர் பாணபத்திரரின் ஆசான் என்று தம்மை ஏமநாதரிடம் அறிமுகப்படுத்திக்

கொண்டிருக்கலாம். அவ்வாறு பாணபத்திர ரின் குருநாதராகத் தம்மை கூறிப் பின் பாடி ஏமநாதனை விரட்டிப் பாணபத்திரரைக் காப்பாற்றி இருக்கலாம். அடிமை என்று கூறிக் கொண்டாக வேண்டிய அவசியம் இல்லாத போதும்கூட தம்மைப் பாணபத்திரரின்அடிமை என்று கூறிக் கொண்டார் என்றால், அவர் தம் அன்பின் பெருமையை எப்படி உரைப்பது? இன்னும் ஏமநாதனிடம் என்ன உரைத்தார் சிவபெருமான்? 'பாணபத்திரரிடம் இசைகற்ப வர் அநேகர். நானும் ஆசையோடு போய் அவரிடம் கற்றேன். எனக்கு வயதாகிவிட்டது இசை இனி வராது. கற்றுத்தந்தவரைபோதும் போ' என்று என்னை பாணபத்திரர் விரட்டி விட்டுவிட்டார். நானும் வயிறு வளர்த்தாக வேண்டும் என்பதற்காக விறகு வெட்டி அதை விற்றுப் பிழைத்து வருகிறேன். அவரிடம் கற்றுக் கொண்ட பாடலை அவ்வப்போது பாணபத்திரரிடம் பாடுவேன்'' என்று கூறி அடிமை என்று தம்மை கூறிக் கொண்ட அன்பின் திறத்தாலே நம்மை எல்லாம் அடிமை ஆக்கிக் கொண்டு விடுகிறார் சிவ பெருமான்.

பாடகர்கள் பாடும்போது உடல் குற்றமும், பாடல் குற்றமும் இல்லாமல் பாடவேண்டும். வயிறு குழிதல், அழுமுகம் காட்டல், புருவம் ஏறல், தலை நடுங்குதல், கணகள் ஆடல், மிடறு வீங்கல், வாயை அதிகமாகத் திறத்தல் ஆகியன உடல் தொழில் குற்றங்கள். அதிகச் சத்தம் போடுதல், அவையினர் காதுகளுக்கும் கேட்காமல் வாய்க்குள் முணுமுணுத்தல், பொருள் மயங்குமாறு சொற்களை உச்சரித்தல் முதலாயின பாடல் தொழில் குற்றங்கள். இத் தகைய குற்றங்களைப் பாவாணர்கள் பாடும் போது செய்தல்கூடாது என்று உணர்த்தி, வேதகீதர் எழுதிய சித்திரத்தைப்போலத்தாம் அமர்ந்து, செய்யுள் ஓசை, இசையோசை தவ றாமல் இசைவிருந்தை வழங்கிப் பாடினார் என்று விவரிக்கின்றார் பரஞ்சோதியார்.

இறைவர் பாடிய பாடலைத் தேவர்கள் எல்லாம் கேட்டுத் தம்முடைய அழுதமயமாகிய யாக்கை, இசைமயமாகிவிடத் தம்மை மறந்து இரசித்தார்கள். அண்டசராசரங்கள் அத்தனை யும் இறைவரின் இசையை கேட்டு மகிழ்ந்தன. மரங்கள் ஆடவில்லை. கடல் அலைகளும்

ஆடவில்லை. கொட்டுகின்ற அருவிகளும் கொட்டவில்லை. நதிகளும் துள்ளவில்லை. இறைவரின் இசையை மாந்திய அசையும் பொருட்கள் அனைத்தும் அசையாச் சித்திர மாகி விட்டன என்கிறார் பரஞ்சோதிமுனிவர்.

''பாணர்தம் பிரானைக் காப்பான் பருந்தொடு
நிழல் போக்கன்ன
யாழ்நரம்பிசை பின் செல்ல இசைத்த
இன்னிசைத் தேன் அண்ட
வாணர்தம் செவிக்கால் ஓடி மயிர்த்துளை
வழியத்தேக்கி
யாணர் இன்னமுத யாக்கை இசைமயம்
ஆக்கின்றன்றே''

''தருக்களும் சலியா முந்நீர்ச் சலதியும்
கலியா நீண்ட
பொருப்பிழி யருவிக் காலு நதிகளும் புரண்டு
துள்ளா
அருட்கடல் விளைத்த கீத இன்னிசை அமுத
மாந்தி
மருட்கெட அறிவன் தீட்டி வைத்த சித்திரமே
ஒத்த''

(விறகு விற்ற படலம் 36-37)

சிவபெருமானின் இசையமுதைப் பருகிய பிரமன், திருமால், இந்திரன் எல்லோரும்கூட தம் நிலை மறந்தார்கள் என்கிறார் பரஞ் சோதி முனிவர், எப்பொழுதும் தாமரைமலரில் அமர்ந்திருப்பவராகிய பிரமன், சிவபெரு மானின் பாதமாகிய தாமரை மலரின் கீழ் உறைபவனாகத் தம் தாமரை மலரை நீங்கி வந்து விட்டார். எப்பொழுதும் பாற்கடலில் வீற்றிருப்பவராகிய திருமால், இறைவரின் பாட்டினைக் கேட்டு பரமானந்தக் கடலில் மூழ்கியவராய், பாற்கடலை மறந்து போனார். ஆயிரம் கண்களைக் கொண்ட இந்திரன், தனக்கு இறைவரின் கானம் பருக ஆயிரம் காதுகள் இல்லாமல் போனதே என்று கவலை மிகக் கொண்டான்.

''போதுளான் பரமன் பாதப் போதுளான்
ஆனான் வேலை
மீதுளான் பரமானந்த வேலை மீதுளான்
ஆனான்
தாதுளான் கமலக் கண்போல் சதமகன் உடலம்
எல்லாம்
காதுளான் அல்லேன் என்றான் கண்ணுளான்
கானம் கேட்டு''.

(விறகு விற்ற படலம், 39)

இவ்வாறு இறைவரின் இன்னிசைஅமுதை உண்ட தேவர்கள் மயங்கினர். முனிவர்கள் மயங்கினர்; மனிதர்கள் மயங்கினர். பறவைகள், விலங்குகள், தாவரங்கள் எல்லாம்கூட அசைவற அடங்கிப் போக, அண்டமெல்லாம் இறைவரின் ஏழிசைக்கு ஆட்பட்டு, ஊழிக் காலத்தில் எல் லாம் ஒடுங்கிவிடும் ஒருநிலையைக் காட்டி நின்றன. ஏமநாதனும் தன்னை மறந்து மயங்கியிருந்தவன் கண்ணைத் திறந்து பார்க்க, பாணபத்திரரின் அடிமை எனத் தம்மைக் கூறிக் கொண்ட விமலர் அங்கே இல்லை. வந்த பணி முடிந்ததென மாயமாகி விட்டிருந்தார் இறைவர்.

விறகாளாய் வந்து இசை பாடியவர் எல் லாம் வல்ல இறைவரே என்பதை அறிந்து கொள்ளும் ஞானம் ஏமநாதனுக்கு இல்லை. அவன் பாணபத்திரரால் விலக்கப்பட்ட ஒரு விறகாளின் பாட்டேதேவகானமாக இருக்கு மானால், பாணபத்திரரின் பாட்டு எப்படிப் பட்டதாக இருக்கும்? அவருடன் தாம் போட்டியிட்டுப் பாடுதல் இயலுமா? பாண்டிய மன்னனின் முன்னாலும், பழம் மதுரைமக்கள் முன்னாலும் தான் அவமானப் பட்டல்லவா தலை குனிய நேரிடும் என்று எண்ணி எண்ணி வருந்தி மனம் துடித்தான். அவமானத்தி லிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மதுரையை விட்டு இரவோடு இரவாக ஓடி விடுவதே சிறந்த வழி என்று எண்ணியவுடன் தன் எண்ணத்தைச் செயற்படுத்தவும் செய் தான். தன்னுடைய ஆட்கள் அனைவரையும் அழைத்து, 'உடனே எல்லோரும் ஓடுங்கள்' என்று உத்திரவிட்டான். 'பரிசுப் பொருட் களையும் இசைக் கருவிகளையும் எடுத்துச் செல்ல வாகனங்கள் இல்லையே!'' என்றார்கள் ஏமநாதனின் ஆட்கள், 'வேண்டியதில்லை. முடிந்தவற்றைத் தூக்கிச் செல்லுங்கள். மற்ற வற்றை விட்டு ஓடுங்கள்' என்று ஏமநாதன் கூற அவனுடைய பணியாட்களும் முடிந்த ஒரு சில பொருட்களை மட்டுமே கையில் எடுத்துக் கொண்டவர்களாய் இரவோடு இர வாக மதுரையைவிட்டுப் பறந்து சென்று விட் டார்கள்.

பாணபத்திரரோ, தம் பொருட்டு இறை வர் நிகழ்த்திய திருவிளையாடல் ஏதும் அறி யாமல் மதுரைச் சொக்கநாதரிடம் தம் மன பாரம் முழுவதையும் சுமத்திவிட்டு நிம்மதி யாக இறைவர்விட்ட வழி என்பதாக உறங்கிக் கொண்டிருந்தார். அவர்தம் கனவில் தோன் றிய இறைவர் 'பாண பத்திர! உன்னுடைய அடிமையாக-விறகாளாகச் சென்று ஏம நாதன் முன்பாடி, அவனை வென்று நின் வேண்டுகோளை நிறைவு செய்தோம்' என்று கூறியருளினார். அக்கணமே துயில் விழித் தெழுந்த பாண பத்திரர், உடனே மீனாட்சி சோம சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று, தொழுது, இறைவரின் திருவருளைப் பல வாறாகப் புகழ்ந்து போற்றுகிறார். 'சுவாமி! எளியேன் பொருட்டுத் தாங்கள் கொடிய

காட்டிற்குச் சென்றீர்களே! விறகை வெட்டியும் கட்டியும் சுமந்தீர்களே! தாமரைப் பாதங்கள் நோக மதுரை தெருக்களில் நடந்தீர்களே! இந்த அடிமைக்கு அடிமை என்று அடாத சொல்லைப் பகர்ந்தீர்களே! நான் உம்மிடம் குறையிரந்தல்லவா இவ்வளவு கஷ்டங்களுக்குத் தங்களை ஆளாக்கி விட்டேன்'' என்று பாணபத்திரர் போற்றித் துதிக்கிறார்.

''கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ முண்டகத் தாள்கள்
நொந்திடவந்து
அடியனேன் பொருட்டு அடாதசொற் பகரவோ
வஞ்சக்
கொடியனேன் குறைஇரந்தவா விளைந்ததே
குற்றம்''

''நெடியனே முதல் வானவர் நெஞ்சமும் சுருதி
முடியனேசமும் கடந்தநின் மூண்டகப் பாதம்
செடியனேன் பொருட்டாக இச் சேணிலந்
தோய்ந்த
அடியனேற் கெளிதாயதோ ஐயநின்பெருமை'
(விறகு விற்ற படலம் 54-55)

என்று பரஞ்சோதி முனிவர் பாணபத்திரர் இறைவனைப் போற்றி உருகிய தன்மையைப் பாடியிருக்கிறார்.

இறைவர் விழைந்திருந்தால் ஏமநாதனைதாம் இருந்த இடத்தில் இருந்தவாறே ஓர் நொடிக்குள் மாயம் செய்து வெருட்டியும் மருட்டியும் மதுரையை விட்டு விரட்டியிருக்க முடியும். தம்முடைய பூதகணங்களில் யாரையேனும் ஒருவரை அனுப்பிக்கூட ஏமநாதனுக்குப் பாடம் கற்பித்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு இறைவர் செய்திருந்தால் பாணபத்திரரின் பக்திப் பெருமையை இந்த வையம் அறிந்திருக்க இயலாது. அன்பர்கள் இல்லங்களுக்கு எழுந்தருளி அருள் சுரக்கும் வானார் கழல் கொண்ட விமலனார் பாணபத்திரருக்கு

பெருமை சேர்ப்பதற்காகவே விறகாளாக வந்து திருமாலுக்கும் பிரமனுக்கும்கூட எட்டாத தம்முடைய தாமரைப் பாதங்கள் நோக வந்து திருவிளையாடல் புரிந்தார் என்றால் அடியவர்க்கு எளியராகும் ஈசனார் அருட்பெருமையை-கருணையை அளவிட யாரால்

ஆகும். இதைத்தான் பாணபத்திரரும், 'அடியனேற் கெளிதாயதோ ஐயநின்பெருமை'' என்று கூறி இறைவரைப் போற்றிப் புகழ்வதைக் காண்கிறோம்.

மதுரை மன்னனும் இறைவரின் விறகு விற்ற திருவிளையாடலைப் பாணபத்திரர் வாயிலாகக் கேட்டும், ஏமநாதன் தங்கியிருந்த மாளிகைக்கு அருகில் வாழ்ந்த மக்களிடம் விசாரித்து அறிந்தும் புளகாங்கிதம் உற்று தானும் சொக்கநாதரைப்பணிந்து பலவாறாகப் போற்றித் துதிக்கிறான். பாணபத்திரரையும் யானைமேல் ஏற்றி, மதுரை மாநகரை வலம் வரச்செய்து, எண்ணற்ற பரிசுகளையும் விருதுகளையும் வழங்கிச் சிறப்பிக்கின்றான். 'தேவாதி தேவர்கள் எல்லாம் பணிசெய்யக் காத்துக் கிடக்கும் பரமனே உமக்காக ஏவல் செய்து உம் குறை முடித்திருக்கிறார் என்றால் உமக்கு நாமும் இம்மதுரை மாநகர்வாழ்மக்கள் அனைவருமே ஏவலாட்கள். இறைவரை நாளும் பாடுதலாகிய திருத்தொண்டைத் தாங்கள் ஆற்றுங்கள். உங்களுக்கு வேண்டுவன வற்றை நாங்கள் உதவுகின்றோம்'' எனவும் கூறிப் பாணபத்திரரை வீட்டிற்கு அனுப்புகின்றான் பாண்டிய மன்னன். தம் அடியவராகிய பாணபத்திரருக்கு இத்தகைய பரிசுகளும், பெருமைகளும் சேரவேண்டும் என்று விரும்பியல்லவா இறைவரும் விறகாளாகி இத்திருவிளையாடலை விரும்பி மேற்கொண்டார்; அன்புக்கு அடிமையாகும் இறைவரை நாமும் அன்பு செய்து துதிப்போம். இன்னலுக்கு இடம் மிகுந்த இவ்வுலகில், இன்னல் ஏதும் இன்றி மகிழ்வோம்.

திருப்பாலைவனம்

கோதவரிமைந்தன்

சான்றோர் பலர் நிறைந்த தொண்டை நன்னாட்டில் இன்றைய செங்கை அண்ணா மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்தில் பொன்னேரிக்கு வடகிழக்கே சுமார் 10 கி.மீ. தொலைவில் திருப்பாலைவனம் அமைந்திருக்கிறது.

ரயில் வழியாகச் செல்வதானால் சென்னை கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் பொன்னேரியில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் இவ்வூரையடையலாம்.

இவ்வூர்க் கோயில் மிகவும்பழமையானது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. புராண வரலாறும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இக்கோயில் கிழக்கு நோக்கிய ஐந்து நிலைகள் உடைய கோபுரத்துடன் கூடிய அழகிய பெரிய நுழைவாயிலைக் கொண்டது.

கோயில் முகப்பில் பெரிய பதினாறு கால்களைக் கொண்ட 'மண்டபம்' உள்ளது. மண்டபத்துக்குக் கிழக்கில் கோயிலுக்கு எதிரில் 'அமிர்தபுஷ்கரணி' எனும் பெயருடைய புனித நீர்க்குளம் இருக்கிறது.

கோயிலுக்கு உள்ளே நுழைந்து வலப்பக்கமாகச் சென்றால் கோயிலின் தென்மேற்கு மூலையில் விநாயகர் கோயில் உள்ளது.

விநாயகர் கோயிலுக்குத் தென்மேற்கில் கோயிலின் தெற்கு மூலையில் தலவிருட்சமான பாலை மரங்கள் பசுமையுடன் காணப்படுகின்றன.

கோயிலைச் சுற்றிக் கொண்டு உட்கோயிலுக்குச் செல்லுமுன் அழகிய முக மண்டபம் விளங்குவதைக் காணலாம்.

தெற்கு நோக்கிய நுழைவாயிலையுடைய உட்கோயிலின் உள்ளே சென்றால் முதலில் கண்ணுக்கு விருந்தாகஅமைவது ஆடல் வல்லானின் அழகான திருவுருவம் அமைந்த அம்பலக் கோயிலாகும்.

ஆடவல்லானை வணங்கிப் பின் உள்ளே சென்றால் முகமண்டபம், அர்த்த மண்டபம் கருவறைகளோடு கூடிய அழகிய இறைவன் திருச்சந்நிதியடைந்து பாலீஸ்வரப் பெருமானைக் கண் குளிரக் கண்டு தரிசிக்கலாம்.

இறைவனின் சந்நிதிக்கு உள்ளே புகுமுன் வாயிலின் வலப்பக்கத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய விநாயகர் சிலையையும், இடப்பக்கத்தில் 'ஆலமர் செல்வன்' என்று போற்றப்படுகின்ற சிற்ப நுணுக்கங்கள் நிறைந்த தட்சிணாமூர்த்தியின் அழகுமிகு திருமேனியையும் கண்டு போற்றலாம்.

இறைவனின் கருவறை 'கஜபிருஷ்டம்' என்று வடமொழியிலும், 'தூங்கானை மாடம்' என்று தமிழிலும் கூறப்படுகின்ற யானையின் முதுகு போன்ற அமைப்புடையதாகும். இவ்விமானம் பிரம்மரந்திரம்வரை கருங்கல்லாலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றது. அதற்கு மேல் சிகரம் சுதையால் ஆனது.

தூங்கானை மாடத்தில் வெளிப்புறச் சுவரில் முழுவதுமாகக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கோஷ்டத்தில் தெற்கு நோக்கிய விநாயகர், தட்சிணாமூர்த்தி ஆகிய உருவங்களும், மேற்கு நோக்கிய பெரிய மகாவிஷ்ணுவின் உருவமும் வடக்கு நோக்கிய பிரமனின் உருவமும், மகிஷனைக்காலில் மிதித்தவண்ணம் காட்சி தரும் துர்க்கையின் அழகுமிக்க திருக்கோலமும் காணலாம். உட்சுற்றில் (பிரகாரத்தில்) அநுமார், நர்த்தன விநாயகர், சமய குரவர்கள், மார்க்கண்டேயர், வீரபத்திரர், அழகிய உயரமான வாசுகி. இறைவனின் பிட்சாண்டவர் கோல உருவம், வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகன் சண்டேசமூர்த்தி வரை அனைவரையும் தரிசிக்கலாம்.

வெளி மண்டபத்தில் இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் ஆறுமுக சுவாமி மயில் மீது அமர்ந்து காட்சி தரும் திருக்கோலத்தைக் கண்டு வழிபடலாம்.

அடுத்து லோகாம்பிகை சந்நிதி. இதுவும் முகமண்டபம். அர்த்த மண்டபம், கருவறை களோடு கிழக்கு நோக்கி விளங்குகிறது.

இறைவனுக்கு உட்பிரகாரம் உள்ளது போலவே இறைவிக்கும் தனியாக உட்பிர காரம் இருக்கிறது. இங்கு அம்பாள் இறைவ னுக்கு வலப்பக்கத்தில் நின்ற வண்ணம் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

இவ்வாறு எழில் கொஞ்சும் இவ்வாலயம் ராஜேந்திர சோழ தேவரால் கட்டப்பட்டு திரு புவனச் சக்கரவர்த்தி வீரராஜேந்திர தேவர் (இராஜேந்திர சோழனின் பேரன்-இராஜேந்திர சோழனின் மகன்) காலம் முதல் 18ஆம் நூற் றாண்டு வரை பல்வேறு மன்னர்களாலும் பக்தர்களாலும் திருப்பணிகளையும் திரு விழாக்களையும் கண்டு ஊரும் பேரும் சிறக்க விளங்கியிருந்தது எனலாம்.

இக்கோயில் பற்றிய புராணம் :

தேவர்களும் அசுரர்களும் மந்திரமலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு திருப்பாற்கடலை அமுதம் வேண்டிக் கடைந்த னர் என்பது யாவரும் அறிந்த செய்தி.

அவ்வாறு அவர்கள் திருப்பாற்கடலைக் கடையும்போது ஐராவதம் என்னும் யானை யும், 'தேவதாரு' எனப்படும் கற்பக விருட்ச மும், முழுநிலவும், திருமகளும் தோன்றி னார்கள். ஆலகால விஷமும் தோன்றி வெளிப் பட்டது.

உலகை உய்விக்கக் கருதி இறைவன் அவ் விஷத்தைத் தானுண்டு நஞ்சுண்ட கண்டன் (நீலகண்டன்) என்ற பெயர் பெற்றான்.

அதன் பின்பு அமுதம் தோன்றியது. அதை தேவாசுரர்கள் சமமாக ஏற்று உண்டு அமர வாழ்வு பெற வேண்டுமென்பது அவர்களின் உடன்படிக்கை. ஆனால் தேவர்கள் அசுரர் களை ஏமாற்றிவிட்டு அமுதத்தை எடுத்துக் கொண்டு மறைவான இடம் தேடி வந்து உண் டனர்.

உண்ணுவதற்கு முன்பு இறைவனைப் பூசித்துப் பின் உண்ண வேண்டுமென்று கருதிய தேவர்கள், தங்கள் கையிற் இருந்த அமுதத்தில் ஒரு பகுதியைச் சிறு லிங்கமாகப் பிடித்து வைத்து வழிபாடு செய்துவிட்டுப் பின் உண்ட னர்.

அவ்வாறு தேவர்கள் அன்று லிங்க வடிவில் அமுதத்தைப் பிடித்து வைத்து வணங்கிய இடமே திருப்பாலைவனம்.

அவர்கள் வழிபட்ட ஈசனே இன்று இங்கு கோயில் கொண்டுள்ள திருப்பாலீசப் பெரு மான் ஆவார். இவருக்கு வடமொழியில் 'அமிர்தேஸ்வரர்' என்று பெயர் வழங்கப்படு கிறது. (அமிர்தம் ஈசர்-அமிர்தேசர்-அமிர்தத் தால் ஆன ஈசன் என்பது இதன் பொருள்)

சூரிய சந்திரர் வழிபாடு

இங்கு சூரியனும், சந்திரனும் தங்கி வழி பட்டு மேன்மையடைந்தனர் என்று கூறுகின்ற னர்.

அதற்கு அடையாளமாக இன்றும்கோயிலில் என்றும் வற்றாத 'சூரிய புஷ்கரணி' என் னும் தீர்த்தக் கிணறும், 'சந்திர புஷ்கரணி' என்னும் தீர்த்தக் கிணறும் உள்ளன. 'சூரிய புஷ்கரணியின் நீரே இன்றும் இறைவனுக்கு தினமும் அபிஷேகம் செய்யப் பயன்பட்டு வருகிறது.

கோயிலுக்கு எதிரில் உள்ள 'அமிர்த புஷ் கரணி' என்ற திருக்குளத்தில் தவளைகள் தங்கு வது இல்லை. புராண வரலாற்றுப்படி இக் குளத்தில் தேவர்கள் அமுதம் உண்ட தங்கள் கைகளைக் கழுவினர். அவர்கள் கையில் எஞ்சி ஒட்டிக் கொண்டு நீரில் கலந்த சிறிதளவு அமு தத்தையாவது தாங்கள் உண்ணவேண்டு மென்று கருதிய அசுரர்கள் தவளை உருக் கொண்டு இக்குளத்தில் வந்து தங்கினர். இதை அறிந்த தேவேந்திரன் இட்ட சாபத்தால் தவளைகள் இன்றளவும் இக்குளத்தில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

வாசுகி பூசித்து மேன்மை பெற்றது

(அனந்தன், வாசுகி, தட்சகன், கார்க் கோடகன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகாபத்மன்) என்ற எட்டு நாகராஜாக்களில் ஒருவன் வாசுகி. இவன் பாதாள லோகத்தில் கிழக்குத் திசையில் இருந்து கொண்டு அரசு புரிந்து வந்தான். (பாற்கடலைக் கடைய கயிறு நாணாக இருந்தவனும் இவனே).

அரச நீதிப்படி ஆட்சி புரிந்து வந்த இவன் ஆட்சி பீடத்தைத் தன் மகளுக்கு அளித்து விட்டு இறைவனை வணங்கி மோட்சமடைய விரும்பினான்.

அதற்காக அவன் பூவுலகு வந்து உபமன்யு என்னும் முனிவரின் ஆசிரமத்தை அடைந்து அவரை வணங்கித் தன் விருப்பத்தை கூறிப் பணிவுடன் நின்றான்.

உபமன்யு என்பவர் வியாக்ரபாத முனிவ ரின் மகன். வேதாகமம் கற்றுணர்ந்த பண்டி தர். முக்காலமும் உணர்ந்த மாமுனிவர்.

இவர் நாகராஜனுக்கு நால்வகைத் தீட்சை களையும் செய்வித்து நித்தமும் சிவபூஜை செய்து உய்யும் வழியையும் கற்பித்தருளினார்.

அதன்படி வாசுகி நித்தமும் முறைப்படி சிவபெருமானை வழிபட்டான். இறைவன் உறையும் திருத்தலங்கள் பலவற்றைக் கண்டு வணங்கி பேரின்பமடைந்தான்.

ஒரு நாள் அவன் 'ஆதிபுரி' என்னும் திரு வொற்றியூரை அடைந்து இறைவனை வழி

பட்டு அங்கிருந்து நீங்கிச் செல்ல மனமின்றி நிலையாகத் தங்கிவிட்டான். தினமும் ஒற்றியூர் இறைவனைப் பன்மலர் கொண்டு பூசைகள் செய்து வணங்கி வந்தான்.

இவ்வாறு இருக்கும் நாளில், இறைவன் வாசுகி பால் அருள் கொண்டு அவனை உய்விக்க விரும்பி எதிரே தோன்றி, 'வாசுகியே! நித்தமும் நீ செய்யும் வழிபாட்டிற்கு நாம் மிகவும் மகிழ்ந்தோம். நீ விரும்புவது போல உனக்கு அருள் பாலிக்கிறோம். அதற்கு முன் நீ இவ் ஆதிபுரிக்கு வடக்கே உள்ள பாலை மரக் காட்டில் மறைந்திருக்கும் என்னைக் கண்டு வழி பட்டு வருக'' என்று கூறி மறைந்தார்.

பாலை மரக்காட்டில் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள விரும்பிய வாசுகிக்கு இறைவன் தானிருக்கும் மரத்தைச் சுட்டிக் காட்டக் கருதித் 'தேவர்கள் தேனீ உருக் கொண்டுத் தேனைச் சேகரித்து வைத்துள்ள பெரும் பொந்துகள் நிறைந்த பாலைமரத்தைக் கண்டு அதன்கீழ் நிலை பெற்று உள்ள எமை வணங்கி வருக' என்று கூறியருளினார்.

''மன்னு மித்தலத்தின் வடபாலின்
துன்னுபாலையின் தும்பிகளாய்ச் சுரர்
முன்ன முண்ண அம்மொய்மலர்த் தேனையே
கூட்டியே தினம் பொந்தினிற் கொண்டு வந்து
ஈட்டிவைத்திருந்து எய்திடா வகைக்
கூட்டு மத்தரு நீழலில் காட்சியாய்ச்
சேட்டமாயிருப்போம் அவன் சேர்ந்தெமை
பூசை செய்குதி''
(திருவொற்றியூர்ப் புராணம் — வாசுகிச் சருக்கம்)

அதன்படி வாசுகி இன்று 'திருப்பாலைவனம்' என்று பெயருடைய பாலை மரக்காட்டிற்கு வந்து இறைவனைக் கண்டு வணங்கி முறையோடு அபிஷேக ஆராதனைகளைச் செய்து பூசித்துப் பின் திருவொற்றியூர் திரும்பி இறைவனைக் கண்டு வணங்கி இறைவனோடு இரண்டறக்கலந்து உய்ந்தார். இதனை

''போதமுற்ற அரன்பதம் போற்றியே
ஓதுபாலைத் தலத்திலுற்றே சிவன்
பாத பங்கயம் அர்ச்சனை பண்ணியே''

''பலகையுற்ற பரமனை வணங்கியே
அலகில் பன்மலர் அஞ்சலியே புரிந்து
இலகும் அன்புடன் எண்ணிலா காலம்
உலகம் எண்ண இவை செய்து உறைந்தான்''

(திருவொற்றியூர் புராணம்—வாசுகிச் சுருக்கம் எனும் மேற்கண்ட பாடல்கள் மூலம் அறியலாம்.)

இவ்வாறு தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு இந்திராதி தேவர்களாலும் சூரிய சந்திரர்களாலும், வாசுகி முதலான சிவபக்தர்களாலும் பூசிக்கப்பட்ட பழமையையும் பெருமையும் பொருந்தியது இத்திருப்பாலைவனத்து பழங் கோயில்.

குறிப்பு :—இறைவன் அமுதத்தினால் ஆனவர் என்பதால் உஷ்ணமான பொருட்கள் (சந்தனம் உட்பட) இறைவன் மீது பட்டால் லிங்கம் உருகிவிடும் என்பதால் இறைவனுக்குப் பால், தயிர், இளநீர், பன்னீர் தவிர வேறெதையும் அபிஷேகம் செய்வதில்லை. இறைவன் 'அமிர்தலிங்கம்' என்ற பெயரோடு வெண்ணிற மேனி கொண்டு விளங்குவதைப் பக்தர்கள் இன்றும் கண்டு மகிழலாம்.

வரலாறு

தஞ்சை பெரிய கோயிலை எழுப்பிய ராஜ ராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழன். இவன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கங்கை கொண்ட சோழேசர் கோயிலைக் கட்டியவன். இவனது ஆட்சிக் காலத்தில் கங்கைக் கரை வரை சென்று கங்கை நீரைக் கொணர்ந்து தான் கட்டிய கோயிலுக்குக் குடமுழுக்கு செய்வித்து மகிழ்ந்தவன். இவனது காலம் கி.பி. 1012-1044. இவனது ஆட்சியில் பதினொன்றாம் ஆண்டில் இவன் வடபுலம் நோக்கிப் படையெடுத்தான். இதற்குக் காரணம் புனித கங்கை நீரை கொணரல் வேண்டுமென்பதே யாகும். அதற்காக இவன் தனது படைத் தலைவருள் மிகுந்த வீரமுடைய ஒருவனை வடபுலம் நோக்கிப் பெரும்படையுடன் அனுப்பி வைத்தான்.

அப்படைத்தலைவன் வடநாடு சென்று கங்கை பேராற்றில் யானைகளை வரிசையாக நிறுத்திப் பாலம் அமைத்து அவற்றின் வழித் தன் படைகளைச் செலுத்திச் சென்று வடபுல மன்னர்களை வெற்றிக் கொண்டு, தோற்றவர் தலையில் கங்கை நீரைச் சுமக்கச் செய்து கொணர்ந்தான்.

வடநாட்டில் வெற்றிக் கொடியை நாட்டி திரும்பி வரும் தன் படையை எதிர் கொண்டு அழைக்கக் கருதிய இராஜேந்திரசோழன் கோதாவரிக்கரை வரை சென்று தன் படையை வரவேற்றுத் திரும்பினான் என்று அவனது வரலாறு கூறுகிறது.

அவ்வாறு அவன் திரும்பி வருகையில் இடையில் உள்ள சில திருப்பதிகளில் உள்ள இறைவனைக் கண்டு தரிசித்தும் புதிய சிவாலயங்களைத் தோற்றுவித்தும் மகிழ்ந்ததாக சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இவனால் கட்டப்பட்ட கோயில்கள் சில ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் பையூர் கோட்டத்தில் இன்றைய பொன்னேரி வட்டத்தில் உள்ளன. அவற்றுள் ஒன்றே திருப்பாலைவனம், (பொன்னேரி கும்பமுனிமங்கலத்து அகத்தீஸ்வரர் கோயிலும், திருவொற்றியூர் திருக்கோயிலும் இவனால் கட்டப்பட்டவையே. இவை அமைப்பால் ஒன்று போல் விளங்குகின்றன. குறிப்பாக இறைவனது கருவறை தூங்கானை மாடமாக அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம்.)

திருப்பாலைவனத்து இறைவிக்கு இவ்வரசன் 'லோகமாதேவி' என்று தன் அன்புத்

தாயாரின் பெயரையே சூட்டி மகிழ்ந்தனன் என்று கருதலாம். (இன்றும் திருப்பாலை வனத்து இறைவியின் பெயர் லோகநாயகி' என்று வழங்கப்படுகிறது.)

கல்வெட்டு ஆய்வுப்படி இக்கோயில் கி.பி 1012-1044-க்குள் இவனது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

முதலில் இவன் இறைவனுக்கும் இறைவிக்கும் மட்டுமே கோயில்களை அமைத்திருக்க வேண்டும். பின்பு வந்த பேரரசர்களும், சிற்றரசர்களும், முகமண்டபம், நடராஜர் மண்டபம், மதில் சுவர் போன்றவற்றினைக் கட்டியிருக்கலாம். சாளுக்கிய மன்னர்களின் இலச்சினைகள் முக மண்டபத் தூண்களில் உள்ளதால் இவ்வரசர்கள் முகமண்டபத் திருப்பணிகள் செய்திருக்க இடமுண்டு. எது எவ்வாறாயினும் இக்கோயில் 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பது புலனாகிறது. சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. இக்கோயில் தோன்றிய வரலாறு:—

முதல் ராஜேந்திர சோழ மன்னன் தன் பெரும் படையுடன் வடபுலம் சென்று வடதிசை மன்னர்களை வென்று கங்கை நீரைக் கொண்டு வருகையில் இத்திருப்பாலைவனத்துப் பாலை மரக்காட்டில் பரிவாரங்களுடன் தங்கியிருந்தான். அப்போது ஒரு பாலை மரத்தில் கட்டப்பட்ட யானை திடீரென்று மயங்கி விழக்கண்ட மன்னன் மரத்தை வெட்டிச் சோதிக்கக் கட்டளையிட்டான்.

வீரர்கள் மரத்தை வெட்டுகையில் கோடாரி இறைவன் தலைப்பாகத்தில் பட்டு குருதி வெளிப்பட்டது. இதைக் கண்ட மன்னன் மரத்தைப் பக்குவமாக அகழ்ந்து எடுக்க ஆணையிட்டான். மரம் அப்புறப்படுத்தப்பட்டது. இறைவனின் வெண்ணிற லிங்க வடிவம் மரத்தின் வேர்ப்பகுதியில் காட்சி தரக் கண்டு ஆனந்தம் கொண்டு மன்னன் உடனே அவருக்கு ஆலயம் அமைத்து வழிப்பட்டான். இறைவிக்குக் கோயில் எழுப்பித் தனது அன்புக்குரிய தாயாரின் 'லோகமாதேவி' என்ற பெயரைச் சூட்டி மகிழ்ச்சி கொண்டான். இவ்வாறு தோன்றியதுதான் இன்றைய திருப்பாலீசர் கோயில். (இறைவனின் திருமேனியில் கோடாரி பட்ட வடு இன்னமும் உள்ளது.)

பிற செய்திகள்

இவ்வூர் கோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் 71. (1929-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிக்கைப்படி எண் 307 முதல் 377 வரை உள்ளவை திருப்பாலைவனம் பற்றியவை) தமிழ்-65, தெலுங்கு 3, வடமொழி 2, கன்னடம் 1 ஆக 71. இன்று சிதைந்தவை போக மீதியிருப்பவை தமிழ்ச் சோழர் காலத்தவை 41, பாண்டியர் காலத்தவை 3, நெல்லூர்ப் பகுதியை ஆண்ட சோழர்க்கடங்கிய சிற்றரசர்கள் 12, விஜய நகர அரசர் 3, காகதீய அரசன் பிரதாபருத்திரதேவன் (வடமொழி 1,) ஆக 60.

இக்கோயில் 11-ஆம் நூற்றாண்டு முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை மிகவும் சிறப்புடன் விளங்கியது. இங்கு மடங்கள் பல இருந்தன. பூந்தோட்டங்கள் பல இருந்தன. பற்பல சிறப்பு விழாக்கள் நடைபெற்றன. கோயிலுக்கு நன்கொடையாகப் பலர் நிலங்களைத் தானமாகத் தந்தனர். விளக்கெரிக்கப்பலர் பொற்காசுகளைத் தானமாகத் தந்தனர். பலர் ஆடு மாடுகளைத் தந்தனர்.

இறைவனின் செப்புத் திருமேனிகளையும் செய்து பலர் பூசிக்க அளித்துள்ளனர். பொற்காசுகளையும், வெள்ளிக்காசுகளையும் அள்ளித் தந்து பலர் இறைவழிபாட்டைச் சிறப்புடன் நடத்தியுள்ளனர்.

இக்கோயில் சதுர அமைப்புடையது. கோயில் மதிர் சுவர் கிழக்கு மேற்கில் 500 அடியும், தெற்கு வடக்கில் 550 அடியும் உடையது.

நடராஜர் சந்நிதி, முருகன் சந்நிதி அம்மன் சந்நிதி தனித்தனியே அமைந்துள்ளன.

இறைவன் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார். (உமையம்மை இறைவனுக்கு வலப் பக்கத்தில் கோயில் கொண்டுள்ளார்).

இங்குள்ள நந்தவனங்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை 3; 1. பக்தர் சித்தத்து உறைவான் திருநந்தவனம். 2. ஐம்பத்தெழுவர் திருநந்தவனம் 3. ஆலால சுந்தரன் திருநந்தவனம் இங்கு சிறப்புடன் விளங்கிய மடங்கள் 3. 1. தன்மதாவன் திருமடம். 2. கண்டகோபால மாணிக்க மடம். 3. அன்பர்க்கு அடியார் மடம். இவற்றுள் முதல் மடம் சிவாசாரியார்கள் மடம். இரண்டாவது அடியார்களை உண்பிக்கவும் நந்தவனத்தைப் பாதுகாக்கவும் அமைந்தது. மூன்றாவது ஆண்டார்கள் என்பவர் இருந்தனர். இவர்கள் மலர் பறித்தல், கோயிலைத் தூய்மை செய்தல் போன்ற பணிகளைச் செய்வதோடு கோயிலில் உள்ள கோஷ்டி மண்டபத்தில் தினமும் கூடி திருமுறைகள் ஓதி வந்தனர்.

ஊரின் பழைய பெயர் :—அமிர்தபுரி
திருப்பாற்றுறை.

இறைவனின் திருப்பெயர்கள் :—பாலைவனநாதர், திருப்பாலீசர், அமிர்தேஸ்வரர் பாலைவனமுடையார் என்பனவாகும்.

அம்பாளின் பெயர்கள் : உலகமாதேவி லோகநாயகி, என்றும் பிரியாத நாச்சியார் லோகாம்பிகை என்பனவாகும்.

தீர்த்தம் :—அமிர்தபுஷ்கரணி

தலவிருட்சம் : பாலைமரம்.

மாரியம்மன் வழிபாடு

தமிழகக் கோயிற்கலைச் செல்வர்

தி. இராசமாணிக்கம்

பொள்ளாச்சி

[திருக்கோயில் இதழில் மிகச் சிறந்த ஆன்மீகக் கட்டுரைகளை வழங்கிவந்த தமிழகக் கோயிற்கலைச்செல்வர் தி. இராசமாணிக்கனார் அண்மையில் அமரர் ஆனார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவருடைய ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகிறோம்.]

மாரியம்மன் வழிபாடு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் விஜய நகரப் பேரரசர்களின் காலத்தில் தமிழகத்தில் பரவிய ஒன்றாம். இதன் மூலக்கோயில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஓரகாண்டி என்ற இடத்தில் இருப்பதாகத் தெரிகிறது. ஓரகாண்டியம்மன் என்பது இவளது பெயர்களில் ஒன்று.

விஜயநகரப் பேரரசு தமிழகத்தில் பரவிய போது நாட்டு நடப்பை அறிந்து அரசுக்குத் தெரிவிக்க தெலுங்கு பிராமணர்களை உயர் மட்டத்திலும், வண்ணார் என்ற சலவைத் தொழிலாளர்களைக் கீழ்மட்டத்திலும் அனுப்பப்பட்டனர். அவர்கள் தாம் மாரியம்மன் வழிபாட்டைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவர்கள்.

ஜமதக்கினி முனிவரின் மனைவியான ரேணுகாதேவி கார்த்தவீர்யார்ச்சுனனின் அழகில் சற்று மயங்கின காரணத்தால், எப்போதும் போல் மணலால் குடம் செய்து தண்ணீர் கொண்டு வர இயலவில்லை. எனவே அவளது கணவனது ஆணையின்படி மகனான பரசுராமனால் தலை துண்டிக்கப்பட்டாள். இதைத் தடுக்க முயன்ற வண்ணாத்தி ஒருத்தியும் தலை துண்டிக்கப்பட்டாள். பின் அவர்கள் இருவரை



யும் உயிர் பிழைப்பித்த பரசுராமன் இருவரின் தலைகளையும் உடல்களையும் மாற்றி வைத்து விட்டார். ரேணுகாதேவியின் தலையும், வண்ணாத்தியின் உடலும் கொண்ட வடிவம்தான் மாரியம்மன் எனப்படுகிறது.

ஆந்திர மாநிலத்தில் இவள் மக்களை நோய்களினின்றும் காக்கும் தெய்வமாக வழிபடப்பட்டாள். தமிழகத்தில் இதற்கு முன் ஊர் காவல் தெய்வங்களில் ஒன்றான பிடாரி அம்மனின் வழிபாடு மாரியம்மன் வழிபாட்டால் அருகிவிட்டது.

கிராமங்களிலும் சரி நகரங்களிலும் சரி வணங்கப்பெறும் பெண் தெய்வங்கள் காளியம்மன், மாகாளியம்மன், பத்ரகாளியம்மன், செல்லியம்மன், செல்லாண்டியம்மன், அங்காளம்மன், கண்டியம்மன், அழகு நாச்சியம்மன், மாரியம்மன் என்பனவாம். அவர்களில் மாரியம்மன் நாளுக்கு நாள் அதிக அளவில் வழிபடப்பட்டு வருவது யாவரும் அறிந்த ஒன்று. இதற்குக் காரணம் அம்மை, 'பிளேக்' போன்ற நோய்களுக்கு மாரியம்மன் அதிதேவதையாக நம்பப்படுவதுதான். மேலே கண்ட நோய்கள் வராது இருக்கவும், அவை வந்தால், அவற்றை குணமாக்கவும் இவளை வழிபட வேண்டும் என்பதும் மக்களுடைய நம்பிக்கை. பொள்ளாச்சி போன்ற இடங்களில் உள்ள பிளேக் மாரியம்மனை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மேலும் ஜேஷ்டா தேவி என்ற மூதேவி ''சீதளாதேவி'' என்ற பெயரில் அம்மை நோய்க்கு அதிதேவதையாகக் கருதப்பட்டு, வங்காளம், குஜராத், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வணங்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாம். அம்மை வார்க்கும்போது, அதற்குரிய தேவதையான மாரியம்மனை வழிபட்டு அது குணமாக வேண்டி தீச்சட்டி (பூச்சட்டி) எடுத்தல், தீ மிதித்தல் போன்றவற்றை நேர்ந்து கொள்கின்றனர். நோய் குணமான

பின், தங்களது நேர்த்திக் கடனைச் செலுத்துவதை சம்பந்தப்பட்டவர்கள் சிறப்பாகச் செய்கிறார்கள்.

மேலும் இவள் உடல் உறுப்புகளில் கண்ணுக்கு அதிதேவதையாகப் பரவப்படுகிறாள். எனவே 'கண்கொடுத்த மாரி' என்றும் 'கண்ணாத்தாள்' என்றும் 'கண்ணபுரத்தாள்' என்றும் பலவாறாக அழைக்கப்படுகிறாள். கண்ணுக்கு நோய் ஏதாவது ஏற்படின், இவளுக்கு நேர்ந்து கொள்கின்றனர். இவள் கோயிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து, கண்களில் ஒற்றிக் கொள்கின்றனர். நோய் குணமான பின் வெள்ளியால் செய்யப்பட்ட கண் போன்றவற்றை இவளுக்குக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். இதுவும் அந்த வழிபாடு பெருகுவதற்கு ஒரு காரணமாம்.

சிவபெருமான், திருமால் போன்ற தெய்வங்களுக்கு உள்ளது போன்று இவளது பூசையில் கட்டுப்பாடான நெறிகள் கிடையாது. தவறுகள் நேரின், இவள் மன்னித்து அருளுவாள் என்பது மக்களின் நம்பிக்கை. ஆடு, மாடு, கோழி, கருவாடு, முட்டை போன்றவற்றை இவளுக்குப் படைக்கலாம். இவையும் இவளது வழிபாடு நாளுக்கு நாள் அதிகமாவதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

முதலில் இவளை நடுத்தெருவில் வைத்து வழிபட்டமையால் 'நடுத்தெரு மாரியம்மன்' 'வெட்டவெளி மாரியம்மன்' என அழைக்கப்பட்டாள். ஊருக்கு எல்லையில் இவளது கோயில் அமைந்திருந்தால், இவள் 'எல்லை முத்து மாரியம்மன்' என வழங்கப்படுவாள். பருவமடைந்த பெண்கள் திருமணத்திற்கு முன் அம்மைநோய் வார்த்து குளிர்ந்து போனால் (மரித்தால்) அந்த உடலை 'சுடுகாட்டில் வைக்காது, ஊருக்கு வெளியே தனி இடத்தில் வைத்து, சமாதிகட்டி, மாரியம்மன் கோயில் எழுப்பப்படும். அதைக் 'குளிர்ந்த அம்மன் கோயில்' என வழங்குவர்.

பச்சை மண்ணாக இருக்கும் பானையில் சிறுசிறு துளைகள் இட்டு, சூளையில் வைத்துச் சுடுவர். இப்பானையில் விளக்கை ஏற்றி வைப்பர். அதை 'ஆயிரம் கண் மாரியம்மன்' என அழைப்பர்.

பூச்சொரிதல், நிறைமணி, கும்பம் போடுதல் என்பன இவளுக்குச் செய்யப்படும் சிறப்பான பூசைகளாகும். 'பூச்சொரிதல்-என்பது பூக்களை இரு கைகளாலும் எடுத்து அம்மன் மீது மலர்மாரி போன்று போடுதலாம். சமயபுரம் மாரியம்மன், நார்த்தாமலை முத்து மாரியம்மன் பூச்சொரிதல் விழாக்கள் புகழ் மிக்கனவாம். சந்தனக்காப்பிட்டு, பலவகை மலர்கள், கனிகள், காய் கறிகள், ஆகியவற்றின் தோரணங்களால் அலங்கரித்து, வழிபடுதல் ''நிறைமணி'' எனப்படும். ''கும்பம் போடுதல்' என்பது அன்னைக்கு முன்னால் பெருஞ்சோற்றைப் பரப்பி, கொழுக்கட்டை, கீரை வகைகள், கருவாட்டு குழம்பு போன்றவற்றைப் படைத்து வழிபடுதலாம்.

சாம்பிராணி இவளுக்குப் பிரியமாதலால், இவள் ''சாம்பிராணி வாசகி'' என அழைக்கப்படுகிறாள். இவளுக்கு உரியது வேப்பிலையாகும். எனவே ''வேப்பிலைக்காரி'', 'வேப்பஞ்சேலைக்காரி' என்ற பெயர்களைப் பெற்றாள். இவள் பிறருக்கு உணவு வழங்குவதில் பெருவிருப்பம் கொண்ட காரணத்தால், இவள் தன் கையில் உணவுப் பாத்திரத்தை வைத்துள்ளாள்.

ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு ஊரில் உள்ள மாரியம்மன் புகழ் பெற்றுள்ளாள். உதாரணமாக:

மாரியம்மன் கோயில் உள்ள ஊர்	புகழ்பெற்ற பகுதி
சூலக்கல்	—பொள்ளாச்சி வட்டாரம்
கருவலூர்	—அவினாசி வட்டாரம்
சின்ன மாரியம்மன் பெரிய மாரியம்மன் ஈரோடு	—ஈரோடு வட்டாரம்
அன்னதான மாரியம்மன்	—சேலம் மாவட்டம்
கோட்டை மாரியம்மன்	—சேலம் வட்டாரம்
சமயபுரம்	—திருச்சி வட்டாரம்
திருவப்பூர்	—புதுக்கோட்டை வட்டாரம்
முத்துமாரியம்மன், நார்த்தாமலை	—திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்
இருக்கங்குடி	—சாத்தூர் வட்டாரம்
திருவேற்காடு	—சென்னை

மாரியம்மன் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பெயரில் வணங்கப்பட்டு வருகிறாள். எடுத்துக்காட்டாக :—

ஊரின் பெயர்	மாரியம்மன் பெயர்
பொள்ளாச்சி	—பிளேக் மாரியம்மன்
பொள்ளாச்சி	—குடலுருவி மாரியம்மன்
கோவை	—தண்டு மாரியம்மன்
ஈரோடு	—சின்ன மாரியம்மன், பெரிய மாரியம்மன்
சேலம்	—அன்னதான மாரியம்மன்
சேலம்	—கோட்டை மாரியம்மன்
தஞ்சாவூர்	—புன்னை நல்லூர் மாரியம்மன்
கும்பகோணம்	—படைவெட்டி மாரியம்மன்
வலங்கைமான்	—பாடைகட்டி மாரியம்மன்
நாகபட்டினம்	—நெல்லுக்கடை மாரியம்மன்
நார்த்தமலை, தாயமங்கலம், மணப்பாறை, விருதுநகர்	—முத்து மாரியம்மன்
திண்டுக்கல்	—கோட்டை மாரியம்மன்
மதுரை	—தெப்பக்குளம் மாரியம்மன்
செந்தூர்	—சந்தன மாரியம்மன்
திருவேற்காடு	—கருமாரியம்மன்

இவ்வாறு பெயர்கள் இருப்பதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும். உதாரணமாக பொள்ளாச்சியில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு 'பிளேக்' என்ற தொத்து நோய் காரணமாக மக்கள் அவ்வப்போது ஊரைவிட்டு செல்ல வேண்டியிருந்தது. அதினின்றும் தங்களைக் காப்பாற்ற வேண்டி, மக்களால் வணங்கப்பட்டவள் 'பிளேக் மாரியம்மன்', தண்டு வடிவில் (குட்டையானதடி) வணங்கப்பட்ட மாரியம்மன் 'தண்டு மாரியம்மன்' எனப்பட்டாள். கோட்டைக்குள் நோய் வராது என்ற நம்பிக்கையில் கோட்டை வாயிலில் இவளை வைத்துத் தொழுவர். இவள் 'கோட்டை மாரியம்மன்' என்ற பேரைப் பெற்றாள். வலங்கைமானில் தன் வேண்டுகோளை நிறைவேற்றியதற்காக நேர்ந்து கொண்ட அன்பரை அவரது உறவினர்கள் ஒரு பாடையில் வைத்து மாரியம்மன் கோயிலை வலம் வந்தனர். எனவே இவள் 'பாடை கட்டி மாரியம்மன்' என அழைக்கப்படுகிறாள்.

இவளது வடிவத்தை அமைக்க ஆகமங்களில் விதி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறாக மாரியம்மன் திருவிழா தமிழக மெங்கும் ஆண்டுக்கு ஆண்டு பெருந்த கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறு தெய்வமாக இருந்த மாரியம்மன் பெருந்தெய்வமாக மாறி விட்டாள் எனக் கூறலாம்.



ஆழ்வார்களும் நாயன்மார்களும்

திருமதி எஸ். பாலம்மாள்

முன்னுரை :

சைவமும், வைணவமும் நமது பாரத நாட்டின் இருகண்கள் என்று சொல்லலாம். இவ்விருமதச் சான்றோர்களும் முரண்பாடற்ற நிலையில் இணைந்து செயல்பட்டுள்ளார்கள். ஒரு சிலர் மதப்பற்றின் காரணமாக வேற்றுமை உணர்வை வெளிப்படுத்தினாலும் பெரும்பாலோர் வேற்றுமையிலும் ஒற்றுமையே கண்டனர்.

''தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றா யிசைந்து,''

என்று பேயாழ்வார் தமது சமரச மனப்பான்மையை வெளிக்காட்டுகிறார். இவ்வுலகில் உயிர்கள் வாழ்வதற்குத் தேவையானவை தண்மையும் வெம்மையும். அதாவது நீர், நெருப்பு என்பது. ''நீரின்றி அமையாது உலகு'' என்பது வள்ளுவம். நீர் நீல நிறம். நெருப்பு செம்மை நிறம், நீரின் நீலத்தை திருமாலாகவும், நெருப்பின் செம்மையை சிவபெருமானாகவும் நம்முன்னோர்கள் உருவகித்துள்ளார்கள். ''வெள்ளத்தில் உள்ளானும், வேங்கடத்து மேயோனும் உள்ளத்தில் உள்ளானென்று ஓர்'' என்று பொய்கை ஆழ்வாரும் ''ஆதியும் அந்தமுமில்லா அருட்பெரும் சோதி'' என்று, மணிவாசகரும் குறிப்பிட்டுள்ளார்கள். நமது உடலில் தட்பமும், வெப்பமும் சமநிலையில் இருக்க வேண்டும். இணைந்தே அமைந்திருக்கும் பெருமாள் கோவிலில் துளசி தீர்த்தமும் சிவன் கோவிலில் விபூதியும் பிரசாதமாக வழங்கப்படும் நுட்பத்தை நாம் சிந்திக்க வேண்டும்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் :

இவ்வுலகில் தோன்றிய ஆன்மாக்கள் உய்வு பெற வேண்டும் என்பதற்காக சமயச் சான்றோர்கள் நாலாயிரத் திவ்யப்ரபந்தம், தேவார திருவாசகம் போன்ற கருத்துக்கருவூலங்களை நம்மனோர்க்கு வாரி வழங்கியுள்ளார்கள். அவைகள் மனிதகுல வழிகாட்டிகளாகவும் பிறவிப் பிணியகற்றும் மாமருந்தாகவும், மன இருளையகற்றும் ஒப்பற்ற சோதியாகவும் அமைந்து விலங்கு நிலையில் உள்ளவர்களை மனித நிலைக்கும், மனித நிலையில் உள்ளவர்களைத் தெய்வ நிலைக்கும் உயர்த்தியுள்ளன. அவர்களின் அருள் அனுபவங்களையும், அறிவுரைகளையும், ஓதி உணர்ந்து உள்ளம் தூய்மை பெற்று பக்குவ நிலை பெற்றோர் பல்லாயிரக்கணக்கானவர் என்பதை ஆன்மீக உலகம் அறியும். உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் பல வழிகளை வகுத்துள்ளார். கேவல நிலையில் உள்ள உயிர்களுக்கு உடலையும், புவன போகங்களையும் கொடுத்து என்னை அறிந்து உய்வு பெறு என்றும், புராண இதிகாசங்களையும், வேத சாத்திரங்களையும் வகுத்து படித்து அறிந்து என்னை அடைவாயாக என்றும், அர்ச்சாவதார மூர்த்தியாகத் திருக்கோவில்களில் எழுந்தருளி என்னை வணங்கி உய்வு பெறுவாய் என்றும் அவதார புருடர்களாக மண்ணிலே அவதரித்து மனித நிலையில் வாழ்ந்து காட்டியும் பல ஏதுக்களை

வகுத்துள்ளார். மக்களுடைய துயரங்களையும், தொல்லைகளையும் தம்மீது ஏற்றிக் கொண்டு ஆழ்வார்களும், நாயன்மார்களும் யான் எனது என்ற ஆணவத்தை அழித்துக் கண்ணீர் விட்டுக்கதறினார்கள். அந்தக்கதறல்களின் வெளிப்பாடுகளே பிரபந்தங்களும் பாசுரங்களும், தேவார திருவாசகங்களும் ஆகும். எப்பொழுதெல்லாம் ஆன்மீகவாதிகளின் உள்ளங்கள் உலகச் சிக்கலில் ஈடுபட்டுத் தடுமாறுமோ அப்போது இவை ஊன்றுகோல் போல் உதவுகின்றன.

''இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே
ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்''
என்பது வள்ளுவம்.

ஒன்றிய உணர்வுகள் :

உலகு எங்கும் பல இனங்கள் பல மொழிகள் பலவிதப்பழக்க வழக்கங்கள், பல விதமான சூழ்நிலைகள். அங்கங்கே பல சமயச் சான்றோர்கள் அவதரிக்கிறார்கள். அவர்களின் எண்ணங்களும், வெளியிடும் கருத்துக்களும் ஒரே சிந்தனையில் தோன்றியவைகளாக அமைகின்றன. முரண்பாடுகள் சிறிதுமின்றி ஒரே சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. Great men think alike என்பது அறிஞர்கள் கூற்று. இத்தகைய ஒப்புமைத் தன்மையும் அருளுரைகளும் அருளனுபவங்களும் நமது ஆழ்வார்கள் நாயன்மார்களின் பாடல்கள், பாசுரங்களில் தெற்றெனப் புலப்படுகின்றன. அத்தகைய சான்றுகள் பின் வருமாறு:

திருவெம்பாவையில் :

''எம்கை உனக்கல்லாது எப்பணியும்
செய்யற்க''
—மணிவாசகர்

திருப்பாவையில்

'' உமக்கேநாம் ஆட்செய்வோம்''

''குற்றேவல் எங்களைக் கொள்ளாமல்
போகாது''—ஆண்டாள்

''மானே! நீ நென்னலை
நாளை வந்துங்களை
நானே எழுப்புவன்
என்றலும் நாணாமே
போனதிசை பகராய்''
என்பார் மணிவாசகர்.

''எங்களைமுன்னம்
எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய்
நாணாதாய் நாவுடையாய்''
என்பார் ஆண்டாள்

''எப்படி ஊராமிலைக்கக்
குருட்டாமிலைக்கும் என்னும்
அப்படியானும் சொன்னேன்
அடியேன் மற்று யாதென் பேனே'[
—நம்மாழ்வார்

''ஊராமிலைக்கக் குருட்டா
மிலைத்தாங்குன்தாளிணை அன்புக்கு
ஆராய் அடியேன் அயலே
மயல்கொண்டு அழுகேனே''
—மணிவாசகர்

வேத நூற்பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகனதாகும்
பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமாநகருளானே!
—தொண்டரடிப்பொடியாழ்வார்

வேண்டிய நாள்களில் பாதியும்
உறங்கிப் போகும்
ஈண்டிய வெந்நோய் முதலது
பிள்ளைமை மேலதுமூப்பு
ஆண்டின அச்சம் வெகுளி
அவா அழுக்காறு இங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்
சடைமுக்கண் மாயனையே
—சேரமான் பெருமான் நாயனார்

இப்படி எத்தனையோ சான்றுகள் காட்டலாம்.

பிற ஒப்புமைகள் :

சைவத் திருமுறைகளில் உள்ள திருப்பல்லாண்டு போல பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடியுள்ளார். மணிவாசகர் திருப்பள்ளி எழுச்சி பாடியதைப் போல தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளி எழுச்சிபாடி உள்ளார். திருஞானசம்பந்தர் திருவெழுகூற்றிருக்கை பாடியுள்ளார். திருமங்கையாழ்வாரும் திருவெழு கூற்றிருக்கை அருளிச் செய்துள்ளார்.

முடிவுரை :

நம்முடைய சமயச் சான்றோர்கள் தங்களின் சமரச ஞான மனப்பான்மையினால் அரும்பெரும் சீரிய ஆன்மீகக் கருத்துக்களை நமக்கு வாரி வழங்கியுள்ளார்கள். அவைகள் வாழையடி வாழையாக மாந்தர் உள்ளங்களில் பதிந்து எண்ணற்ற ஆன்மீக வாதிகளைத் தோற்றுவித்தன. அதே போல நாமும் சைவ வைணவ நூல்களைப் பயின்று பிறவிப் பிணி அகற்றி உய்வோமாக.

ஓராறு முகனின் ஏராறு தலங்கள்

பருத்தியூர் டாக்டர்
கே. சந்தானராமன்

தாரகம் உரைத்த ஏரகச் செல்வன்;

சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசம் செய்து, அதனால் 'பரமகுரு' என்று பெயர் பெற்ற முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலம் சுவாமிமலை என அனைவரும் அறிவர்.

நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படும் 'திருவேரகம்' சுவாமிமலை தான் என்பது, அருணகிரிநாதர் உள்ளிட்ட அருளாளர்களின் கருத்து. 'காவேரி நேர் வடக்கிலே' என்று சுவாமி மலையின் இருப் பிடத்தை அருணகிரி நாதர் புவியியல் அறிஞர் போல் சுட்டிக் காட்டியுள்ளார்.

அருணகிரிநாதர் முப்பத்தெட்டுத் திருப் புகழ்ப் பாடல்களைச் சுவாமிநாதனுக்குச்சூட்டி யுள்ளார். சங்கீதமூர்த்தி ஸ்ரீமுத்துசுவாமி தீட்சிதரின் கிருதிகளிலும் சுவாமிநாதன் போற்றிப் புகழப்பட்டுள்ளான்.

'நாட்டை' இராகத்தில் அமைந்துள்ள 'சுவாமிநாத பரிபாலயமாம்' என்ற தீட்சிதர் கிருதியும், 'சரணகமலாயத்தை', 'நாவேறு பாமணக்க', 'காமியத்தழுந்தி', 'பாதிமதிநதி' 'நிறைமதி முகமெனும்' ஆகிய திருப்புகழ்ப் பாடல்களும் மிகப் பிரபலமானவை.

நெல்லி மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டுள்ளதால், சுவாமிமலையைத் 'தாத்ரி கிரி' என்பர். 'சுவாமி சைலம்', 'சுவாமிகிரி' 'குருமலை' போன்ற வேறுபெயர்களும் உண்டு.

ஆறு படைவீடுகளில் நான்காவதான சுவாமிமலை, குடந்தை என்னும்கும்பகோணத் திலிருந்து மேற்கே நான்கு கல் தொலைவில் உள்ளது. சுவாமிமலைத் திருக்கோயில் இயற்கை மலையில் அமைந்ததன்று. கருங் கற்களால் அமைந்த செய்குன்று, அல்லது மாடக் கோயில்.

சுவாமி என்றால் இறைவன என்று பொருள். குறிப்பாக அது முருகப் பெருமானையே குறிக்கும் சொல்லென்று அமரம் கூறுகிறது. சுவாமி என்பவன் கஜமுகானுஜன் (யானை முகத்தோனின் தம்பி) என்று அமரம் விளக்குகிறது.

நாதன் என்றால் தலைவன். சுவாமி நாதன் என்றால் இறைவனாகிய தலைவன் என்று பொருள். தட்சிணாமூர்த்தியாகி உப தேசம் செய்த ஆதிகுருநாதன் சிவபெருமான் முருகனிடம் உபதேசம் பெற்றான். எனவே, முருகனை குருநாதன் என்றும் பரமகுரு என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கின்ற னர். அவ்வகையில் சுவாமிக்கே-இறைவனுக்கே குருநாதனாக விளங்குபவன் என்ற பொருளில் சுவாமிநாதன் என்று அழைத்தனர். சோழ நாட்டுக் கிராம மக்கள் 'தகப்பன் சுவாமி' என்று அன்புடன் அழைக்கின்றனர்.

'ஏர்' என்ற சொல், அழகு, சிறப்பு, பெருமை, தெய்வத்தன்மை போன்ற பொருள் களைத் தரும். முருகனின் அழகிய அகம் ஏர் அகம்—'ஏரகம்' என்றாயிற்று. இலக்கியங் களில் மிக அரிதாகவே பயின்று வரும் 'ஏர்' என்ற சொல் ஒப்பற்ற தெய்வத்தன்மை வாய்ந்த இடங்களில் மட்டுமே வந்துள்ளது.

கயிலையில் சிவபெருமான் எழுந்தருளும் திருக்கோயில் 'ஏரார் திருக்கோயில்' என்று திருக்கயிலாய ஞான உலாவில் சேரமான் பெரு மான் உரைக்கிறார். இறைவன் அமரும் பொன்னூசலை, மணிவாசகர் 'ஏராரும் பொற் பலகை' என்று சிறப்பித்துள்ளார். பேருலகு அனைத்தையும் கண்ணனின் திருவாயில் கண்ட யசோதையை 'ஏர் ஆர்ந்த கண்ணி' என்று ஆண்டாள் உரைக்கிறாள்.

மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான உழவுத் தொழிலின் உயர்ந்த கருவி 'ஏர்' ஆகும். ஏர்த் தொழிலால் உலகூட்டும் வளமான சோழமண்ட



லத்தின்கண் அமைந்த படைவீடு 'ஏர்-அகம்' என்று, சிறப்புப் பெற்ற சுவாமிமலை ஆகும்.

சுவாமிமலைத் திருக்கோயிலின் இராஜ கோபுரம் தெற்குப் பார்த்து அமைந்துள்ளது. எனினும், குடந்தையிலிருந்து வருவோர் கிழக்குத் திசையில் உள்ள நுழைவாயிலின் வழியேதான் செல்கின்றனர். அங்கு உள்ளே வல்லப கணபதி கம்பீரமாய்த் தோற்றமளிப்பார்.

கணபதியின்அருகே தொடங்கும் அறுபது படிகளில் முப்பதைக் கடந்தவுடன் அருணகிரிநாதரின்' திருஎழுகூற்றிருக்கை' என்ற சித்திரக் கவியை தேர்வடிவச் சித்திரத்தில் எழுதி வைத்துள்ளதைக் கண்டு படிக்கலாம்.

மேலும், முப்பது படிகளைக் கடந்தவுடன் நேத்திர விநாயகர் (கண் கொடுத்த விநாயகர்) தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார். அவரைத் தரிசித்து இடப்புறம் திரும்பினால் சுவாமிநாதன் சந்நிதி.

ஆறடி உயரமுள்ள சுவாமிநாதன் நின்ற கோலத்தில் கோவணம், தண்டு சகிதம் எழுந்தருளியுள்ளான். எனினும் அவனுக்கு இராஜ அலங்காரங்கள் உண்டு.

தங்கக் கவசம், வைரவேல், ஆயிரம் பெயர் கொண்ட சகஸ்ரநாமமாலை என்று, ஏராளமான திருவாபரணங்கள் உண்டு. தங்கத் தேர் வைத்துள்ள சில திருக்கோயில்களில் சுவாமிமலையும் ஒன்று.

சுவாமிநாதனின் முகத்தில் கருணையுடன் கூடிய ஞானச் சுடரைக் காணலாம்.

முப்பது படிகள் கீழே இறங்கிச் சுற்றி வரும்பொழுது கிழக்கே சுதை வேலையில் சுவாமிநாதன் பிரணவ உபதேசம் செய்த திருவிளையாடலைக் கண்டு களிக்கலாம்.

சுவாமிமலைத் திருக்கோயிலில் இறைவனும் இறைவியும்—ஏன்—தட்சிணாமூர்த்தியும் கூட கீழ்ப் பிரகாரத்தில் தான் கோயில் கொண்டுள்ளனர்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடுக்கன் தியாகராஜ தேசிகர் என்பவர் சுவாமிமலை நவரத்தினமாலை என்ற ஒன்பது பாடல்கள் கொண்ட அரிய தோத்திரத்தை இயற்றியுள்ளார். அவற்றில் 'ஒரு தரம் 'சரவணபவா' என்று சொல்பவர்' எனத் தொடங்கும் ஒரு பாடல் மிகவும் பிரபலமானது.

வியர்வை உகுக்கும் வேலவன்

தன்னைச் சிக்கெனப் பிடித்த அடியார்களின் உள்ளங்களில் சிக்கிக்கொண்டு அவர்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பவன் சிக்கல் சிங்காரவேலன்.

நாகப்பட்டினத்திற்கு மேற்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது சிக்கல் என்ற திருத்தலம். இங்கு வசிட்டர் வெண்ணெய் லிங்கம் ஒன்றை வைத்து வழிபட்டார். பின்னர் அதனைத் தன்

னுடன் எடுத்துச் செல்ல முற்பட்டார். அப்போது வெண்ணெய் லிங்கம் பெயர்த்தெடுக்க முடியாமல் சிக்கிக் கொண்டு விட்டது. எனவே, இத்தலத்தைச் சிக்கல் என்றே அழைத்தனர்.

வெண்ணெய்ப் பிரான் என்று பொருள் படுங் நவநீத ஈசுவரர் என்ற பெயருடன் அப்பெருமான் அங்கேயே கோயில் கொண்டு விட்டார். சோழன் செங்கணான் சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்களை எழுப்பினான். சிக்கல் வெண்ணெய்ப் பிரான் திருக்கோயிலும் அவற்றுள் ஒன்றாகும்.

இத்தலத்து அம்பிகையின் பெயர் 'வேல் நெடுங்கண்ணி' என்பதாகும். பெயருக்கு ஏற்ப முருகனிடம் வேலைக் கொடுத்து "சூரனை வென்று, வா; மகனே'' என்று ஆசீர்வதித்து அனுப்பியவள் இவள்தான்.

முருகனும் சிங்காரவேலன் என்ற பெயருடன் சிக்கலில் எழுந்தருளி உள்ளான். 'சிக்கல் சிங்கார வேலன்' என்று ஊருடன் சேர்த்தே இவர் பெயரைக் குறிப்பிடுகிறோம்.

சிக்கல் சிங்கார வேலர் மூன்றடி உயரமே உள்ள மூர்த்தி. எனினும் அழகும், கம்பீரமும், கீர்த்தியும் பெரிதும் உடையவர். தேவி இருவருடன் நிற்கும் சிங்கார வேலனின் அழகை கிருத்திகை அபிஷேகத்தின் பொழுது சிறப்பாகக் காணலாம்.

சிக்கல் சிங்கார வேலர் சுந்தர் சஷ்டிக்கு முதல் நாள் அன்னை வேல்நெடுங்கண்ணியிடம் வேல் வாங்கும் திருவிழா மிகச் சிறப்பான ஒன்று. அன்று, சிங்கார வேலர் வேல்வாங்கச் செல்லும்பொழுது, அவர் திருமுகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பும் விந்தைக் காட்சியை இன்றும் காணலாம். எனவே, இவரை 'வியர்வை சிந்தும் வேலவர்' என்றே அழைக்கின்றனர்.

''சிக்கலில் வேல்வாங்கிச் செந்தூரில் சம்காரம்' என்ற பழமொழியும் மிகவும் பிரபலமானதே.

சிக்கலில் சிங்கார வேலருக்கு தங்கத்தில் மயில் வாகனம் மற்றும் தங்கத்தில் ஆட்டுக்கிடா, குதிரை வாகனங்களும் உள்ளன.

அருணகிரிநாதரின் இரண்டு திருப்புகழ் பாடல்களைப் பெற்றுள்ளார் சிங்காரவேலர்.

சைவ-வைணவ வேறுபாடு என்ற சிக்கலும் வேண்டாம் என உணர்த்துவதுபோல் சிங்கார வேலர் எழுந்தருளியுள்ள திருக்கோயில் வளாகத்திலேயே கோல வாமனப் பெருமாளும் கோயில் கொண்டுள்ளார்.

முத்தமிழ்த் தலைவன் முத்துக்குமரன்

ஜடாயு என்ற புள் (பறவை), 'ருக்வேதம்' முருகன் (வேள்) ஆகிய மூவரும் சிவனை வழிபட்ட தலம் 'புள்ளிருக்குவேளூர்' என்று வழங்கலாயிற்று. தேவாரத்தில் புள்ளிருக்குவேளூர் என்று குறிப்பிடப்பட்ட தலமே தற்போது வைத்தீஸ்வரன் கோயில் என்று வழங்கி வருகிறது. இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானே வைத்தியநாத சுவாமி ஆவார்.

தேவாசுரப் போர் ஒன்றில் தேவர்களை அசுரர்கள் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தி விட்டனர். அழியாத மேனியுடைய தேவர்கள் அக்காயங்களால் பெரிதும் வருந்தினர். எவராலும் தீர்க்கவியலாத பிறவிப் பிணியையே போக்குவதால், 'பவரோக வைத்தியநாதன்' என்று புகழப்படும் இறைவன் இருக்கும் புள்ளிருக்குவேளூருக்கு தேவர்கள் வந்தனர். தங்கள் புண்களை ஆற்றி அல்லல் தீர்க்க வேண்டினர்.

இறைவனும் அவர்களுக்கு இரங்கித் தெய்வீக மூலிகைகளை ஏந்திய மருத்துவராக வடிவெடுத்து வந்தான். அவருக்கு உதவிட அம்பிகை கையில் தைலம் கிண்ணங்களை ஏந்தி வந்தாள். உலகின் முதல் டாக்டர் சிவபெருமான்: அவனுக்கு உதவிய அம்பிகை உலகின் முதல் 'நர்ஸ்'.

இருவருமாக தேவர்களின் புண்களுக்கு மருந்திட்டு அவர்களைக் குணமாக்கினர். தேவர்கள் உடல்நலம் பெற்று மகிழ்ந்தனர். தங்களுக்கு உதவிய இறைவனுக்கும் அம்பிகைக்கும் தக்க முறையில், நன்றி செலுத்த எண்ணினர். அக்காலத்தில் தமிழ்நாட்டில் மலிவாகக் கிடைத்த பொருள் முத்து. அதையே அமரர்கள் காணிக்கையாகச் செலுத்தினர்.

இரட்டை வடம், ஒற்றை வடம், பதக்கம், அட்டிகை, கிரீடம் என்று, முத்தாலான பல அணிகலன்களையும் கொணர்ந்து குவித்தனர்.

பாம்பணியும் பரமசிவன் அவற்றை அம்பிகையிடம் கொடுத்தான். அவற்றைத் தாம் அணிவதை விட முருகனுக்கு அவற்றை அணிவித்து அழகு பார்க்க எண்ணினாள் அம்பிகை.

முருகனின் திருமேனி எங்கும் முத்தாலான அணிகலன்களைச் சூட்டினாள் அம்பிகை. குமாரசுவாமியை முத்தாலான அணிகலன்களுடன் தரிசித்த தேவர்கள் 'இனி இவர் குமாரசுவாமி அல்லர்; முத்துக்குமார சுவாமி! எம் ஐயன் முருகன் இனி முத்தையன்!' என மகிழ்ச்சியுடன் கூறினர். இது தான் முருகையன் முத்தையனான வரலாறு.

முத்தமிழுக்கும் தலைவனான முருகனை, சங்கத் தமிழ்த் தலைமைப் புலவனான முருகனை அக்காலத்தில் 'முத்தமிழ் ஐயன்' என அழைத்ததே பின்னர் 'முத்தையன்' என ஆகியிருக்கலாம்.

இத்தலம் சீர்காழிக்குத் தெற்கே ஆறு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செல்வ முத்துக்குமாரசுவாமி தேவியர் இருவருடன் காட்சி தருவார். வைரவேல், தங்கக் கவசம், நவரத்தினம், கவசம் போன்ற விலையுயர்ந்த அணிகலன்களும் இவருக்கு உண்டு.

முத்துக்குமாரசுவாமி ஆறு திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றுள்ளார்.

குமரகுருபரர் 'முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' என்ற அரிய நூலை இவர் மீது இயற்றியுள்ளார்.

தேவர்கள் இவருக்கு முத்தை அளித்தனர். மானிட பக்தர்கள் முத்தைப் போல வெண்மை யான கடல்படு திரவியமான கல் உப்பையே காணிக்கையாக்குகின்றனர்.

வயலூர் வள்ளல் பெருமான்

இத்தலம் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே அமைந்துள்ளது. ஆதவத்தூர் சோமரசம் பேட்டை சூழ அமைந்துள்ளது. வற்றாத வான் கருணையாளன்முருகன் செந்நெல்வயல்களுக்கு நடுவில் அமர்ந்துள்ளான். அடியவர்க்கு ஞான வைராக்யப் பேறு வழங்குகிறான். முத்தி தரும் திருத்தலமாக வயலூரைக் காட்டி அழைக்கின் றான். அடியவர்க்கு இந்த உண்மைப் புலப் பட வேண்டும் என்றே 'வயலூரை வைத்துப் பாடு' என்று அருணகிரிநாதருக்கு முருகன் உத்தரவிட்டதாக அருணகிரிநாதர் பாகான தமிழ்மொழியில் தெளிவாகக் கூறுகிறார்.

உறையூரை ஆண்ட கேசரிவர்மன் இராசேந்திர சோழ தேவன், முதலாம் இராச ராச சோழன் வயலூர்க் கோயிலுக்கு நிலம்-பொன்-கொடுத்துள்ளதைக் கல்வெட்டுச் சான்றுகள் கூறும். இப்பொழுதுள்ள வயலூர்க் கோயிலுக்கு மேற்கே 'ஐநூற்றுவன்' எனப் பெயர் பெறும் ஐநூற்றுக் கால் மண்டபத்தில் சுந்தரதாண்டவ மூர்த்தியை எழுந்தருளிச் செய்து, ராஜராஜசோழன் பெருவிழா நடத்தி யதைக் கல்வெட்டு நமக்கு அறிவிக்கிறது. வய லூர்க்கோயிலின் பழமையை, பெருமையை நாம் இதன் மூலம் அறியலாம். அக்னி தீர்த்தம். தலவிருட்சம், வன்னி மரம்.

சுவாமி மலையில் தந்தைக்கு உபதேசம் செய்த சுவாமிநாதனான முருகன், வயலூரில் அன்றாடம் தாய் தந்தையின் சுழல் பணியும் அன்புப் பாலகனாய் பரிமளிக்கின்றார். மற்ற தலங்களில் தனித்து நின்று பூசை செய்யும் முருகன், இங்கே தெய்வயானை, வள்ளியோடு சேர்ந்து பூசனை செய்கின்ற நிலை தனிச் சிறப் பாகும். வயலூர், ஆலயத்துள் செல்பவர்கள் ஆதிநாதர் ஆதிநாயகி இவர்களை வழிபட்ட பின்னரே முருகனை வணங்குதல் வேண்டும். வயலூரின் பெரும் புகழுக்குக் காரணம், திருப் புகழ் தந்த திருத்தலம் வயலூர்ப் பதியே என் பதேயாகும். 18 திருப்புகழ்ப் பாடல்கள் இத் தலம் பற்றிக் கூறும்.

கடந்த நிலை சிவம். கலந்த நிலை சக்தி. கவரும் நிலை முருகன்; ஆதியாகிய அக்னி. வழி நடத்தும் சக்தி. முக்திப் பேறு அளிப்ப வன் முருகன்.

வயலூர் பிரார்த்தனை ஸ்தலம்: வய லூரில் முத்துக்குமார சுவாமி அழகிய மயில் மேல் அமர்ந்த தோற்றத்தோடு அழகு மிளிரக் காட்சி தருகின்றார். அடுத்திருப்பது வய லூர் முருகப் பெருமான் ஸ்ரீசுப்ரமணியசுவாமி யின் திருமுன்றில் பால் வடியும் முகம்; பக்தர் களைத் தன்பால் ஈர்க்கும் தோற்றம். வய லூர் பதியில் முருகனின் மயிலானது தெய்வ குஞ்சரி பக்கம் முகம் வைத்துள்ளது. முக்திப் பேறு விரும்பும் அடியார்ப் போற்றி வணங்க வேண்டிய மூர்த்தம் வயலூர் வடிவேலன் திருவடிவமாகும்.

பழநிக்கோ, செந்தூருக்கோ வேண்டுதல் செய்து கொண்டவர்கள் அதை வயலூரில் செலுத்தலாம். ஆனால் வயலூர் முருகனுக்கு வேண்டிக் கொண்டு வேற்றூரில்செலுத்தினால், வயலூர் முருகன் தன் அடியவரை வம்புக் கிழுத்து தன் பிரார்த்தனை பொருளை வாங்கி விடுவான் என்பது பக்கத்து கிராம மக்களின் நம்பிக்கை, வயலூர் ஆலயத்துள் வணங்கிட வருபவர்கள் அமைதியாக, சத்தம் போடாமல் வந்து வணங்கிட வேண்டும். வயலூர்வள்ளியை வணங்கியதும் மறக்காமல் வடப்புற மூலையில் உள்ள திருமகளை வணங்கி அருள் பெறுதல் வேண்டும். வயலூர் மண்ணில் விஷ ஜந்துகள் வாழ்வதில்லை என்று கேள்விப்படுகிறோம். சூரியன், தன் மனைவி சாயாதேவியுடன் நவக் கிரக மண்டபத்தில் அமர்ந்துள்ள ஊர் வய லூர். அஞ்ஞானத்தை வெல்லக் கந்தவேள் தன் கை வேலால் அருள் புரியட்டும்:

அலைவாயில் அழகிய முருகன்

திருநெல்வேலிக்குக் கிழக்கே 56 கி.மீ. தூரத்தில் அலைகடல் ஆடும்கரையினில் கந்தன் ஆலயம் அமைந்துள்ளது. திருச்சீரலைவாய், செந்தில், செந்தூர் எனும் இவ்விடத்திலே முருகனின் முதல் கோயில் அமைக்கப்பட்டது. சூரனை வென்றதால் தேவர்கள் மகிழ்ந்து வழிபடும் தலம். தேவசேனாபதியன்றோ நம் முருகன். வியாழ பகவானும் வழிபட்ட தல மாகும். பேச்சு வராத குழந்தையாய் இருந்த குமரகுருபரரின் நாவில் வேலால் எழுதி முருகன் அருள்பாலித்தார். கந்தர் கலிவெண்பா கவி னுறப் பிறந்தது.

சந்தன சைலம் என்னும் மணலும், கல் லும் கலந்த நுரை மணற் கல்லாய் ஆன மலைக் குன்றில் ஆலயக் கருவறை அமைந்துள்ளது. செந்தில், வள்ளி, தேவயானை மூவரும் கிழக்கு நோக்கி நின்றுள்ள திருக்கோலம். மூலவர் நான்கு திருக்கரங்களில் அபயம், வரதம், பூ, ஜெபமாலையுடன் காட்சி அளிக் கிறார். மூலவர் தண்டாயுதம் தாங்கிய வண்ணம் சூரசம்ஹாரத்தின் பின் சிவபூசை செய்வதாக ஐதீகம். முருகனின் குகைக்குப் பின்புறம் உள்ள குகைப் பிரகாரத்தில் பஞ்ச லிங்க சுயம்பு மூர்த்திகள் உள்ளன. ஊரின் முகப்பிலிருந்து திருக்கோயில் செல்லும் வழியில் குமரனின் இடத்தைக் காட்டும் வகையில்,



அமர்ந்திருப்பதால், 'தூண்டி விநாயகர்' எனப் படுகிறார்.

நுழைவாயில் முதல் கோயில் வரை சுமார் 0.6 கி.மீ. மழை, வெயில் படாதவாறு அமைக் கப்பட்ட கல் மண்டபம் அழகுடன் திகழ் கிறது. தெற்கு நோக்கிய திருக்கோயில். மேற்கு திசையில் மட்டும் ராஜகோபுரம் உள்ளது. 3 பிரகாரங்களைக் கொண்டுள்ளது. 3-ஆம் பிராகாரத்திற்கு வெளியே கடற்கரை ஓரத் தில் உள்ள குடவரைக் கோயிலில் அர்த்த சித்திர வடிவில் வள்ளி நாயகி. இதனை வள்ளி ஒளிந்த குகை என்பர். முருகன் கைவேலால் அமைத்த தீர்த்தம். 1 அடி சுற்றளவு கொண்ட 'நாழிக் கிணறு' என்பது அள்ள அள்ளக் குறை யாத அமிர்தம் போன்ற தீஞ்சுவை நீர் நிறைந்த கேணி. திருப்புகழில் 83 பாடல்களைக் கொண்ட தலம். முருகனுக்கு சித்திரையில் அன்னாபிஷேகம் நடைபெறும். மாதக் கார்த்திகை, சஷ்டி, வைகாசி விசாகம், ஆவணி விழா, கந்தர்சஷ்டி விழா சிறப்பான கொண் டாட்டங்கள். விபூதியே சிறப்பு பிரசாதம். இலை விபூதி என பக்தர்களுக்குத் தரப்படும் பன்னீர் இலையில் உள்ள 12 நரம்புகள் இறைவ னின் 12 திருக்கரங்களை நமக்கு நினைவூட்டு கின்றன. இங்கே 13 தீர்த்தங்கள் உண்டு. இவ் வூர் கடல் மட்டத்திலிருந்து தாழ்வானது. செந்தூருக்குச் செல்வோம். மனச் செம்மை பெறுவோம்.

கம்பீரக் கோலத்தில் கந்தவேள்:

அழகு மிளிரும் இடமெல்லாம் அழகன் முருகனின் திருக்கோயில்களே! தமிழ்க் கடவு ளாம் நாஞ்சில் வள நாட்டிலும் பல இடங்களில் குடி கொண்டுள்ளான். நாகர் கோயிலிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் சாலையில் 10 கி.மீ. தொலைவினில் உள்ளது குமாரகோயில். குமரன் என்றாலே இளமை யும், அழகும் ததும்பி வழியும் அன்றோ?

வழக்கமாக முருகனின் வலப்பக்கத்தில் தான் வள்ளி நாச்சியார் இருப்பார். மாறாக முருகனின் இடப்பக்கத்தில் வள்ளியிருக்கும் ஓர் அரிய தலமே குமார கோயில் எனும் வெளி மலை. இடப்பக்க வள்ளி 6 அடி உயரம். அவளைவிட அழகன் முருகன் இரண்டரை அடி உயரம் அதிகம். அதாவது எட்டரை அடி உயரக் கம்பீரத் தோற்றம். கிழக்கு நோக் கிய சந்நிதி. இங்கு தெய்வ யானை இல்லை. சிவாச்சாரியார்கள் ஏணியின்மீது ஏறித்தான் அபிஷேகம்-அலங்காரம் செய்ய வேண்டும். அழகு வள்ளி என்றால் தினைப்புனம் இல்லா லாமலா? இத்தலத்தின் அருகில் வள்ளி எழுந்த ருளிய தினைப்புனம்; வள்ளி சோலை; கிழவன் சோலை ஆகிய தலங்களும் உண்டு. வள்ளியை முருகன் இத்தலத்தில்தான் கைத்தலம் பற்றி னார் எனும் ஐதீகம் காரணமாக, வள்ளி கல் யாணம் இக்கோயிலில் சிறப்பாக நடைபெறு



கிறது. தித்திக்கும் திருப்புகழ், முத்துப்பிள்ளை முருகனை இத்தலத்திலும் பாடிப் போற்று கின்றது.

சீக்கிரம் வந்தருளும் சிரகிரி வேலன்

கொங்கு நாட்டிலே குமரனுக்கே கோயில்கள் அதிகம். அவற்றுள் சிரகிரி எனும் சென்னிமலை மீது சோயில் கொண்டு விளங் கும் முருகன் மிகவும் பிரசித்தமான தெய்வம். வரப்பிரசாதி. கோடிக்கணக்கான பக்தர்களின் குல தெய்வமாக விளங்குகிறார். அறுபடை வீடுகளுக்குச் சமமானதாகக் கருதப்படும் இத் தலத்தை அருணகிரிநாதர் பாடி, படிக்காசு பெற்றார். கந்தர் சஷ்டிக் கவசம் பாடிய பால தேவராய ஸ்வாமிகளும் தனது துதியில் 'சிரகிரி வேலவன் சிக்கிரம் வருக'' என்று பாடியிருப்ப திலிருந்து இத்தலத்தின் மேன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

சென்னிமலை ஈரோட்டிலிருந்து 30 கி மி தொலைவில் அமைந்து உள்ளது. கோவை யிலிருந்து 90கி.மீ. தொலைவிலும், காங்கயத்தி லிருந்து 10 கி.மீ. தொலைவிலும், பெருந் துறையிலிருந்து 15 கி, மீ. தொலைவிலும் உள்ளது. எல்லா ஊர்களிலிருந்தும் பஸ் வசதி உள்ளது. ஊரின் மிக அருகில் மலைக்சோயில் இருக்கிறது.

மேலே செல்வதற்கு வசதியாக பஸ், கார் செல்ல நல்ல தார்ப் பாதை போடப்பட் டுள்ளது. நல்ல படிக்கட்டுகள் உள்ளன. 1320 படிக்கட்டுகள் ஏறிச் செல்ல வேண்டும். உச்சி யில் அழகிய தண்டாயுதபாணி சென்னிமலை நாதர் என்னும் திருநாமத்தோடு அருள்புரி கிறார். ஒரு கரத்தினில் தண்டம் ஏந்தியவ ராய், மறுகரத்தை இடுப்பின் கீழ் வைத்து, கௌபீனதாரியாக கம்பீரமாகக் காட்சி தரும் நின்ற திருக்கோலத்தைக் காணக் கண் கோடி வேண்டும். பழனியைப் போல சாந்தம் தவழும் தனிச் சந்நிதியில் குடி கொண்டுள்ளார்.

அர்த்த மண்டபத்தில் விநாயகர், உற்சவ மூர்த்திகள் கொலு வீற்றிருக்கிறார்கள். பிரா காரத்தில் கைலாசநாதர், அக்னிநாதர், அம்மன் சந்நிதிகளும் நவக்கிரகங்களும் உள்ளன. ஆல யத்தின் பின்புறம் வழியாக 100 மீட்டர் தூரத் தில் அமைந்துள்ள ஆலயத்தில் வள்ளி, தெய்வ யானை இருதேவியருக்கும் சந்நிதிகள் உள்ளன.

'சிரகிரி' எனும் பெயர் வரக் காரணம்

ஒரு சமயம் ஆதிசேடனுக்கும், வாயு பக வானுக்கும் தம்முள் யார் பெரியவர் என்னும் சர்ச்சை ஏற்பட்டதாம். தங்கள் பலத்தைப் பரீட்சிக்க இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி ஆதிசேடன் மேரு மலையைச் சுற்றிப் படுத்துக் கொள்ள வேண் டும். வாயு தனது சக்தியினால் அதனை விலகச் செய்ய வேண்டும் என்பதாக முடிவு செய்து கொண்டனர்.

போட்டியில் வாயு பகவானே வெற்றி பெற்றார். ஆதிசேடனின் தலை வந்து விழுந்த இடமே சென்னிமலை ஆகும். சிரம் விழுந்த இடம் சிரகிரி ஆனது என செவிவழிச் செய்தி யாய்க் கூறி வருகின்றனர். (சிரம்-சென்னிகிரி -மலை)

இத்தலத்தில் குரங்குகள் அதிகம். இங்கு தைப்பூசத் திருவிழா சிறப்பாக பத்து தினங்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. கிருத்திகை மற்றும் விசேட நாள்களில் தேவஸ்தானப் பேருந்தில் ஏறி மலைக்கோயிலுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன்பு இரண்டு காளைமாடுகள் அபிஷேகப் பொருள்களைத் தாங்கி 1320 படிகள் ஏறி இம்மலைக்கு வந்தது மிகவும் வியப்புக்குரியது.

சென்னி மலை

சோலமயில் வாகனனாம் குமரனவன் வாழும்
மலை
கோடானு கோடி பக்தர் கூடுகின்ற புண்யமலை
தண்டேந்தி பாலனவன் தரணி எல்லாம்
காக்கும் மலை
சிந்தைக்குகந்தமலை, சிரகிரியாம்சென்னிமலை
கங்கை அணிந்தசிவன்ஆளுவதோ கயிலைமலை
சங்கேந்தும் மாமன் அவன் வாழுவதோ
ஏழுமலை
வில்லேந்தும் தம்பியவன் விரும்புவதோ சபரி
மலை
வேலவனாம் என் இறைவன் கோயில் கொண்ட
சென்னிமலை
பாட்டிற்கோர் அருணகிரி படிக்காசு பெற்ற
மலை
பக்தியாய்ப் பணிபவரின் பாவம் எல்லாம்
தீர்க்கும் மலை
ஆண்டிபோல் வேடம் கொண்டு அப்பன்
நம்மைக் காக்கும் மலை
ஆனந்தம் சேர்க்கும் மலை ஆண்டவனின்
சென்னிமலை.

விராலி மலை வீற்றிருக்கும் வேலவன்:

முருகனின் மூர்த்தங்களில் 'ஆறுமுகம்' மிகவும் பெருமையுடையது. கருணை கூர்முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு கந்தப் பெருமான் கலியுக தெய்வமாய் விளங்குகின்றான்.

'அஞ்சுமுகம் தோன்றாமல்
ஆறுமுகம் காட்ட வந்த
செஞ் சரணச் சேவடியைச்
சிந்தை வைப்பதெந்நாளோ!''

என்று தாயுமானவர் பாடியிருக்கிறார்.

மற்ற தெய்வங்களுக்கு இல்லாத சிறப்பு அம்சமாய் முருகப் பெருமான் ஆறு திருமுகங்களைப் பெற்றுத் தன் அடியவர்களை இரட்சிக்கின்றான். இரு கரம் கூப்பி வேண்டுவோருக்கு தனது பன்னிரு கரங்களினால், அருளை வாரி வழங்கும் வள்ளல் சண்முகம். ஆறுமுகங்களோடு முருகன் கோயில் கொண்ட தலங்கள் ஆயிரம் இருப்பினும் விராலி மலையைப் போன்ற மயில்கள் ஆடும் அழகானதொரு மலையைக் காண்பதரிது.

இத்திருத்தலம் திருச்சியிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள மதுரை செல்லும் பாதையில் உள்ளது. மணப்பாறையில் இருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. கான மயிலாடும் இக்கவின்மிகு மலை மீது ஏற 207 படிகள் உள்ளன. ஆறுமுக சுவாமி அன்னையர் இருவருடன் பன்னிரு கரங்களோடு மயில் மீது அமர்ந்து காட்சிதருகிறார். அருணகிரியார்பாடிய திருத்தலம். புதுக்கோட்டையிலிருந்து 40 கி.மீ தொலைவில் உள்ளது.

ஆறுமுகனைத் தவிர விஸ்வநாதர் விசாலாட்சி, வீரவாகு, சனகாதியருக்கு சன்னதிகள் உள்ளன. கீழே இறங்கும் வழியில் பாதி வழியில் சொக்கநாதருக்கும் மீனாட்சி அம்மைக்கும் சந்நிதிகள் உள்ளன. கோவிலில் கிணறு இல்லை. கீழே நாகதீர்த்தக் குளத்திலிருந்து நீரை எடுத்துச் செல்வர்.

இங்கே 'விராலி நாதர் குகை' என்று ஒன்று உள்ளது. அதன் வழியே சென்றால் திருச்செந்தூருக்குச் செல்லலாம் என்பர் சிலர். அவ்வழி சென்றால் மேலே ஆறுமுகன் சந்நிதிக்குப் போகலாம் என்பர் சிலர். யாரும் போய்ப் பார்த்தது கிடையாது. சதாசிவப் பிரம்மேந்திரர் இக்குகையில் தங்கித் தவம் செய்ததாக செவிவழிச் செய்தி கூறுகிறது. அருணகிரிப் பெருமான் இத்தலத்தில் தான் அஷ்டமாசித்திகளும் கைவரப் பெற்றார்.

நைவேத்திய விசேஷம் :

முருகனுக்கு பாலும் தேனும் தினைமாவும் பஞ்சாமிருதமும் வழக்கமாக நிவேதனம் செய்வர். ஆனால் இத்தலத்தில் இவற்றோடு சேர்த்து ஆறுமுகனுக்கு காலசந்திக்கும் சாயரட்சைக்கும் சுருட்டு நிவேதனம் செய்யப்படுகிறது என்பது மிகவும் ஆச்சரியமான ஒரு விஷயம்.

ராமச்சந்திரத் தொண்டைமான் புதுப்பேட்டையை ஆண்டு வந்தான். அவன் சிறந்த முருகபக்தன். அவனுக்குக் குன்ம நோய் ஏற்பட்டது. அரசன் மனம் வருந்தி முருகனைத் துதித்தான். ஆறுமுகன் அவன் கனவில்தோன்றி 'மன்னா! விராலி மலையில் எனக்கு செய்யும் நிவேதனத்தில் சுல் அதிகமாக உள்ளது. ஆகவே எனக்கு சுருட்டு நிவேதனம் செய்க' எனக் கூறி மறைந்தார்.

அரசன் இதன் பொருள் தெரியாது வாளாவிருந்தான். முருகன் மீண்டும் அவன் கனவில் தோன்றிக் கட்டளையிடவே அரசன் அதன்படி செய்தான். அன்று தொட்டு இன்று வரை தேவஸ்தானத்திலே புகையிலை தருவித்து சுருட்டுத் தயாரித்து நிவேதனம் செய்து வருகிறார்கள்.

மணிக்குன்றத்து மாமுருகன்:

பழைமையான இத்திருத்தலம் முருகனின் அருட்தலமாகும். வேலூரிலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து வேலூர் செல்லும் பாதையில் 'கீழ்மின்னல்' எனும் கிராமத்தில் அமைந்துள்ள சிறிய மலைக் கோயில்.

(மற்றொரு ரத்னகிரி எனும் தலம் கரடு எனும் பெயருடன் கோவையிலிருந்து சத்திய மங்கலம் செல்லும் பாதையில் கோவையிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது)

கீழ்மின்னல் ரத்னகிரி மலை ஏற 150 படிகள் உள்ளன. அடிவாரத்தில் வரசித்தி விநாயகர் ஆலயம் உள்ளது. உச்சியில் பால முருகன் நின்ற திருக்கோலம். நான்கு திருக்கரங்களுடன் இருபுறமும் வள்ளி தேவசேனா தேவியருடன் காட்சி தருகிறார்.

'கயிலைக் கருவி' எனத் தொடங்கி 'சிலதைப் பதி ரத்தின வெற்பதிற் திகழ் மெய் குமரப் பெருமானே' என முடியும் அருணகிரி நாதரின் திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம்.

இத்திருத்தலம் இடையில் கவனிப்பாரற்று இருந்தது. கருவறையில் வேல் மட்டும் பூசிக்கப் பட்டு வந்தது. முருகனால் ஆட்கொள்ளப் பட்ட மௌனகுரு பாலமுருகனடிமை ஸ்வாமிகளின் பெரு முயற்சியால் மீண்டும் புத்துயிர் பெற்றது.

கடந்த 25 ஆண்டுகளாக ஸ்வாமிகள் செய்து வரும் திருப்பணிகள் ஏராளம் ஏராளம்:

ஆலயத்தைப் புதுப்பித்து, புதிதாக விக்ரகங்கள் செய்து குடமுழுக்கு செய்துள்ளார். விலைமதிப்பற்ற அழகிய ஆபரணங்கள், உற்சவ மூர்த்திகள், தங்கரதம் போன்றவற்றைச் செய்துஆலயத்திற்கு லட்சக்கணக்கான நிதியை சேர்த்துள்ளார். தற்பொழுது சுற்று மண்டபம், விமானம் ஆகிய திருப்பணிகள் ரூ 27 இலட்சம் மதிப்பீட்டில் நன்கொடையாளர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு பூர்வாங்கப் பணிகள்நடைபெற்று வருகின்றன.

ஸ்வாமிகள் இறைபணியோடு நிற்காமல் சீரிய பலசமுதாயப் பணிகளையும், தொடர்ந்து செய்து வருகிறார். தாங்க முடியாத மனக் கவலைகள் உள்ளவர்கள், தீராத பிணியால் வருந்துபவர்கள் வறுமையினால் வாடித் துடிப்பவர்கள் இங்கு வந்து ஆண்டவனைத் தொழுது, அடியாரையும் தொழுது அவரது அருட்கடாட்சத்தினால் குறைகள் நீங்கப் பெற்று இன்புற்றுத் திரும்புகின்றனர்.

பக்தர்க்குப் பதம் தரும் பழனியாண்டவர்

கயிலையில் வீற்றிருந்த சிவன்—பார்வதியிடம் ஒரு சமயம் மாதுளங்கனி ஒன்றைக் கொடுத்தார். அதை முருகனும் விநாயகரும் தமக்கே வேண்டும் என்றனர். உலகை முதலில் சுற்றி வருபவருக்கே கனி என்றார் சிவபிரான். முருகவேள் மயில்மேல் ஏறி உலகை வலம் வரப் புறப்பட்டார். விநாயகரோ தாய்—தந்தையை வலம் வந்தே தாம் உலகைச் சுற்றி வந்து விட்டதாக விளக்கம் சொன்னார்; மயில் வாகனத்தில் உலகை வலம் வந்து திரும்பிய முருகனுக்குக் கோபம் வந்தது. மயிலினின்றும் இறங்கியதும் கிரீடம், குண்டலம், பொன்னாடை முதலான அணிகலன்களையெல்லாம் கழற்றி எறிந்தார். ஆயுதங்களையுந் துறந்தார். கௌபீனதாரியாகவே, முருகன் தண்டம் ஒன்றை ஏந்திக் கொண்டு கயிலையை விட்டுப் புறப்பட்டார்—பரதேசியாக.

திருவாவினன் குடிக்கு வந்து சேர்ந்த முருகவேள், சிவகிரி என்ற குன்றின் மீது தண்டாயுதபாணியாக நிற்கலானார். பிரிவாற்றாத உமா தேவியும், சிவபெருமானும் ஆவினன் குடி ஏகினர். தாய், தந்தையைக் கண்டதும் தொலைவில் இருந்தபடியே முருகப் பெருமான் வணங்குகிறார். தேவி செல்வனை எடுத்து மடியில் வைத்துக் கொஞ்சி அதன்பின் சிவபெருமானிடம் தந்தார். சிவபெருமான் தண்டாயுதபாணியை மடியில் வைத்தபடி, 'மாதுளங்கனியும் உனக்கு ஒருபழம் ஆகுமோ? நீயே ஒரு ஞானப் பழம், உனக்கு வேறொரு பழமும் வேண்டுமோ? என்று மொழிந்ததாக பழனித் தலப் புராணம் குறிப்பிடுகிறது. இப்படி உமா தேவியும் சிவபெருமானும்தண்டாயுதபாணியை நோக்கிப் 'பழம் நீ என்றதனால் ஆவினன்குடி பழனி ஆயிற்று; முருகன் 'பழனியாண்டவர்' என்று பெயர் பெற்றார். அந்தத் தல புராணப் பாடல்:

''ஈசன் உருகி மடியினில் வைத் (து)
என்றும் இளையோய்! அறிவுடையை!
தேசுதருநம் வாள்நுதற்கண்
மணிநீ சிறுவனோ! பெரியை!
வாசநறுமென் கனியும் ஒரு
கனியோ! மதுரமொழி வாயால்
பேச அரிய மறைஞானப்
பிள்ளைப் பழம்நீ! எனப் புகன்றான்.''

தத்துவப் பொருள் பொதிந்த புராண நிகழ்ச்சியாகும் இது. உலகத்தையே தாய்—தந்தையிடம் விநாயகப் பெருமான் கண்டார் என்பது ஒரு தத்துவம். உலகத்தில் பல பகுதிகளிலும் உள்ள அடியவரைக் காக்கத் துடிக்கும் தெய்வப் பண்பு முருகனிடம் பிறந்தது என்பது மற்றொரு கோணம்.

துறவுக் கோலத்தில் பழனி மலையில் கோயில் கொண்டிருக்கும் தண்டாயுதபாணி

வேண்டுவோர் வேண்டும் வரங்களையெல்லாம் விரைந்து தருபவர்; துறவிகளுக்கும் வேண்டாமைச் செல்வத்தை அருளுபவர். பழனியாண்டவரின் அருள் வடிவத்தில் வைராக்கிய சௌந்தர்யத்தைத் தரிசிக்கிறோம். தாம் பற்றற்ற நிலையில் நின்று லௌகிக இன்பம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்ததும் மோட்ச வீடுறச் செய்வதும் ஆகிய வரப் பிரசாதத்தை வரம்பின்றிப் பொழிந்து கொண்டிருக்கும் அருள் வடிவம் தண்டபாணி.

பழனி மலை மீதுள்ள முருகப் பெருமான் போகர் என்னும் சித்தரால் என்றும் அழியாத (ஒன்பது) நவ பாஷாணங்களை உருக்கி ஒன்று சேர்த்து அமைக்கப் பெற்றவர்.

வரங்குலவு பரங்கிரியில் வரமருளும் முருகன்

உல்லாசம், நிராகுலம், யோகம், இதம், சல்லாபம், விநோதம் என்கிற ஆறு விதமான நிலைகளில் ஆதார மூர்த்தியாக முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆறு திருத்தலங்கள் ஆறு படைவீடுகள் ஆகும். அருணகிரிநாதர் கந்தரனுபூதியில்.

''உல்லாச நிராகுல யோகவித சல்லாப
விநோதனும் நீ.''

என்று முருகனைப் போற்றுகின்றார்.

எனவே உல்லாசம் எனும் உள்ளக் களிப்பு நிலையில் முருகன் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம், ஆறுபடை வீடுகளுள் முதலாவதாகக் கருதப்படுகிறது. இத்தலம் மதுரை மாநகருக்குத் தென்மேற்கில் 6 கல் தொலைவில் அமைந்துள்ளது.

இந்திரன் புதல்வியான தெய்வயானையை மணம் புரிந்து புதுமணக் கோலத்தில் முருகன் காட்சி தருவது காண்போர் மனத்தில் களிப்பை விளைக்கிறது. மலையிலேயே குடைந்து வடிக்கப் பெற்ற அழகிய திருவுருவாக ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு வடக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் உள்ளார் திருப்பரங்குன்றத்து முருகன். ஏனைய படைவீடுகளில் எல்லாம் நின்ற திருக்கோலத்திலேயே காட்சி தரும் முருகன் இங்குதான் அமர்ந்துள்ள திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். பரங்குன்றத்துப் பெருமான் இடக்காலை மடித்து வலக்காலைத் தொங்க விட்டு, இடப்பக்கம் தெய்வயானையும், வலப்பக்கம் நாரதரும் துணையாக, அமர்ந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

திருப்பரங்குன்றத்து முருகவேள் சேனாபதியாகி, சாதுக்களுக்காக அசுரவதம் செய்து, தெய்வயானையின் அழகிய மணவாளனாக இங்கே பக்தர்களைப் பரவசப்படுத்துகின்றார். இந்த மணவாளப் பெருமான் கடம்பப்பூமாலையும் கழுத்துமாய் ஒரு போக மூர்த்தியாகத் தோன்றுகிறார். கடம்ப மாலை சூடிய கந்தவேள் தமக்கு நக்கீரன் தமிழ்மாலை சூட்ட வேண்டும் என்று விரும்பியதால் பிறந்ததே திருமுருகாற்றுப் படை.

'தெய்வங்களுள் சோமசுந்தரக் கடவுளையும், மானிடருள் பாண்டிய மன்னனையும் மட்டுமே நான் என் தமிழ்ப் பாவால் பாடுவேன்; வேறு எவரையும் தமிழால் பாடித் தீண்டேன்' என்று விரதம் கொண்டிருந்தார் நக்கீரன். மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் வரையிலும் சென்று அங்குள்ள சரவணப் பொய்கையில் தினமும் நீராடிச் சிவபூசையும், ஐந்தெழுத்தோதலும் செய்து வந்த நக்கீரன் முருகப் பெருமானைத் தொழுவதில்லை. இந்த செருக்கை ஒடுக்கி நக்கீரனின் குறையினைப் போக்கி மறக்கருணை செய்யத் திருவுளம் கொண்டார் பரங்கிரி முருகன். உக்கிரன், அண்டாபரணன் என்ற இரு பூதங்களை அனுப்பி நக்கீரனை ஒரு குகையிலே அடைத்துவிடச் செய்தார் முருகவேள். சிறைப்பட்ட நக்கீரனுக்குத் தம் துன்பநிலைக்கான காரணம் சில நாள்கள் கழித்து விளங்கியது. 'கந்தருக்குத் தமிழ் சூட்டாத காரணம் இது' என்று விடைகண்ட நக்கீரன் திருமுருகாற்றுப்படை பாடினார். 'உலகம்' எனத் தொடங்கி 'கிழவோனே' என்று முடிகிறது திருமுருகாற்றுப்படை. முருகக் கடவுள் நக்கீரனின் கனவில் தோன்றி 'நாம் பூலோகத்தில் கிழவனாக வரச் சிலகாலம் ஆகும்' என்று சொன்னார். உடனே நக்கீரனும் தம்முடைய தமிழ் மாலையில் 'இளையோன்' என்று ஒரு பாடலையும் பாடிச்சேர்த்து முருகனின் திருவடியில் சமர்ப்பித்தார்.

இதனால் மனம் மகிழ்ந்த முருகப் பெருமான் குகையின் வாசலை அடைத்திருந்த பாறையைத் தம் வேலாயுதத்தால் கீறி இரு பிளவாகப் பிளந்து நக்கீரனை விடுதலை செய்தார் என்கிறது தலபுராணம்.

மயில் வாகனத்தில் தெய்வயானை சமேத ராக முருகப் பெருமான் காட்சியளித்ததும்— நக்கீரன் ஆனந்தக் கண்ணீர் சொரிய, புளகாங் கிதம் அடைந்து, அந்த அருளானந்தம் வாக் கில் வெளிப்பட முருகனைப் போற்றினார்;

பனிவரையில் மகள் உதவ
உண்டருளும் செங்கனிவாய்ப் பாலா
போற்றி!

குனிசிலைவேள் மிகநாண
வடிவழகு கொண்டருளும்
குமரா போற்றி!

வினையம் எழும் சூர்கிளையை
வேரறுக்க உளத்தில் வைத்த
விருத்தா போற்றி!

முனிவர் உளம் கனியமிகு
வரங்குலவு பரங்கிரியின்
முருகா, போற்றி!

இந்த வரங்குலவு பரங்கிரியில் முருகப் பெருமான் தேவயானையை மணந்த பங்குனி உத்திரத் திருநாள் திருப்பரங்குன்றத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழ் ஓதுவித்த தணிகை வேலன்

'குன்று தோறாடல்' எனும் பெயரால் குறிக்கப்படும் தொகைத் தலங்களில் தலை யாயது தணிகை மலை. வேட்டுவ மன்னன் நம்பிராசனின் வளர்ப்பு மகளாய் வந்த வள்ளி யம்மையை மணம் புரிந்த வடிவேல் அண்ணல் திருமணத்தைத் தொடர்ந்து தம்பதி சமேத ராக வீற்றிருக்கத் தேர்ந்தெடுத்த இடம் தணிகை மலை, இம்மலையின் சிறப்புகளைச் சொல்லும்படி வள்ளியம்மை கேட்டதாகவும், முருகவேள் பதிலுரைப்பதாகவும் கந்தபுராணம் விவரிக்கிறது. அந்த முருகவேள் வாக்கிலேயே நாமும் தணிகைமலைச் சிறப்பினை அறியலாம்.

''செங்கண் வெய்யசூர்ச்
செருத்தொழிலினும் சிலைவேடக்
தங்களிற் செயுஞ்
செருத் தொழிலினும் தணிந்திட்டே
இங்கு வந்தியாம்
இருத்தலால் செருத்தணி என்றோர்
மங்கலம் தரும்
பெயரினைப் பெற்ற மால்வரையே.''

''நாம் சூராதி அசுரர்களோடும் வேட்டுவ ரோடும் செய்திட்ட போரின் கோபம் தணிந்து இங்கு வந்தமையால் இம்மலைக்கு 'செருத்தணி' எனும் மங்கலப் பெயர் உண்டாயிற்று,'' என் றார் வேலவன். தொடர்ந்து, 'மலர்களில் சிறந்தது தாமரை; ஆறுகளில்சிறந்தது கங்கை, தலங்களில் சிறந்தது காஞ்சி, அதுபோன்று

மலைகளில் சிறந்தது செருத்தணி'' என்று கூறி னார் முருகப் பெருமான்.

மேலும் ''இத்திருமலையில் ஒரு சிறு தருமம் செய்தாலும் ஒன்றுக்கு ஆயிரம் மடங்கு அதிகமான புண்ணியம் உண்டாகும். இம் மலையை வலம் செய்தோர் கோடி அசுவமேத யாகம் செய்த பலனை அடைவர். இம்மலை யில் ஏற எண்ணி ஒரு படியில் அடி வைத்த உடனேயே அவர் தம் வினைகள் தணிந்து விடும் என்பதாலும் திருத்தணிமலை என்று இது பெயர் பெறும்'' என்று எம்பிரான் உரைத்தார்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருத் தணி மலையில் எழுந்தருளியுள்ள தணிகை வேலன் தமிழ் முனிவரான அகத்தியருக்குத் தமிழிலக்கண வரம்புகளையும் ஞானநிலையை யும் உபதேசித்தார் என்று தலபுராணம் கூறு கிறது.

400 அடி உயரம் கொண்ட தணிகை மலை யில் ஏறி தணிகாசலபதியைக் காண வேண்டு மெனில் நாம் 365 படிகளைக் கடக்க வேண்டும். தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாளன்று இங்கு நடக்கும் படிஉற்சவம் சிறப்பானது. பஞ்சாட் சரப் படிகள் என்னும் 5 படிகள் ஏறி முதல் பிராகாரம் சென்றதும் தென்பகுதியில் வள்ளி நாயகி சந்நிதியையும் வடபகுதியில் தேவ சேனாதேவி சந்நிதியையும் காணலாம்.

கருவறையில் தணிகை வேலன் சுந்தரத் திருவுருவுடன் இடக்கரத்தைத் தொடையில் வைத்து, வலக்கரத்தில் வேலனைத் தாங்கி தனித்து நின்று, காட்சி தருகின்றார். இவர் ஞான சக்திதரர் ஆவார். வாகனமாக மயிலுக் குப் பதில் யானை உள்ளது இத்தலத்து விசேஷ மாகும்.

சேலம் கோட்டை மாரியம்மன் கோயில் சிறப்பு

எம். சுப்பிரமணியன், எம். ஏ.,

நிர்வாக அதிகாரி,

அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில்,

சேலம்.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாய் விளங்கும் அன்னை பராசக்தி, காசியிலே விசாலாட்சியாய், காஞ்சியிலே காமாட்சியாய், மாட மாளிகைகள் சூழ மதுரையிலே மீனாட்சியாய், வேலவனுக்கு வேலளித்த திருவேற்காட்டில் கருமாரியாய், கன்னியாகுமரியிலே நித்தந்தவம் செய்யும் குமரித்தெய்வமாய், பஞ்ச கிருத்தியங்களைச் செய்துமக்களின் உடற்பிணி, உள்ளப்பிணி தீர்க்கும் அருஞ்சக்தியளாய் நின்று அருளாட்சி நடத்தி வருகிறாள். அந்த அன்னை பராசக்தியின் அம்சமே 'கோட்டை மாரியம்மன்'' என்று சேலம் மாநகரில் எழுந்தருளி, பக்தர்களின் குறை தீர்த்து, பாவச் சுமை தீர்த்து அடியார்களின் உள்ளக் கோயில்களிலே எழுந்தருளி இருப்பவள் ஆவாள்.

சேர மன்னர்களின் காலத்திலே மங்கள மாபுரியென்றும், சைலம் (மலை) நிறைந்த பகுதியாக இருத்தலாலும், சீலம் நிறைந்த மக்களே வாழ்ந்து வருவதாலும் சேலம் என்று பெயரைப் பெற்று விளங்கும் இப்புண்ணியத் தலத்தில் தான் கோட்டை மாரியம்மன் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்தருளி பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் வினை தீர்த்து, அருள்பாலித்து வருகின்றாள். இத்திருத்தலம் சேலம் ரயில் சந்திப்பிலிருந்து சுமார் 6 கி.மீ. தூரத்திலும், சேலம் பழைய பேருந்து நிலையத்திற்கு மிக அருகாமையிலும் அமைந்த ஒரு புண்ணியத்தலமாகும்.

சேலத்தில் அமைந்துள்ள எட்டுப்பட்டி திருக்கோயில்களிலும் கோட்டை மாரியம்மன் திருக்கோயிலே ஈடும், இணையும் இல்லாக் கோயிலாகும். ஆடி மாதத்தில் கோட்டை மாரியம்மனுக்கு ஆண்டுதோறும் சிறப்பான விழா நடைபெறும். சேலம் மாநகரிலேயே நடைபெறும் மிகப் பெரிய திருவிழா என்று இதைக் கூறலாம்.

ஆடித்திருவிழா ஆடி முதல் செவ்வாய்க் கிழமையில் பூச்சூட்டலுடன் தொடங்கும். இரண்டாம் செவ்வாய்க்கிழமையில் கம்பம் போடுதலும், மூன்றாம் செவ்வாய்க் கிழமையில் சக்தி கரகம் எடுத்தலும் நடைபெறும். அதற்கடுத்த நாள் புதன்கிழமை பொங்கல் படைத்தல், உருளுதண்டம் போடுதல் முதலியவை நடைபெறும். ஆடி மாதம் 18-ஆம் நாளில் ஊஞ்சல் உற்சவ விழாவும், விழா இறுதி நாளில் சத்தாபரணமும், அடுத்த நாள் மஞ்சள் நீராட்டு விழாவும் மிகச்சிறப்பாகநடைபெறும். இவ்விழா மொத்தம் 22 நாட்கள் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் அபிஷேக, ஆராதனைகளும், மக்களின் பக்திப் பரவசமும், அதன் அடிப்படையில் எழும் ஓங்கார ஒலிகளும் கண்டு, கேட்டு, உற்று அறிய மக்கள் அலை அலையாய்த் திருக்கோயிலுக்கு வருவார்கள்.

மணவினை நாடி வருவாரும், மனப்பிணி தீர்க்க வருவாரும், குழந்தை வரம் வேண்டி வருவாரும், கோட்டை மாரியம்மன் கோயிலில் அன்றாடம் காணும் காட்சிகளாகும்! அன்னையின் திருக்கோயிலில் ''பூப்போட்டுக் கேட்டல்'' என்பது பிரசித்தமான நிகழ்ச்சியாகும்.

கேட்டார்க்குக் கேட்ட வரமெல்லாம் வழங்கும் கோட்டை மாரியம்மன், நீதி மன்றங்களில் தீராத வழக்குகளையெல்லாம் தீர்த்து வைப்பவள்; மிகப்பெரும் மருத்துவர்களும் கைவிட்ட பிணிகளையெல்லாம் போக்கும் ஆற்றல் பெற்றவள்; வேண்டியோர்க்கு வேண்டிய வரங்களையெல்லாம் வாரி வழங்கும் வள்ளல் தன்மை பெற்றவள்; கற்றார்க்கும் கல்லார்க்கும், உள்ளார்க்கும் இல்லார்க்கும், ஒப்பற்ற நாயகியாய் நின்று அருள்பாலித்து வரும் அன்னை கோட்டை மாரியம்மன் அருளை நாடுங்கள்! வந்த வினையும் வருவினையும்நீக்கி, இம்மைப்பயன் எய்தி, மறுமை பேறு பெற்றிட அன்னை கோட்டை மாரியம்மனின் திருவடி வணங்குவோம்.

'' சேலத்தில் நின்றருளும் சீரார்ந்த
அன்னையவள்
ஞாலத்தில் பல்வரங்கள் நல்கிடுவாள்
—காலத்தில்
காத்திடுவாள் கோட்டைவாழ் மாரியளை
எந்நாளும்
ஏத்திடுவார்க் கில்லை இடர்.''

அன்னையின் திருவடி போற்றுவோம்.

அல்லல் அனைத்தும் நீக்குவோம்.

திருவருட்பாவில் சில முத்துக்கள்

ச. முத்துசாமி, எம்.ஏ.,பி.எல்.

முன்னுரை :

தெய்வநம்பிக்கையும் தெய்வ வழிபாடும் மனிதனை ஒழுக்கமுள்ளவனாக வாழ்வதற்கு வழிவகுக்கும். மத நம்பிக்கை. தெய்வ நம்பிக்கை இரண்டும் வாழ்க்கையின் அடிப்படையாக அமைய வேண்டும். சைவ, வைணவ சமயங்கள் தோன்றி உலகில் பக்தி இயக்கத்தை வளர்த்தன. அருளாளர்களும், ஞானிகளும் பக்தி இயக்கத்தை வளர்த்தனர். இறைவனால் இவ்வுலகில் அனுப்பப் பெற்று அறியாமை இருளை நீக்கிய அருளாளர்கள் ஒருவகையினர் ஆவர். இவர்களை அவதார சீலர்கள் எனலாம். அந்த வரிசையில் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் இறைமையின் உண்மை நிலையை உணர்ந்த ஞானியாவார். அவர் அருளிய திருவருட்பா சைவத்திற்கு கிடைத்த தெய்விக நூல். அதில் உள்ள சில பாமுத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

வள்ளலார் : தென்ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் அருகில் உள்ள மருதூரில் 5-10-1823 ஆண்டு இராமலிங்கனார் தோன்றினார். பெற்றோர் இராமையாபிள்ளை: சின்னம்மையார். முருகப் பெருமான் அவருக்குத் திருக்காட்சி நல்கிஅருள்புரிந்து எல்லாக் கலைகளையும் ஓதாது உணர்த்தியருளினார். இராமலிங்க சுவாமிகள் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார். ஆறு திருமுறைகளை உள்ளடக்கிய திருவருட்பா பாடினார். சன்மார்க்க சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை சித்திவளாகம் போன்ற அமைப்புகளை நிறுவி பக்தி நெறியைப் பரப்பினார்.

திருவடிப்புகழ்ச்சி :

எல்லா உயிர்களுக்கும் தலைவனாகிய ஈசன் திருநடனம் புரிந்து அடியவர்களுக்கு அருள்பவர். மேருவை வில்லாக வளைத்து இணையற்ற சித்துக்களைப் புரிந்தவர். தட்சிணா மூர்த்தியாய் முனிவர்களுக்கு உபதேசித்வர். அட்டமூர்த்தியாய் கணங்களுக்குத்தலைவராக விளங்குபவர் என்பதை

"தாண்டவன் தலைமாலை பூண்டவன்
தொழும் அன்பர்
தங்களுக்கு அருளாண்டவன்
தன்னிகரில்சித்தெலாம்வல்லவன்வடதிசைச்
சைலம்எனும் ஒரு வல்லன்
தட்சிணாமூர்த்திஅருள் மூர்த்தி புண்ணிய
மூர்த்தி
தரும் அட்டமூர்த்தியானோன்
தலைமைபெறுகண நாயகன் குழகன் அழகன்
மெய்ச்சாமி நம் தேவதேவன்''

என்ற பாடல் மூலம் அறிகிறோம்.

திருப்பாதம் :

திருப்பாதமானது என் ஐம்புலன்களுக்கும் நற்பொருளாகவும் எக்காலத்திலும் பிரிதல் இன்றி உடனிருந்து விளங்கிக் குறையெலாம் தவிர்த்து ஆட்கொண்டு அருள்புரியும் பாங்குடையது. எனக்குத் தளர்ச்சியுற்ற காலத்தில் துணை நின்று காக்கவும் எல்லா நன்மைகளும் செய்யவல்லபதம் இணையில்லா துணையாய் விளங்குவது ஆகும். உள்ளம் ¿சிந்துருகி வழிபடும் பக்தர்களுக்கு இன்னமுதாகவும் விளங்குவது இறைவன் திருப்பாதமாகும் என்று திருப்பாதச் சிறப்பினை:

"எண் பொறிகளுக்கெல்லாம் நல்விடயமாம்
பதம்என்
எழுமையும் விடாப்பொற்பதம்

என்குறையெலாம் தவிர்த்துஆட்கொண்டபதம்
எனக்கு எய்ப்பில் வைப்பாகும்பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாம்செய்வல்ல
பதம்
இணையில்லாத்துணையாம்பதம்
எழுமனம் உடைந்து உருகி நெகிழ்பந்தர்கட்கு
இன்னமுதமாகும் பதம்''

என்று பாடுகிறார்:

சிவநேச வெண்பா :

ஈசனே எனக்குத் தாயாகவும் தந்தையாகவும் விளங்குபவர். எனக்கு குருவாக இருந்து என் சிந்தையில் எக்காலத்திலும் திகழ்பவர் முந்தைப் பொருளாக மேவியும் வேதத்தின் முதற்பொருளாகவும் இருப்பவர், என் வாட்டத்தைப் போக்கி என்னை ஆட்கொண்டு அருள் புரியாது விளங்குவது தான் என்னே!

''தந்தையாய் என்னுடைய தாயாய்த் தகை
சான்ற
சிந்தையாய் என்னருமைத் தேசிகனாய்—
முந்தையாய்
நீடு மறை முதலாய் நின்றாய் என்னேநெஞ்சம்
வாடும் என்னை ஆட்கொள்ளாவாறு''

இதே கருத்தை நாவுக்கரசர் அப்பன் நீ அம்மை நீ என அருளியதையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

''அன்னையே என்னேன் அத்தனேஎன்னேன்
அடிகளே அமையும் என்று இருந்தேன்
என்னையும் ஒருவன் உளன் என்று கருதி
இறை திருவருள் காட்டாய்''

என்று பாடியதையும் நினைவில் கொள்ளலாம்.

மகாதேவ மாலை:

முத்து, மாணிக்கம், வயிரம் எனப் போற்றப்படும் தன்மையில் எல்லாம் உயர்பொருளாகத் திகழ்பவர் இறைவன். அவர் தோற்றம் பெறும் பொருள்களுக்கெல்லாம் வித்தாகவும் முளையாகவும் விளைவிக்கும் பொருளாகவும் விளங்குபவர். அவரவர் வினைக்கேற்றவாறு குறைவும் நிறைவும் ஆகிய பொருளாகியும், சத்து சித்து, ஆனந்தமாகவும் இருப்பவர். அவரே மகாதேவர் என்பதை

''வித்தாகி முளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலும் ஆகிக்
கொத்தாகிப்பயனாகிக்கொள்வோனாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி இன்பமாகிச்
சதாநிலையாய் எவ்வுயிர்க்கும் சாட்சியாகி
முத்தாகி மாணிக்கம் ஆகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே''

என்கிறார்:

திருவருள் முறையீடு :

ஈசனே நான் செய்த புண்ணியம் என்று சொல்வதற்கு யாது உள்ளது! என் நாவால் சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தை ஓதுதல் ஆனேன். அதுவே பெரும்புண்ணியம் ஆயிற்று. இத்தகைய புண்ணியத்தைப் பிரமன் திருமால் இந்திரன் மற்றும் தேவர்களும் செய்வதற்கு அரியது என்பதை

''நான் செய்த புண்ணியம் யாதோ
சிவாயநம எனவே
ஊன்செய்த நாவைக்கொண்டு ஓதப்பெற்
றேன் எனைஒப்பானவர்ஆர்
வான்செய்த நான்முகத்தோனும்
திருநெடுமாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத்தேவனும்
தேவரும் செய்யரிதே''

என்னும் பாடலால் அறியலாம். இப்பாடலானது சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தை ஓதிப்பெறுகின்ற பயனைஉணர்த்துதாக அமைந்துள்ளது. இதே கருத்தை மாணிக்கவாசகர்

''நானேயோ தவம் செய்தேன் சிவாயநம
எனப் பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த்தித்திக்கும்
சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து
அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே''

என்னும் பாடலால் அருளியுள்ளார்.

வடிவுடை மாணிக்க மாலை :

ஒற்றியூரில் மேவும் பித்தராகிய சிவபெருமானுடைய அழகிய இடப்பாகத்தில் விளங்குகின்ற வடிவுடை மாணிக்கமே! பக்தர்களுடைய உள்ளமாகிய கோயிலில் மேவும் பராபரையே! மெய்யறிவாகவும் பேரொளிப் பிழம்பாகவும் திகழும் தாயே! உன்னுடைய பெருமையினைக் கூறி நாள்தோறும் உன்னை வணங்குகின்ற அருளைத் தருக என ஏத்துகிறார். பாடல்

''பத்தர் தம் உள்ளத் திருக்கோயில்
மேவும் பராபரையே!
சுத்த மெய்ஞ்ஞான ஒளிப்பிழம்
பேசிற் சுகாநந்தமே
நித்தநின்சீர் சொல எற்கருள்
வாய் ஒற்றி நின்மலர்உன்
மத்தர் தம் வாம மயிலே
வடிவுடை மாணிக்கமே!''

பத்தர்களின் உள்ளமே கோயிலாக அமைவதாக உள்ள பேற்றினை இது விளக்குகிறது. திருமூலரும் தம் திருமந்திரத்தில்

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல்பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்துங் காளாமணி விளக்கே''

என்கிறார். இதையே அப்பர் பெருமானும்

''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி
இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய
ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக்காட்டி
னோமே''

என்றும்,

''நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்
அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ளவாராய் பராபரமே''

என்று தாயுமானவரும் பாடியுள்ளதைக் காண லாம்.

அன்பு மாலை

எக்காலத்தும் குறைவு படாததும் மேன்மையுடையதும் ஆகிய எண் குணங்களை யுடைய பெருமானே! கோவாத மணியே! குருவே! என்னை முழுவதும் ஆட்கொண்ட சிவ பெருமானே! எனக்குத் தாயும் தந்தையு மாகிய தலைவனே! எனக்கு உயிர்த்துணை யாய் திகழும் நாதனே! அழிவற்ற பொருளே! மெய்யாகத் திகழும் புண்ணியத்தின் பயனாக மேவும் ஈசனே! அடியவனின் பிழைகளையெல் லாம் பொறுத்தருளும் பெருந்தகையே! ஆல் நிழலில் அமர்ந்து அருள்புரியும் இறைவனே! என்னுடைய ஆசையெல்லாம் உன்திருவடியைப் பற்றி இருக்க வேண்டும் என்பது அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்பதை

''குன்றாத குணக்குன்றே கோவாத மணியே
குருவே குடிமுழுது ஆட்கொண்ட சிவக்
கொழுந்தே
என்தாதை யாகினைக்கு அன்னையுமாய்
நின்றே
எழுமையும் ஈன்றெனையாண்ட என்னுயிரின்
துணையே
பொன்றாத பொருளே மெய்ப்புண்ணியத்தின்
பயனே
பொய்யடியேன் பிழைகளெலாம் பொறுத்த
பெருந்தகையே
அன்றாலநிழல்அமர்ந்தஅருளிறையே எளியேன்
ஆசையெலாம் நின்னடிமேல் அன்றி ஒன்றும்
இலையே''

என்று பாடுகிறார். இங்கே நாவுக்கரசர் திருப் பாதிரிப்புலியூர் இறைவனை நோக்கிப் பாடும்

''ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்
தோன்றினராய்
மூன்றாய்உலகம் படைத்துகந்தான்
மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமைவர்க்கன்பன்திருபாதிரிப்
புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன் தன்னடி
யோங்களுக்கே''

என்ற பாடல் நினைவு கூறத்தக்கது.

நமச்சிவாய என்னும் மந்திரம்

தன்னை ஈன்றெடுத்த தாயை மகவானது மறந்தாலும் தான் பெற்ற பிள்ளையைத் தாய் மறந்தாலும், உற்றதேகத்தை உயிர் மறந்தா லும் உடலானது உயிரை மறந்தாலும் கற்ற றிந்த நெஞ்சமானது கலைகளை மறந்தாலும் கண்கள் இமைப்பதை மறந்தாலும் நல்ல தவத்தில் உள்ள ஞானிகளின் உள்ளத்தில் திகழ்ந்தோங்கும் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தை நான் மறவேன் என்பதை

''பெற்றதாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல்மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
நற்றவத்தர் உள்ளிருந்து ஓங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே''

மறந்தாலும் என்பது மறவாமையை உணர்த் தும் குறிப்பாகச் சுட்டுதலாகும். இத்தன் மையை ''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நாநமச்சிவாயவே'' எனச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளியதை நினைவு கூற லாம்.

மரணமிலாப் பெருவாழ்வு :

''நினைந்து நினைந்து உணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழும்
கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே
ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின்
உலகியலீர்
மரணமிலாப்பெருவாழ்வில் வாழ்த்திடலாம்
கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்
சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையிற் புகுந்தருணம்
இதுவே.''

உலகத்திரே! நினைந்தும், உணர்ந்தும் நெகிழ்ந்தும் அன்பே நிறைந்தும் கண்ணீரால் உடம்பு நனைய பக்தி பூண்டு ஞான நடத்தரசை ஏத்துதும் வாருங்கள். மரணம் இல்லாத பெருவாழ்க் கையை வாழலாம் இதுசத்தியம் என்கிறார்.

முடிவு:

அருளாளராக விளங்கிய இராமலிங்க சுவாமிகள் 1874-ஆம் ஆண்டு ஸ்ரீமுக ஆண்டு தை மாதம் 19-ஆம் நாள் புனர் பூசமும், பூசமும்கூடிய நாளில் இறைவனோடு கலந்தார். அவர் பாடிய திருவருட்பா பாடல்களை நாம் ஓதிஉய்வோமாக!

அட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை தனிப்பெருங்கருணை.

பக்தி நிலைகள்

கவிஞர் பொள்ளாச்சி சிவமணியன்.

இறைவன் மீது ஆழ்ந்த அன்பு வைத்தலே பக்தி எனச் சொல்லப்படுகிறது. அது இறை பக்தி ஆகும். தாய் தன் குழந்தையிடம் நீங்கா பாசங்கொள்வதும், கணவன் மீது மனைவி கொள்ளும் பற்றுதல் யாவும் பக்தி எனப்படுகிறது. இறைவன் படைத்த சூரியன் சந்திரன், கடல், காற்று ஆகியவற்றை வணங்குதலும், பக்திதான். மிகப் பெரும் சக்திகளான (THE GREAT POWERS) சூரியன், பெரும் கடல், காற்று இவைகளையே கடவுளாச எண்ணி வழிபடுவோர் அதிகம். கடவுள் பல்வேறுஇயற்கை ரூபங்களாக இருப்பதுதான் உண்மை. கடவுள் மனித உருவம் எடுத்தோ, ஐந்து தலைகளுடனோ நெற்றிக்கண்ணோடோ காட்சியளியார் அற்ப மானிடர்க்கு, ஆனால் மானிடரில் யார் இறைவனாக மாறும் அளவுக்கு தகுதி பெறுகிறார்களோ அவர்களுக்கு முக்திநிலையில் ஒளிமயமாக தன் உருவத்தைக் காட்டுகிறார். இந்த நிலை கடவுளிடம் ஐக்கியமான போதே முழுமையாக்கப்படுகிறது. எல்லாவற்றையும் கண்காணித்து வரும் வாயு பகவான் (காற்று) சூரியக் கடவுள் இடைவிடாது உலக உயிர்களைக் காக்கின்றனர். இறைவன் தன் உருவத்தைக் காட்டிடாது சிங்கம், யானையாகவோ ப்பமாகவோ முதியவனாகவோ கூட வரலாம். அப்போது எல்லாம் மனித அறிவுக்கு எட்டிடாது சாதாரணமாக எண்ணுகிறோம். இறைவன் பேரின்ப நிலையை அடைய வாழ்நாள் முழுவதும் பக்திநிலையில் ஆழ்ந்து இருக்க வேண்டும். அல்லது இறைவனுக்கு பணிவிடைகள் செய்யலாம். மனிதர்களைத் திருத்தி பக்தர்களாக மாற்றலாம். பக்திநிலையில் ஈடுபாடு கொண்டு, அகப்பகையான, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலியவைகள் இல்லாது உள்ளத்தைமுதலில் தூய்மையாக்கிக்கொள்ளல் நல்லதாகும். இறைவனை எந்த நிலையிலாவது உபாசனை செய்ய அந்த சுத்தி செய்த உள்ளமே ஏற்றதாகும். இனி இறைவன் நம் வசம் மனம் இரங்கியருளிட கோயிலில் பூஜாப் பணிகள் செய்யலாம். சமஸ்கிருதஸ்லோகங்களால் அல்லது தேவார திருவாசகத் திருப் பாடல்களால் இறைவனை மகிழ்விக்கலாம். தர்ம ரீதியான செயல்களில் உளமகிழ்ந்து ஈடுபடலாம். ஏழைகளின் உணவுப் பசி போக்கலாம். தூயமலர்களால் அர்ச்சிக்கலாம். இசைக் கருவிகளை இனிமையாக இசைக்கலாம். ஓசை நயத்தில் பக்தி வினைகள் ஆற்றிடலாம்.

இறைவனுக்கு உபவாசம் இருந்து பக்தியில் ஈடுபடலாம். யாகங்கள் செய்தும் பக்தியில் ஈடுபடலாம். ஆழ்வார்கள் நாயன்மார்கள் கூறிய பக்திநெறியில் இறைவனையடையலாம். சித்தர்கள் புரிந்த யோகநெறியிலும் அருட்சாதனை செய்யலாம். தவவாழ்வில் அருள் பக்தியில் செயல்படலாம்.

இறைவன் பக்திக்கு இல்லறம் துறவறம் இரண்டும் ஏற்றது. எவ்வகையில் ஈடுபாடு கொள்ளினும் மனம் ஆனது இறைவனையே இமைப்பொழுதும் தவறாது எண்ணி வணங்குவதுதான் முக்கியம். ஆனால் ஆழ்ந்த தியான யோக நெறியில் கடும் பயிற்சிகொள்வதற்கு நல்ல ஏகாந்தமான அமைதியான இடம்தான் ஏற்றது. தியானத்தால் (DEEP THOUGHT) தவம் மேற்சொள்ளப்படுகிறது. யோகத்தில் சில கடும் பயிற்சிகளை மேற்கொண்டு இறைவனை அடையலாம். எவ்வாறு பயிற்சி பெற்றவன் ஆழ்கிணறு கடலில் நீந்துகிறானோ, கம்பி மேல் நடக்கிறானோ, விமானத்தை ஓட்டுகிறானோ, அது மாதிரி யோகப் பயிற்சியிலும் இறைவனின் நிலை எய்தி இறைவனோடு ஐக்கியம் ஆகலாம். எட்டு வகையான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி போன்ற நிலைகளில், சமாதி நிலை இறைவனோடு ஐக்கியமாவதாகும். ஆகவே ஞானபக்தியில் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், இம்மூன்றினும் நிட்டை கூடுவதான தியானம்அவசியமானதாகும். சமாதியான நிலையில் ஐம்புலன்களையெல்லாம் ஒரே நிலையில் அடக்கிஆழ்மனத்தைப்பரம்பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துதலாகும். இக்கடுமையான பயிற்சியாலும் இறைவனை அடையலாம். சாதாரணமாக பூஜாபக்தி, யாகநிலை, இசை ராகங்களில் இறைவனை வணங்குதல், மற்றும் இறைச் சேவைகளாலும் இறைவனையடையலாம். ஆனால் இறைச் சேவைகள் செய்வதால் பூதசரீரம் முடிந்தபின் இறைவனை அடைய முடிகிறது.



சமாதி நிலையல்லாது இறைநிலையை அடையவே இல்லறத்து பக்தர்கள் பெரும் பாலும் எண்ணுகின்றனர். அறநெறியான இல்லறமும் அகப்பகை அண்டிடாத உள்ளமும் எத்தொழிலைச் செய்தாலும் எந்த அவஸ்தை படினும் மனம் மோனத்தே நின்ற முக்தர் களும், அருட்பணிகளே செய்து ஆயுள் கரை யட்டும் என்று எண்ணுபவர்களும் இறைவனது இணையடி நிழல் சேர்வார்கள். சமாதிநிலை பக்திக்கு தனிமை வேண்டியதாகையால் துற வறம் அவசியமாகிறது. இல்லறம், பற்றுகளை நீக்க வேண்டியதாகிறது. ஆச்சிரமமான பிரமச்சரியம், கிரகத்தம், வானப்பிரத்தம் சந்நியாசம் யாவற்றையும் கடந்து ஒரு நிலை யில் யோகநிலையில் அமர வேண்டியதுள்ளது. இதுஇறைவனை அகக்கண்ணால்பார்த்தபடியே பயிற்சியில் முக்தி பெற்று இறைநிலையை அடைதலாகும். இதில் பக்தர்விரும்பிய நிலை யில் அகக்கண்ணால் பார்க்கும் ஒளியே ஆன்ம ஒளியாம். இந்த சமாதிநிலை பக்தரே இறைவ னின் பேரின்ப ஆன்ம ஒளி ரூபமாக இறைவனை காண்கின்றனர்.

மற்றபடி இல்லறத்திருந்தே கடுமையாக உடல் வருத்தி இறைவனிடம் அருள் வேண்டு வோர்க்கும், அவர் அறியாமல் இறைவன் அவர்க்கு நல்லது செய்கிறார். சகல பற்றுதல்களையும் துறந்து துறவறத்தில் ஈடுபட்டு அக்கினியில் நடந்து இறைவனை வேண்டுவது, நீரில் பல நாட்கள் நின்று தவம் கொள்வது, உபவாசம் இருந்து தொழுதல், தலை கீழாய் சிரசாசனம் செய்து அருள் வேண் டல் இப்படி உடல் வருத்தி இறைவனிடம் அருள் வேண்டுவோர்க்கும் இறைவன் அருள் கிறார். இம்மாதிரியானவைராக்கிய இறை பக்தர்களும் இறந்தபின் இறைநிலையை அடை வார்கள். இல்லற பக்தர்களும், தூய்மையான மனத்துடன் பஞ்சமாபாதகங்கள் அற்ற இறைப் பணி செய்பவர்களும், வள்ளல் தன்மையால் ஆயிரக்கணக்கான உயிர்களை வாழ வைக்கும் அருள்பக்த நெறியாளரும் இறைநிலையை அடைகிறார்கள். இவ்வாறு பக்தி பலவகைப் படுகிறதென அறிகிறோம். பக்திநிலை இல் லாதவர்கள் சகஜமான, சகலபாப நெறிகளில் ஈடுபடுவோர் பல பிறவிகளில் நரகத்தை அனு பவித்து மீண்டும் மனிதப்பிறவி எடுக்கின்றனர்.

நன்னெறியற்ற வாழ்க்கை வாழும் அவர்கள் இறைவனை அடைய இயலாது. ஆகவே கிடைத்தற்கரிய இம்மானிடப் பிறவியில் இறை வனது நிலையை அடைய எவ்வித பக்தி நிலை யிலாவது ஒன்றிடவேண்டுவதுஅவசியமாகிறது.

இரவீந்திர நாத் தாகூரின் கடவுள் சிந்தனைகள்

திருமதி உமாராசன்

உலக அறிஞர்களில் ஒருவர் நோபல் பரிசு பெற்ற தத்துவ கவிச் சக்கரவர்த்தி இரவீந்திர நாத்தாகூர் ஆவார். அவருடைய ஆழ்ந்த கருத்துக்கள் யாவும் இவ்வுலக வாழ்வின் நியதிகளையும், மனித மன அடிப்படைகளையும், மனிதனின் எதிர்பார்ப்புகளையும், உண்மை நிலையினையும் எடுத்துரைத்திருப்பது, மனித சமுதாயம் செய்த தவப்பயனே. அவர் தனது அனுபவத்தை 'சாதனா' என்ற நூலில் கூறியிருக்கிறார். ஒரு சமயம் ஏதோ ஒரு பிரிவைச் சேர்ந்த இரு துறவிகளை ஒரு வங்காளக் கிராமத்தில் சந்தித்தேன். 'உங்களுடைய மதத்தின் விசேஷத் தன்மைகள் என்ன! எனக்கு சொல்ல முடியுமா! என்று அவர்களைக் கேட்டேன். அவர்களிலொருவர் சிறிது தயங்கி, 'அதை வரையறுத்துச் சொல்வது கடினம்' என்றார். மற்றவர். 'இல்லை அது மிக எளிது. முதலில் நமது குருவின் துணைகொண்டு நமது ஆன்மாவை அறிய வேண்டும். ஆன்மாவை அறிந்த பிறகு நமக்குள்ளிருக்கும் பரமாத்மாமாவை நாம் காண முடியும்' என்றார்.

'உங்களுடைய கொள்கைகளை நீங்கள் ஏன் உலகினருக்குப் போதிக்கக் கூடாது?' என்றேன். 'தாகமுள்ளவர்கள் தாங்களாகவே ஆற்றுக்கு வருவார்கள்' என்று அவர் கூறினார். 'சரி, அப்படியானால் யாரும் வருகிறதாகத் தெரிகிறதா? யாரேனும் வருகிறார்களோ? என்று வினவினேன். அம்மனிதர் மெல்ல சிரித்தார். அச்சிரிப்பில் அமைதியின்மையோ பரபரப்போ சிறிதும் காணப்படவில்லை. உறுதியே காணப்பட்டது. சிரித்துவிட்டு, ''அவர்கள் எல்லோருமே ஒரு நாள் ஆற்றுக்கு வந்தாக வேண்டும்'' என்று கூறினார். ஆம்! அந்தத் துறவி சொன்னது சரி. மனிதனுடைய தேவை உணவையும், உடைமையையும் மீறியது. அதைத் தேடித் தேடியே, வெளியே அலைகின்றான். இறவாத தன்னைத் தனது ஆன்மாவை உணருவதற்காக திக்குத் தெரியாத இடத்திற்கு அவன் பயணம் செய்யும் சரித்திரமே மனித சரித்திரமாகும். மனிதன் பேரரசுகளை எழுப்பி அவைகளை அழித்திருக்கிறான். சிருஷ்டியாகிய இரகசியப் பெட்டகத்திற்கு மந்திரத் திறவு கோல்களை வார்த்திருக்கிறான். யுகம், யுகமாகத்தான் தொடர்ந்து பாடுபட்ட காரியங்களை உதறி விட்டுப் புது வடிவங்களை வடித்திருக்கிறான். இத்தனைக் காரியங்களின் மூலமாகவும் மனிதன் அடையக் கருதிய குறிக்கோள் என்ன? தான் திரட்டும் பொருள்களுக்கு எல்லாம் மேலானதும் உயர்வானதும் ஆன ஆன்மாவை உணருவதற்காகவே மனிதன் பாடுபட்டு வந்திருக்கிறான்.

ஆணவத்தின் படைப்பாக இருப்பதால் நாம் துயருறுகிறோம். எல்லையற்ற பரம் பொருளை அறிய வியலாது. அதிருப்தியால் பெருமூச்செறிதலும் தோல்வியால் தளர்தலும், சென்றது பற்றி வீணாக வருந்துதலும் ஆகிய காரியங்கள் நமது ஆழமற்ற மனத்தை வாட்டுகின்றன. ஏன்? நாம் நமது ஆன்மாவை காணவில்லை. துன்பப்படும்போது இறைவனை நோக்கி, ஏ! இறைவா! காத்தருள்' எனக் கதறுகின்றோம் இன்பத் தினவு, திருப்தியடையாத பேராசை, உடைமைச் செருக்கு, பிறரை இகழும் மன வேறுபாடு ஆகியவை யாவும் மூச்சுத்திணற ஆட்டம் போட்டு நம்மை சாகடிக்கின்றன பொருளைத் திரட்டுகிற காரியமே தன்னை உணரும் காரியமன்று என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதன் தனது ஆசைகளுக்கிடையே தன்னை மூடிக்கொண்டிருக்கிறான். அதுதான் அவனுடைய சங்கடம்.

வாழ்வை முழுவதும் கவனித்தோமானால் அது சாவை, அவ்வளவு பெரிதாக மதிப்பதில்லை. சாவின் முன்னிலையிலேயே வாழ்வு சிரிக்கிறது. வாழ்வில் எவ்வளவோ விஷயங்கள் இருக்கும்போது சாவை மாத்திரம் தனியாகப் பிரித்துக் கவனித்தால் அதன் வெறுமை நம்மை அச்சுறுத்தும். வாழ்வின் முழுமையில் சாவின் இடம் மிகச் சிறியதுதான். சாவு என்பது இறுதியான உண்மையல்ல. எனவே வெளியுலக பேராசைகளை விடுத்து, தன் ஆன்மாவை அறிந்து நடந்தால், மனித சமுதாயம் இத்தனைப் பிரச்சனைகளைகளைக் கடக்க 'வேண்டியதில்லை என்று, தெளிவுறுத்துகின்றார் நம் தத்துவக் கவிஞர் தாகூர்.

மழை பொழிவிக்கும் வள்ளல்

பதிகங்கள்

[திருஞானசம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடியுள்ள திருப்பதிகங்கள் ஏழும் மழைபொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள் ஆகும். இப்பதிகங்களை மனமுருகிப்பாடி வழிபட்டால் கோடையிலும் மழை பொழியும். பாடிப் பயன்பெறுவோம். கோடையை வசந்தமாக்க எல்லோரும் பாடி நலம் வேண்டுவோம்.]

திருக்கழுமலம்:

சேவுயருந் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்தஅன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதோறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே.

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய கண்ணவெண்ணீ றலங்கரித்தான்
அமரர்தொழ அமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறும்
இறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே.

அலங்கல்மலி வானவருந் தானவரு
மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கிவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலந்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.

பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசு வெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்ற வொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே.

ஊர்கின்ற வரவமொளி விடுதிங்க
ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையா னிசுழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே.

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள் செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய
வகம்பாயுங் கழுமலமே.

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே.

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர்கோமான்
விடல்வந்த இருபதுதோ ணெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வுழவரிது நடவொணா
வகைபாலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே.

பூ-மகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே.

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணல் மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலிவிழவினொலி
யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுக்குங் கழுமலமே.

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்துள்
ஈசன்றன் கழன்மேல்நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றா னயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந்
திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே.

திருவையாறு:

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்தபோதாக வஞ்சேலென்
றருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன் வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே.

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழிநுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே.

ஊன்பாயு முடைதலைகொண் டூரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே.

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்கும் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே.

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

நின்றுலாநெடுவி கம்பி னெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில் கூவக்கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே.

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய விளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே.

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்றும்
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரோடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீசர்
இறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே.

அன்னமலி பொழில்சூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கால்
ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே.

முதுகுன்றம்:

மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண்
குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோ லரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூர் உலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கும் முதுகுன்றமே.

வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்ற றிருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே.

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குவைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோன் இந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநா
ணரியெரிகால் வாளியாக
மும்மதிலும் நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிடம் முதுகுன்றமே.

இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரல் முதுகுன்றமே.

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிடம் நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலிகமு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகள் முகமலர
வயறழுவு முதுகுன்றமே.

அறங்கிளரும் நால்வேத மாலின்கீழ்
இருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரையோன் சிரமைந்தின்
ஒன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொண்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே.

கதிரொளிய நெடுமுடிபத் துடையகடல்
இலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிலளகைக் கிறை முரலமலரடி யொன்று
ஊன்றிமறை பாடவாங்கே
முதிரொளிய சுடர்நெடுவாண் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே.

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
துறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்த முதுகுன்றமே.

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே.

முழுங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு
முதுகுன்றத் திறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழிற் றமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே.

திருவீழிமிழலை

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளி
நெறியளித்தோ னின்றகோயில் [சேர்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே.

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட இளவன்னம்.
வீற்றிருக்கும் மிழலையாமே.

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கள்தம்
புரமூன்று மெழிற்கணாடி
உழுந்துருளுமளவையினொள்ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோன் உறையுங்கோயில்
கொழுந்தரளம் நகைகாட்டக் கோகந்தம்
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டும் மிழலையாமே.

உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே.

காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே.

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே.

ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடு மிழலையாமே.

கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்கலுறு மரக்கன் பொன்முடி
தோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்றன் உடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே.

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேருமூர் மிழலையாமே.

எண்ணிறந்த அமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியு நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்இழியு மிழலையாமே.

மின்னியலு மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்
கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில்
ஈசனெனு மியல்பினோரே.

திருக்கச்சியேகம்பம்

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி
நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற்
கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற
அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய வேகம்பந் தொழுதேத்த
இடர்கெடுமே.

வரந்திகழு மவுணர் மாநகர்மூன்
றுடன்மாய்ந்தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன்
மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்குமா தவிநல்ல
குரா மரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேரவிடர்கெடுமே.

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர
வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன்
மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய
கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த வேகம்பஞ் சேர
விடர்கெடுமே.

தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற் சுடலை
வெண்ணீ றணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள்
கருதுமிடம்
மாலைவெண் மதிதோயுமாமதிற் கச்சி
மா நகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப மேத்த விடர்
கெடுமே.

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்
தூமதி யம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கலைப் பேய்க
ளவைசூழ
வாடல்வெண் டலையோ டனலேந்தி
மகிழ்ந்துடன் ஆடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேர
விடர்கெடுமே.

சாசம்பொன் வரையாகத்தானவர் மும்மதில்
சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக அரவொடு
நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி
மாநகருள்
ஏகம்பத்துறையீசன் சேவடியேத்த
விடர்கெடுமே.

(ஏழாம் பாடல் கிடைக்கவில்லை)

வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளரவம்
அணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற்
பலிதேர்ந்
தேணிலா அரக்கன்தன் நீண்முடி பத்து
மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேர
விடர்கெடுமே.

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழ
லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தணன் அணங்கினொடு
அமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி
மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை
மாய்ந்தறுமே.

குண்டுபட் டமணர் அவரொடுங் கூறைதம்
மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு
விரும்பன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை
யொன்றினா லவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங் காண
விடர்கெடுமே.

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி யேகம்ப
மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல
நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய
பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ்
சேர்பவரே.

திருப்பறியலூர் வீரட்டம்

கருத்தன் கடவுள் கனலேந்தியாடும்
நிருத்தன் சடைமேல்நி ரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத்தானே.

மருந்த னமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே.

குளிர்த்தார் சடையன் கொடுஞ்சிலை
விற்கா மன்
விளிந்தான் அடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே.

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே.

கரிந்தா ரிடுகாட்டில் ஆடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே.

அரவுற்ற நாணா அனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
திருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத்தானே.

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையா ரரவம் மழகா வசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

வளைக்கும் மெயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே.

வளங்கொள் மலர்மே லயனோத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்
நின்றான்
இளங்கொம் பனாளோ டிணைந்தும்பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே.

சடையன் பிறையன் சமண்சாக் கியரோடு
அடையன் பிலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோ ளரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே.

நறுநீ ருகுங்காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானை
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவலம் அறும்பிறப் புத்தானே.

திருப்பராய்த்துறை

நீறுசேர்வதோர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதோர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே.

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல வடிகளே.

வேதர்வேதமெல்லா முறையால்விரித்
தோதநின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு ஆவர்பராய்த்துறை
ஆதியாயவடிகளே.

தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழ வடிகளே.

விரவி நீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவில் நின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த வடிகளே.

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்ற வடிகளே.

விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற வடிகளே.

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அருக்கன்றன்னை யடிகளே.

நாற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும்அறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க வடிகளே.

திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே.

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே.

வினை தீர்க்கும் விநாயகன்

ச. முத்துசாமி, எம்.ஏ., பி.எட்,

முன்னுரை

''விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க
வல்லான்
விநாயகனேவேட்கைதணிவிப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்தன்மை
யினால்
கண்ணிற் பணிமின் கனிந்து''

மக்கள் ஆண்டவனைப் பல உருவங்களில் பல பெயர்கள் சூட்டி வழிபடுகின்றனர். அத்தகைய வழிபாடுகளை நமக்கு சமய நெறிகள் போதிக்கின்றன. அதன் அடிப்படையில் சைவம்,வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் அறுவகை சமய நெறிகள் தோன்றின. காணாபத்தியம் என்பது விநாயகர் வழிபாட்டை குறிப்பது.

விநாயகர் தோற்றம்

சிவனும் பார்வதியும் முறையே களிற்றி யானை, பிடியானை இவற்றின் வடிவம் கொண்டு கூடியதன் விளைவாக விநாயகர் தோன்றினார் என்னும் செய்தி திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பாடலில் அறியப்படுகிறது:

பிடியதன் உருஉமைகொளமிகுகரியது
வடிவொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே
(1—123—5)

விநாயகர் திருவுருவம்

எல்லா ஓசைக்கும் எழுத்துக்கும் முதலாய் இயல்பாகத் தோன்றி ஓயாது 'ஓ' என்று ஒலி செய்து கொண்டிருப்பதே ஓங்காரம் எனப்படும். இதனையே ப்ரணவம் என்பர். இந்த 'ஓம் என்னும் ஒலிக்கு வரி வடிவமே விநாயகர் திருவுருவமாகும். மனித உடலும் யானைத்தலையும் அமைந்த உருவம் அது. தொந்தி வயிறும், நான்கு கைகளும், குட்டையான பருத்த இருகால்களும் அவருக்கு உண்டு. கண்கள் சிறியன. காதுகள் பெரியன. துதிக்கை சேர்த்து ஐந்து கரங்கள். வில், வாள் அம்பு, கேடயம் அங்குசம், பாசம், சூலம், தாமரை போன்றவைகளைக் கைகளில் ஏந்தியுள்ளார். இவரது நான்கு கைகள் தேவர் கூறையும், யானைத்தலை விலங்கின் கூறையும், உடம்பு மனிதக் கூறையும், பேழை வயிறும் குறுகிய கால்களும் பூதக்கூறையும் உணர்த்துகின்றன. விநாயகர் தேவராய், மனிதராய், விலங்காய், ஆணாய் பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் எல்லாமாய் விளங்குபவர் என்பதை இத்திருவுருவம் விளக்கும்.

தனக்குமிஞ்சிய தலைவன் இல்லாத தனிப் பெருங் கருணைக் கடவுள் அவன். கணபதியை வழிபட்டால் எல்லாத் தெய்வங்களையும் அவ்வழிபாடு போய்ச் சேரும்.

உயிர் எழுத்து உகரத்தைப் பிள்ளையார் சுழியாகப் போட்டு எந்தச் செயலையும் தொடங்குவது நம் வழக்கம். அவனே எல்லாவற்றுக்கும் மூலமாய் உள்ளான். அவனே முழுமுதற் கடவுள்.

விநாயகர் வழிபாடு

''கணபதி பூஜை கைமேல் பலன்'' என்பது முதுமொழி. விநாயகர் வழிபாட்டினை யாரும் எளியமுறையில் செய்யலாம். எளிதில் கிடைக்கக்கூடிய அறுகம்புல்லையும், எருக்கம்பூவையும் அவர் விரும்பி ஏற்றுக் கொள்கிறார். விநாயகர் வழிபாட்டிற்கு என்று தனியான உருவ அமைப்பு எதுவும் வேண்டாம். களிமண், மஞ்சள், சாணி இவற்றில் ஏதேனும் ஒன்றை உருட்டி வைத்து வழிபடும் மக்களுக்கு உடன் அருள்பாலிக்கின்றார். மோதகம், அப்பம், அவல், பொரிகடலை, எள்ளுருண்டை, சுண்டல், பிட்டு இவை விநாயகருக்குரிய நிவேதனப் பொருட்களாகும்.

வழிபாட்டின் தத்துவம்

விநாயகரின் சந்நிதியில் இரண்டு கைகளையும் மறித்து நெற்றியில் குட்டிக் கொள்ள வேண்டும். அதே போல் இரண்டு கைகளையும் மறித்துக் காதுகளைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும். நெற்றிப் பொட்டில் போட்டுக் கொள்வதாலும், தோப்புக் கரணம் போடுவதாலும். நம் நரம்புகள் வலுப்பெற்று புத்துணர்வு பெறுவதோடு மனதில் தெய்வீக எண்ணங்கள் மலரும். விநாயகருக்குப் படைக்கும் உருண்டை வடிவமான மோதகம் ஒவ்வொன்றும் அண்டத்தைக்

குறிக்கும். மோதகம் அனைத்தையும் விநாயகர் உண்டு தம் வயிற்றுள் அடக்குவது அண்ட கோளங்கள் அனைத்தும் அவருள் ஒடுக்கம் என்னும் உண்மையை உணர்த்தும்:

விநாயகருக்கு உகந்த நாட்கள்

விநாயகர் வழிபாட்டிற்கு ஏற்ற நாள் வெள்ளிக்கிழமை. அமாவாசை கழித்து வரும் சதுர்த்தி திதியும் பௌர்ணமி கழித்து வரும் சதுர்த்தி திதியும் விநாயகருக்கு சிறந்தனவாக கொள்ளப் பெறுகின்றன. இந்நாளில் விநாயகரை வழிபட்டால் துன்பம் நீங்கும். மாதந் தோறும் வரும் சங்கடஹர சதுர்த்தி மிகவும் விசேடமாகும். ஆவணி வளர்பிறை சதுர்த்தி மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்நாள்தான் விநாயகர் சதுர்த்தியாகும். விநாயகருக்குரிய காய்த்ரி மந்திரம்:

''ஓம் ஏகதந்தாயவித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்நோதந்தி பிரசோயதாத்''

தேவாரத்திருமுறைகளிலும், புராணங்களிலும் விநாயகர் போற்றப்படுகிறார். திருநாவுக்கரசர்

''பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக்கண்டேன்
பரிந்தார்க்கருளும் பரிசுங்கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
வருந்தாய்ப்பரந்த தொகுதிகண்டேன்
மெல்லியலும் விநாயகனுந்தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய்மூரடிகளை நான்கண்ட வாறே''.

சுந்தரர்

திங்கள் தங்கு சடைக்கண்மேலோர்
திரைகள்வந்துபுரளவீசுங்
சங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல்
வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன் பிள்ளை தேவியார்
கோற்றட்டியாளர்
உங்களுக் காட்செய்யமாட்டோம் ஓணகாந்தன்
தளியுளீரே''

திருமூலர் திருமந்திரம்

''ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே''

''கணபதி என்றிடக்கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமமாதலால்
கணபதி என்றிடக் கருமமில்லையே''

பதினோராந் திருமுறை

''மொழியின் மறைமுதலேமுன்னயனத்தேறே
கழிய வருபொருளே கண்ணே செழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
யலாதையனே சூழா தென் னன்பு''
—அதிராவடிகள்

நாரணன் முன்பணிந்தேத்த நின்றெல்லை
நடாவியவத்
தேரணவுந் திருநாரையூர் மன்னுசிவன் மகனே
காரணனே எம்கணபதியே நற்கரிவதனா
ஆரணநுண்பொருளே என்பவர்க்கில்லை
அல்லல்களே
—நம்பியாண்டார் நம்பிகள்

எடுக்கு மாக்கதைஇன்றமிழ்ச்செய்யுளாய்
நடக்குமேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத்தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக்கருத்துள் இருத்துவாம்
—சேக்கிழார் பெரியபுராணம்

திருப்புகழ்

''கைத்தலநிறைகனி அப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர்புத்தியில் உறைபவ
கற்பகம் என வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொருள் திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமிபுதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே''
—அருணகிரி நாதர்

''உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலிற்றேனமுதத்துணர்வூறி
இனபரசத்தேபருகப்பலகாலும்
என்றனுயிர்க்காதலுற்றருள்வாயே''

''தம்பிதனக்காக வனத்தணைவோனே
தந்தை வலத்தாவருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே.
—அருணகிரிநாதர்

புராணங்களில் விநாயகர் வழிபாடு

உச்சியின் மகுடம் மின்ன ஒளிர்தரநுதலின் ஓடை
வச்சிரமருப்பின் ஒற்றை மணிகொள்கிம்புரி புரிவயங்க
மெய்ச் செவிக் கவரிதூங்க வேழ மாமுகங் கொண்டுற்ற
நச்சியின் விகடச்சக்கரக் கணபதிக்கன்பு செய்வாம்
—கந்தபுராணம்

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானைதன் செய்யபொற்பாதமே
—திருவிளையாடற்புராணம்

''திருவுங்கல் வியுஞ் சீருந்தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும்ஆழத்துப் பிள்ளையைப்பேணுவாம்.
—விருத்தாசலப் புராணம்

''வானநாடர்கள் மாதவர் நாடரும்
மோனஞானமுழுதுமுணர்ந்திடத்
தானமேவுந்தடவி காடசலத்
தானை மாமுகத்தண்ணலையேத்துவாம்.
—சிதம்பரபுராணம்

நலந் தழைத்திடு நற்பத நீழலைக்
கலந்தவர்க்குக் கருணையரும்பிநின்
றலர்ந்தவானந்தத்தேனுகவானனை
மலர்ந்த கற்பகவேழத்தை வாழ்த்துவாம்
—திருப்பரங்கிரிப்புராணம்

ஔவையார்

தமது நீதி நூல்களில் விநாயகப் பெருமானைப் போற்றுகிறார்.

''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு''

பாலும்தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்- கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா''
—ஔவையார்

கபிலதேவநாயனார்-இரட்டை மணிமாலை
''திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை''

''வாழைக் கனிபலவின் கனிமாங்கனிதாஞ் சிறந்த
கூழைச் சுருள்குழையப்பமெள்ளுண்டை யெலாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற்றோடும் புகுந்தென்னுளம் பிரியா என்
வேழத் திருமுகத்துச்செக்கர்மேனிவிநாயகனே'

காசிப முனிவர்-காரிய சித்திமாலை

இடர்கள்முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்சனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ்பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவுமருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்

குமரகுருபரர்-காசிக் கலம்பகம்.

பாசத் தளையறுத்துப்பாவக்கடல் கலக்கி
நேசத்தளைப்பட்டு நிற்குமே—மாசற்ற
காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தென் உளத்து.

முடிவு

முழுமுதற் கடவுளாம் விநாயகப் பெருமானைத் தொழுதால் நமது வல்வினைகள் நீங்கி வாழ்வில் வளம் பெறலாம்.

''அல்லல் போம் வல்வினைபோம்
அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம்போகாத்துயரம்போம்—நல்ல
குணமதிகமா மருணைக்
கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக்கால்.''

கழுகுதொழு 'வேதகிரி'

பி. வி. கிரி

திருக்கழுக்குன்றத் திருத்தலத்தில், பன்னிரண்டு தீர்த்தங்கள் உள்ளன. அவை : 1. இந்திரத் தீர்த்தம், 2. சம்பு தீர்த்தம், 3. உருத்திரக் கோடித் தீர்த்தம், 4. வசிட்ட தீர்த்தம், 5. மெய்ஞ்ஞானத் தீர்த்தம், 6. அகத்திய தீர்த்தம், 7. மார்க்கண்டத் தீர்த்தம், 8. கோசிகத் தீர்த்தம், 9. நந்தித் தீர்த்தம், 10. வருண தீர்த்தம், 11. அகலிகைத் தீர்த்தம், 12. சம்பாதித் தீர்த்தம்.

சம்பாதித் தீர்த்தம் என்பது, மலையில் உள்ள ஒரு சுனையாகும். இதனைப் 'பட்சி தீர்த்தம்' என்றும் கூறுவர். தெய்வத் தன்மை மிக்க இரு முனிவர்கள் கழுகு வடிவங் கொண்டு இங்கு வந்து வழிபடுகின்றனர் என்பது புராணக் கருத்து. ஆதலால், இத்தலத்தைக் 'கழுகாசலம்' என்றும் அழைக்கின்றனர்.

நெடுங் காலத்திற்கு முன்பிருந்தே, இரண்டு கழுகுகள் இத்தலத்திற்குத் தவறாமல் வருவதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. நாள்தோறும் உச்சிவேளையில் இவை இரண்டும் இங்கு வந்து, இங்குள்ள பண்டாரம் தரும் சர்க்கரைப் பொங்கலை உண்டு செல்லும் அற்புதக் காட்சியைக் கண்டு மகிழலாம்.

இந்தக் கழுகுகள் கங்கை நதியில் நீராடி, இராமேசுவரத்தில் வழிபட்டு, திருக்கழுக்குன்றத்தில் உணவு உண்டு, சிதம்பரத்தில் உறங்குவதாக ஒரு நம்பிக்கை உண்டு.

புராணங்களில் இந்த இரு கழுகுகளைப் பற்றிய வரலாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பிரம்மப்புத்திரர்கள் எண்மர் சாரூபப் பதவி வேண்டி தவம் புரிந்தனரென்றும், சிவ பெருமான் காட்சியளித்தபோது, மறதி காரணமாக சாயுச்சிய பதவி கேட்டதாகவும், அதனால் அந்த எட்டுப்பேரும் யுகத்துக்கு இரண்டு பேர் வீதம் கழுகுகளாகப் பிறக்க இறைவன் சாபமிட்டதாகவும் புராணங்கள் கூறுகின்றன. அவர்களே கடந்த யுகங்களில் சண்டன் பிரசண்டன் என்றும், சம்பாதி சடாயு என்றும், சம்புகுத்தன் மாகுத்தன் என்றும் பிறந்தனர்.

இன்று அதாவது, இந்தக் கலியுகத்திலே பூஷன், விதாதன் என்னும் சகோதரர்கள் இரண்டு கழுகுகளாகப் பிறந்து, அவர்களே தம் சாபம் நீங்க இத்திருத்தலம் வருகின்றனர் என்று பெரியவர்கள் கூறுகின்றனர்.

1921-ஆம் ஆண்டு ஓர் அற்புதம் நிகழ்ந்தது

அதாவது 1921-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17-ந் தேதி காலை 9 மணி. மதுரை பொற்றாமரைக் குளத்தில் இரண்டு வெண்ணிறக் கழுகுகள் நீராடின. அந்தக் கழுகுகளைக் கோயில் நிர்வாகிகள் புகைப்படம் எடுத்தனர். பிறகு அந்தக் கழுகுகள் விபூதிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் சிறிது அமர்ந்து விட்டுப் பறந்து சென்றன. இவை திருக்கழுக்குன்றக் கழுகுகள்தானா என்றுஅறிய, மதுரைக்கோயில் நிர்வாகிகள் தாம் எடுத்த புகைப்படத்தை, திருக்கழுக்குன்றக் கோயில் நிர்வாகிகளுக்கு அனுப்பி, ''இந்தப் படத்தில் உள்ள கழுகுகள் திருக்கழுக்குன்றக் கோயிலுக்கு வரும் கழுகுகள் தானா?'' என்று கேட்டிருந்தனர்.

திருக்கழுக்குன்றக் கோயில் நிர்வாகிகள் புகைப்படத்தைப் பார்த்து ''அவை இரண்டும் கழுக்குன்றக் கோயிலுக்கு வரும் கழுகுகளே'' என்று பதில் அனுப்பினர்.

நூல் மதிப்புரை

நூல் பெயர் : திருக்கழுக்குன்றத் திருத்தலப் பெருமை

நூலாசிரியர் : பி. வி. கிரி

நூலின் விலை: ரூபாய் 12.

நூல் வெளியீடு: திருமலைப் பதிப்பகம், பிளாக் : N-385, அண்ணா நகர் (கிழக்கு) சென்னை—600 102

72 பக்கங்கள் கொண்ட இந்நூலை, நூலாசிரியர்பக்திச்சுவை நனிசொட்டச்சொட்ட எழுதியுள்ளார். திருக்கழுக்குன்றம்பற்றியஅரிய வரலாறுகளைக் கற்போர் ஆவலைத் தூண்டும் வண்ணம் மிகச் சிறப்பாகப் படைத்துள்ளார். அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டிய சிறந்த தலபுராண நூலாகும்.



திருவையாறு ஐயாறப்பர் வாரவழிபாட்டுக் கழகத்தின் 33-வது ஆண்டு விழாவில் திருக்கோயில் ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் சிறப்புரையாற்றுகிறார். உடன் கழகத்தின் செயலர் அ. வடிவேலுபிள்ளை அவர்கள் உள்ளார்.

பல ஆண்டுகளுக்கு முன், திருக்கழுக் குன்றத்துக்குப் பக்கத்தில் உள்ள சதுரங்கப் பட்டணத்தில் இருந்த 'டச்சுக்காரரும், மேல் நாட்டினர் பலரும் இங்குள்ள கோயிலைப் பற்றியும், நாள்தோறும் வந்து போகும் கழுகுகள் பற்றியும் குறிப்புகள் எழுதி வைத் திருக்கின்றனர்.

கி.பி. 1681-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் தேதி அன்று, ஹாவட் என்னும் டச்சுக் காரர் ஒருவர், திருக்கழுக்குன்றத்துக்கு வரும் கழுகுகள் உணவு கொள்ளும் நிகழ்ச்சியினைத் தாமே நேரில் கண்டு வியந்ததாகத் தாம் எழுதிய நூல் ஒன்றில் விவரமாகக் குறிப்பிட் டுள்ளார்.

காலங்காலமாகக் கழுகுகள் வருவதா லேயே இத்தலத்திற்குக் 'கழுக்குன்றம்' எனப் பெயர் வழங்கலாயிற்று.

அருணகிரிநாதரும்,

'கழுகுதொழு வேதகிரி சிகரி வீறு
கதிர் உலவு வாசல் நிறைவானோர்
கடல் ஒலியதான மறைதமிழ்கள் ஓது
கதலிவன மேவு பெருமாளே!'

என்று தம் திருப்புகழில் இத்திருத்தலப் பெரு மையைப் பறைசாற்றினார்.

—இவ்வாறு திருக்கழுக்குன்றத் திருத்தலப் பெருமையைச் சொல்லிக் கொண்டே போக லாம்.

"திருவையாறு சென்று தொழ திருவோங்குமே"

கவிஞர் குழந்தை மகாலிங்கம்

அதிகமான பதிகமிகு
மதிகொண்ட நற்றமிழ்
இறையே வணங்குகின்றேன்
உமையே நல்வரமது அருளே!

அறையினுள் காற்று போல்
இறையவன் நிறைந்துளன் திரு
முறையதனை நலமுடன் பாடுவார்க்கு
நிறைவே நாளும் தந்தருள்வனே!

அருளும் பொருளும் ஆனந்தமும்
தருவானை
திருவாய் தன்னைத் தான் பூசித்த
தலைவனை
ஐயாறு அமர்ந்த புற்றீசன் தன்னை
கையால் தொழுது வாயாற வாழ்த்து
வனே!

அருள் கொடுக்கும் திருவையாறே
இசை வளர்க்கும் திருவையாறே
எல்லா வளமும் தரும் திருவையாறே
நஞ்சை சூழ் தஞ்சை தென்பால் கொண்டு
நல்வழி காட்டும் திருவையாறே!

திங்கள் முகம் கொண்ட அன்னை
திருவையாறு தனில் வாழும் மங்கை
திருமாலுருவம் கொண்ட நங்கை
திருவருள் பொழிவதில் கங்கையே!

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம், சென்னை-600002.



புரசைவாக்கம் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயத்தில் பக்தர் தனஞ்செயன் அவர்கள் நன்கொடையாகச் செய்து வழங்கிய திருத்தேரினை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை, எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., அவர்கள் வெள்ளோட்டம் செய்து வைத்தார்கள். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமிகு கா. ப. பட்டாபிராமன் அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அறங்காவலர் குழுத் தலைவர் திரு எம். நடராசன் அவர்கள் உடன் உள்ளார்கள்.





மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்துசமயத் திருத்தலங்களைக் கண்டு மகிழும் வகையில் மதுரையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் நாள்தோறும் சென்று வரக்கூடிய திருக்கோயில் சுற்றுலாவைத் தொடக்கி வைத்தார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் தலைமைச் செயலகத்தில் இவ்விழா சிறப்புடன் நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை, எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமிகு நாகூர் மீரான் மற்றும் அமைச்சர் பெருமக்கள், அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு ஆர். சந்தானம், இ.ஆ.ப., மற்றும் ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.